# உதயன்



www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 035 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 16 திங்கட்கிழமை (31/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## இனந்தெரியாதோரால் சஞ்சீவ பண்டார தாக்கப்பட்டார்

கொழும்பு, டிசெ. 31

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சஞ்ஜீவ பண்டார மீது இனந்தெரியாதோர் தாக்கு தல் நடத்தியுள்ளனர். தாக்கு தலுக்குள்ளான சஞ்ஜீவ பண் டார தற்போது றாகம வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

நேற்று அதிகாலை கள னிப் பல்கலைக்கழகத்துக் குச் இவர் சென்று கொண்டி ருந்தார். அப்போது பல்கலைக் கழக வளாகத்திலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து இவர் மீது இனந் தெரியாதோர் தாக்குதல் நடத் தினர்.

அண்மையில் இடம் பெற்ற விபத்தில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் நினைவுதின நிகழ்

பார்க்க பக்கம் 4

# 1,000 முன்னாள் போராளிகள் உன்னிப்பான கண்காணிப்பில்

## யாழ். கட்டளைத் தளபதி தகவல்



கொழும்பு, டிசெ.31

தாம் விடுதலைப் புலி கள் அமைப்பில் இருந்தார் கள் என்பதை மறைத்து புனர்வாழ்வு பெறாமல் நழு விய ஆயிரம் முன்னாள் போராளிகளை படைப் புலனாய்வுப் பிரிவினர் தற் போது உன்னிப்பாகக் கண் காணித்து வருகின்றனர். ஏனெனில் இவ்வாறானவர் களே வடக்கில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்க ளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

- இவ்வாறு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார் என்று 'சிலோன் ருடே' என்ற ஆங் கில இணைத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது வடக்கில் இடம்பெற்றுவரும் கைதுகள் தொடர்பாக இந்த இணையத் தளம் வெளியிட்டுள்ள யாழ். மாவட்ட இராணுவத்தளபதி யின் விளக்கத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஹத்துருசிங்க தெரிவித்த தாக குறித்த இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட தகவல்கள் வருமாறு:

இறுதிப் போரின்போது,

பார்க்க பக்கம் 4

2013 ஆம் ஆண்டுக்கான



நான்கு வர்ண நாள்காட்டி உள்ளே

# புலிகள் மீண்டும் தலைதூக்குவதாக அரசு சொல்வதில் உண்மையில்லை

## ஆணித்தரமாகச் சொல்கிறார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், டிசெம்பர் 31

தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கம் மீண்டும் தலை தூக்குவதாக அரசு கூறுவதில் எள்ளவும் உண்மையில்லை. இவ்வாறு தவறான கருத்தை உருவாக்கி அதன்மூலம் திரும்பவும் இருண்ட வாழ்வுக்குள் தமிழர்களை தள்ளுவதை அரசு நிறுத்த வேண்டும். அத்தோடு பல் கலைக்கழக மாணவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. அவர்கள் தங்க ளைத் தாங்களே கவனித்துக் கொள்வார்கள். தன்னுடைய இராணுவத்தின் இருப்பைத் தக்க வைப்பதற்காக அரசுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் மாணவர் கள் இறங்காதவாறு அவர்க ளுடன் தொடர்புடையவர்கள் பார்த்துக் கொள்ள வேண் டும்- இவ்வாறு தெரிவித்தார் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் தலைவர் வி.ஆனந்த சங்கரி.

தமிழர் விடுதலைக் கூட் டணியின் வருடாந்த பொதுச் சபை கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் முக்கிய மான தீர்மானங்கள் எடுக்கப் பட்டன. அவை வருமாறு:

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப் பினர்கள் சிலர் தான்தோன் றித்தனமாக முடிவுகளை



எடுத்து வருகின்றனர். இதனை அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கட்சி வலுவ டைய வேண்டுமெனில் கூட்

பார்க்க பக்கம் 4

## மணற்காட்டு கடலில் மூழ்கி மாணவன் சாவு

வடமராட்சி, டிசெ. 31

மணற்காட்டுக் கட லில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த மாணவனொருவன் நீரில் மூழ்கி உயிரிழந் தான்.

இந்தச் சம்பவம் நேற் றுக் காலை 9 மணியள வில் இடம் பெற்றுள் ளது.

மணற்காடு றோ.க. த.க. பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் வடமராட்சி கிழக்கு மணற்காட்டைச் சேர்ந்த அலோசியஸ் கயின்சன் (வயது-16) என்ற மாண வனே நீரில் மூழ்கி உயி ரிழந்துள்ளான்.

நடைபெற்று முடிந்த சாதாரண தரப் பரீட்சை யில் தோற்றிய கயின்சன் நேற்று சக நண்பர்களு டன் மணற் காட்டுக் கட லில் குளிக்கச் சென்றுள் ளான்.

அப்போது திடீரென எழுந்த கடல் அலை அவனை இழுத்துச் சென் றது. அலையில் சிக்கிய கயின்ஸனை, அவனது நண்பர்கள் மீட்டுப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை யில் சேர்த்தனர்.

பார்க்க பக்கம் 4

## மருத்துவர் சிவசங்கர் மாங்குளம் பொலிஸில்

யாழ்ப்பாணம், டிசெ.31

மருத்துவர் சிவசங்கர் பயங்கரவாதத் தடைச்சட்டத் தின் கீழ் கைது செய்யப் பட்டு, மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்பட்டுள்ளார். அவரை விடுவிக்குமாறு அரச மருத் துவ அதிகாரிகளின் கொழும் புத் தாய்ச் சங்கம் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக் கோனிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தத் தகவலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளைத் தலைவர் மருத்துவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் மருத்துவர் சிவசங்கர் கொக்காவில் இராணுவ முகாமுக்கு நேற்று முன்தினம் சென்றார். அங்கு அவர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் மாங்குளம் பொலிஸ் நிலை

பார்க்க பக்கம் 4

## பஸ் நடத்துநர் மீது நேற்றுத் தாக்குதல்; தனியார் பஸ்கள் பணிப்புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம், டிசெ. 31

இரண்டு தனியார் பஸ் களுக்கிடையிலான முரண் பாட்டின் எதிரொலியாக தனியார் பஸ் நடத்துநர் ஒருவர், உடைந்த போத்த லால் குத்தப்பட்டுப் படுகாய மடைந்தார். இந்தச் சம்பவத் தைத் தொடர்ந்து அச்சு வேலி, பருத்தித்துறை தனி யார் பஸ் சங்கங்களைச் சேர்ந்த பஸ்கள் திடீரெனப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இதனால் மாலையில் வடமராட்சி, அச்சுவேலிப் பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் தமது பயணத்தைத் தொடரமுடியாமல் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

இ.போ.ச. பஸ்களில் சனநெரிசலுக்கு மத்தியில் பயணிக்க வேண்டிய இக்கட் டான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

நேற்று அச்சுவேலி, பருத்தித்துறை சங்கங்க ளைச் சேர்ந்த இரண்டு தனி யார்பஸ்களுக்கிடையே முரண் பாடு எழுந்தது. இதனை யடுத்து அச்சுவேலி சங் கத்தைச் சேர்ந்த மினிபஸ் நடத்துநரான, ஆவரங் காலைச் சேர்ந்த சின்னையா பார்த்தீபன் (வயது-28) என் பவரின் வயிற்றில் உடைந்த போத்தலால் குத்தப்பட்டு படுகாயமடைந்தார். பின்னர் அவர் யாழ். போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட் டார்.

இதனையடுத்து யாழ்ப் பாணத்திலிருந்து பருத்தித்

பார்க்க பக்கம் 4

## காலவரையறையின்றி பஸ்களின் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ். மாவட்டத்தில் பணியில் ஈடுபடும் தனியார் பஸ்கள் இன்று தொடக்கம் காலவரையறையற்ற பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகத் தனியார் பஸ் சங்கங்கள் அறிவித்துள்ளன.

''ஆயினும், இதுபற்றி எமக்கு எதுவும் அறிவிக்க வில்லை, அறிவித்திருந்தால் பேசித் தீர்த்திருக்கலாம். வருட இறுதி நாளில் மக்கள் போக்குவரத்து அதிகரித் துள்ள நிலையில், முன் அறிவிப்பு மேற்கொள்ளப் படும் இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகள் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுவ தாகவே கருதுகிறேன். இது தவறான விடயம். அவர்கள் தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளனர்'' என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந் தரம் அருமைநாயகம் கருத் துத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிப்புறக் கணிப்புக் குறித்து யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பட்ட பஸ் கம்பனிகளின் இணையம் விடுத்துள்ள அறிக்

பார்க்க பக்கம் 4

# சிறுபான்மை மக்களின் உரிமைகளை என்றும் விட்டுக் கொடுக்க மாட்டோம்

## பேராளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

கொழும்பு, டிசெ.31

சிறுபான்மை இன மக்க ளின் உரிமைகளை உறுதிப் படுத்தும் வகையில் அதி காரப்பகிர்வைக் கொண்டுவருவதற்காகத் தொடர்ந்தும் அர்ப்ப ணிப்புடன் செயற்படவுள்ள தாகவும், மாகாணசபை முறைமையை இல்லா தொழிக்கவோ அல்லது அதைப் பலவீனப்படுத் தவோ அல்லது அதன் அதி காரங்களைக் குறைக்கவோ எடுக்கப்படும் எந்தவொரு முயற்சிக்கும் ஆதரவு வழங்குவதில்லை என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸின் 24ஆவது பேராளர் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் சனிக் கிழமை முஸ்லிம் காங்கி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மழை வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டு தரை வழிகள் துண்டிக்கப்பட்ட நிலையிலிருக்கும் மன்னார் முசலிப் பிரதேச மக்களுக்கு படகுகள் மூலமாக பொருள்களை அனுப்பிவைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. (க-12)

## உணவுப் பொதிகள்

அக்கராயன், டிசெ.31

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சிப் பிரதேச சபையினர் ஆகியோரின் ஏற்பாட்டில் பாடசாலையில் தங்கியுள்ள 45 குடும்பங்களுக்கு இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் பொதிகளை வழங்கி வைத்தனர். (க-18)

# அக்கராயன் குள வாய்க்கால் உடைப்பு; 575 ஏக்கர் நெற்பயிருக்குப் பாதிப்பு

## பெரும் நட்டத்தை எதிர்நோக்கும் விவசாயிகள்

*அக்கராயன்,டிசெ.31*

*அக்கராயன்குளத்தின் வாய்க்காலில் உடைப்பெடுத்துள்ளமையால் 575 ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக அக்கராயன் குளத்தின் வலது கரை வாய்க்கால் உடைப்பெடுத்துள்ளது. இதனால் கோணாவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள யூனியன்குளம் கிராமத்திலுள்ள பிரதான வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்ந்து செல்கின்றது. இந்த நீர் வயல் நிலங்களுக்கூடாகச் செல்வதால் வெள்ளம் நிறைந்து சுமார் 575 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 50 விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர் எனக் கோணாவில் திருவள்ளுவர் கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

மக்கள் இங்கு மீள்குடியமர்ந்த நாள் முதல் யூனியன் குளம் பிரதான வீதியில் மேம்பாலம் ஒன்றை அமைக்குமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இதற்கென 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேம்பாலம் அமைக்கும் வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

தற்போது வீதியைக் குறுக்கறுத்து வெள்ள நீர் பாய்ந்து செல்வதால் யூனியன்குள கிராம மக்களின் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் தான் அதிகளவாக 1034 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இதில் 500 குடும்பங்கள் யூனியன்குளம் கிராமத்தில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## உடுபுடைவைகளைத் தவிர்த்து ஏனைய அத்தியாவசிய பொருள்களை வழங்குக

**மன்னார், மாந்தை மேற்கு பிரதேச சபை செயலாளர்கள் கோரிக்கை**

மன்னார், டிசெ.31

மன்னாரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடுபுடைவைகள் தவிர்ந்த ஏனைய அத்தியாவசிய பொருள்களை வழங்குமாறு மன்னார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளின் செயலாளர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மன்னாரில் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், நோயாளிகள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் எனப் பலரும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தற்போது பால்மா வகைகள், பிஸ்கட், பெண்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் பொருள்கள், சவர்க்காரம், டெட்டோல் போன்ற தொற்று நீக்கும் திரவ வகைகள், மருந்து வகைகள் மற்றும் சிறுவர்கள் குழந்தைகளுக்கான உணவு வகைகள் என்பன தேவையாகவுள்ளன.

ஆகவே உதவ விரும்புபவர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு உடுபுடைவைகளைத் தவிர்த்து மேற்படி பொருள்களை வழங்கியுதவினால் பெரிதும் உபயோகமானதாக இருக்கும் என்று மன்னார் பிரதேச சபைச் செயலாளர் சி.எம்.யேசுநேசன், மாந்தை மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சாம்சோன் ஜெனிங்ஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (க-50)

# சிறார்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளை வழங்குங்கள்

**மகாதேவா சைவச் சிறார் இல்லத் தலைவர் வேண்டுகோள்**

கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லத்தில் தங்கியுள்ள சிறார்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு அந்த இல்லத்தின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் தற்போது 323 சிறார்கள் தங்கியுள்ளனர்.எதிர்வரும் இரண்டாம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன. இந்த நிலையில் இப்பாடசாலை செல்லும் சிறார்களுக்கான கல்வி உபகரணங்களை வழங்கி உதவ பரோபகாரிகள் முன்வரவேண்டும் என மகாதேவா சைவச் சிறார் இல்லத் தலைவரும் கிளிநொச்சி முன்னாள் அரச அதிபருமான தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். தற்போது 177 பெண்களும், 146 ஆண்களுமாக மொத்தம் 323 சிறுவர்கள் இந்த இல்லத்தில் வசித்து வருகின்றனர்.

இவர்களின் அடிப்படைக் கல்வி தேவைக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள், சீருடைகள், உள்ளாடைகள், பாடசாலைப் பைகள் என்பன பெரும் எண்ணிக்கையில் தேவையாகவுள்ளன.

எனவே போரினால் பாதிக்கப்பட்ட இந்தச் சிறார்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு அனைத்து அன்புள்ளங்களும் உதவ முன்வரவேண்டும்.

கடந்த காலங்களில் இக்கட்டான சூழலில் பல்வேறு உதவிகள் வழங்கிய பல அன்புள்ளங்களுக்கு நன்றி கூறுகின்ற அதே வேளை புதிய ஆண்டில் கல்விப் புலத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும் மாணவச் செல்வங்களுக்கு கல்விக்கான உதவிகளை வாரி உதவுங்கள் எனவும் சைவச் சிறார் இல்லத் தலைவரான தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-50)

## கல்வி நிலையத்தின் திறப்பு விழா

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மாலை நேர கல்வி நிலைய திறப்பு விழா கடந்த 27 ஆம் திகதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து கொண்டு கல்வி நிலையக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கிளிநொச்சி மீள் எழுச்சித் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் என்.விஜயகிருஷ்ணன், கிளிநொச்சி அரச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே 2 மாடிகளைக் கொண்ட இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது மாடியில் மாலை நேர வகுப்புகள் நடைபெறுகின்றன. மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 6 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-18)

# நானாட்டானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அமைப்பினரால் உதவிகள்

மன்னார், டிசெ.31

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்கவென பல அமைப்புகளும் தம்மாலான உதவிகளை வழங்கி வருவதாக நானாட்டான் பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாள்களில் நானாட்டான் பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து பொது மக்களிடம் சேகரித்த பணத்தின் மூலம் சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பால் மாவகைகள், ரின் மீன் உட்பட பல்வேறு வகையான பொருள்களை முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கியுள்ளார்கள்.

மன்னார் வர்த்தக வங்கியால் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மன்னார் சுவிஷேச ஐக்கிய சபையால் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலைகள் மற்றும் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதை விட வேள்ட் விஷன் போன்ற அமைப்புகளும் தேவைக்கு ஏற்ப பொது மக்களுக்கான உதவிகளை வழங்கி வருகின்றன.

மேலும் முசலி மற்றும் நானாட்டான் சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகள் உலர் உணவு அல்லாத பொருள்களை வழங்கியதுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னர் கிளையும் உதவிகளை வழங்கியுள்ளது. அத்துடன் அருட்சகோதரர்கள் மற்றும் மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோரும் உதவிகளை வழங்கியுள்ளனர்.

தற்போது மழையின் தாக்கம் குறைவடைந்துள்ளமையால் இன்னும் இரண்டொரு நாள்களில் குறிப்பிட்டளவு மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-86)

# பாதிக்கப்பட்ட முசலி மக்களுக்கு படகுகளில் உணவு விநியோகம்

மன்னார், டிசெ.31

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் சவுத்பார் மற்றும் வங்காலை கடற் பிரதேசத்தின் ஊடாக 35 படகுகளில் எடுத்துச் செல்லப்பட்டன.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடை மழை மற்றும் குளங்கள் உடைப்பெடுத்ததன் காரணத்தால் முசலியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டதாக முசலி பிரதேச சபை தலைவர் எஹியான் தெரிவித்தார்.

இவ்வாறு பாதிப்புக்குள்ளான மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியிருந்தார்.

மேலும் முசலி பிரதேசத்துக்கான அனைத்து பாதைகளும் துண்டிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து 25 ஆயிரம் கிலோ உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை நிலத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ள குஞ்சுக்குளம் மாதா கிராம மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை படகுகள் மூலம் கொண்டு செல்ல உரிய ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் பிரதேச சபை தலைவர் எஹியான் மேலும் கூறினார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஞானராஜ் சோசை, மன்னார் நகர சபை உறுப்பினர் நவுசீன், அமைச்சரின் பிரத்தியேக செயலர் றிப்கான் பதியுதீன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுகதபால ஆகியோரும் இந்த நிவாரண பொருள்களை அனுப்பும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமைகளில் 'கிளினிக்' நடக்கும்

தென்மராட்சி,டிசெ.31

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட பெண்களுக்கான கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் தொடர்பான கிளினிக் பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு மருந்து வந்தது

வடமராட்சி, டிசெ.31

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு புதிதாக மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன.

நீண்டகாலமாக மருந்து வகைகள் இன்மையால் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் கடந்த சில மாதங்களாக ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். தற்போது தேவையான மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-8)

## ஏ-9 வீதி விபத்தில் சிக்கி மூவர் காயம்

தென்மராட்சி, டிசெ.31

ஏ-9 வீதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த மூவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தையும் மகனும் வாகனத்தில் மோதுண்டு காயமடைந்தனர். கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தைச் சேர்ந்த செல்லத்தம்பி யோகேஸ்வரன் (வயது-43), அவரது மகனான யோகேஸ்வரன் கேதீஸ்வரன் (வயது-13) ஆகிய இருவரும் வாகனமொன்றில் ஏற்றி வரப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கனடாவிலிருந்து வந்த உறவினர்களைப் பார்க்க யாழ்ப்பாணம் வந்த முருங்கன் 12 ஆம் கட்டையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் விஜயபாலன் (வயது-43) என்பவர் நேற்று வீதியில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கி தூக்கி வீசப்பட்டதில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)



25 வருடங்கள் உள்ளூராட்சி சேவையில் மிகச் சிறந்த பணியாற்றிய வலி.மேற்கு பிரதேச சபையின் நலன்புரி சங்க தலைவரும் சிரேஷ்ட நூலகருமான நாகலிங்கம் அருணகிரிநாதன் சிறந்த உள்ளூராட்சி சேவையாளன் என்ற சிறப்புப் பட்டமும் விருதும் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி எஸ். தயேஸ்வினால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ம-41)

## ஆவணப்பதிவு, குடியியல் பதிவுகளுக்கு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன

### மேலதிக பதிவாளர் நாயகம் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 31

பதிவாளர் நாயகத் திணைக்களத்தால் ஆவணப்பதிவு மற்றும் குடியியல் பதிவு உட்பட சில பதிவுகளுக்குமான பதிவுக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்துக்கு அமைவாக அதிகரிக்கப்பட்டுள்ள இந்தப் பதிவுக் கட்டண முறைமை நாளைமுதல் அமுலில் இருக்கும் என்று பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் மேலதி பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2013 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்துக்கு அமைவாக பதிவாளர் நாயக திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் சில பதிவுகளுக்கான கட்டணங்கள் நாளைமுதல் அதிகரிக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக ஆவணப் பதிவுகளில் உறுதி பதிவு செய்வதற்குத் தற்போது அறவிடப்படும் பதிவுக் கட்டணங்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு ஆவணத்துக்கும் நூறு ரூபாவும், இரண்டு வருடங்களுக்கு அல்லது அதற்குக் குறைந்த காலத்துக்கான கேவியற் பதிவு செய்வதற்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், உறுதிப் பிரதி ஒன்றுக்கு 500 ரூபாவும், உறுதி ஒன்றை பரிசீலிப்பதற்கு 500 ரூபாவும், காணிப்பதிவேட்டுப் பிரதி ஒன்றுக்கு (ஒரு காணி தொடர்பான அனைத்து பிரதிகளுக்கும்) 500 ரூபாவும், காணிப் பதிவேடு பரிசீலிப்பதற்கு (ஒரு காணி தொடர்பான அனைத்து பதிவுக்கும்) 500 ரூபாவும், அற்றோணித் தத்துவம் பதிவு செய்வதற்கு ஆயிரத்து 500 ரூபாவும், அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்வதற்கு ஆயிரத்து 500 ரூபாவும், அற்றோணித் தத்துவப் பிரதி ஒன்றைப் பெறுவதற்கு 500 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படவுள்ளது.'

பிறப்பு, இறப்பு, விவாகம் உட்பட குடியியல் பதிவுகளுக்கு கட்டணங்களாக பதிவு இலக்கம், பதிவுத் திகதி தெரியவரின் பிரதி ஒன்றுக்கு 100 ரூபாவும், இரு வருடங்களுக்குக் குறையாத தேடுதலுடன் பிரதி ஒன்றுக்கு 200 ரூபாவும், காலங்கடந்த பிறப்பு, இறப்பு பிரதிக்கினைக்கு 50 ரூபாவும், பிறப்புச் சான்றிதழ்களில் திருத்தம் செய்யும் பிரதிக்கினைக்கு 50 ரூபாவும், விவாகப், பிறப்பு, இறப்புச் சான்றிதழ் மொழி பெயர்ப்பு பிரதி ஒன்றுக்கு 500 ரூபாவும், விவாக அறிவித்தலுக்கு 100 ரூபாவும், பதின்னான்கு நாள்களுக்குள் பதிவு செய்வதற்கான விசேட அனுமதிக்கு 100 ரூபாவும், மணமகளின் வீட்டில் அல்லது பொது இடத்தில் பதிவு செய்வதற்கான அனுமதிக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும், பதிவாளர் அலுவலகத்துக்கு வெளியே திருமணப் பதிவு செய்ய பாதிவாளருக்கு ஆயிரத்து 500 ரூபாவும், பதிவாளர் அலுவலகத்தில் திருமணப் பதிவு செய்வதற்கு பதிவாளருக்கு 750 ரூபாவும், தேவாலயத்தில் பதிவு செய்யும் திருமணங்களுக்கு 750 ரூபாவும் கட்டணங்களாக அறவிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-14,4)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

தென்மாட்சி, டிசெ.31

சாவகச்சேரி பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினர் சங்க கல்வி அபிவிருத்தி நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

சங்கத்தின் பணியாளர்கள் அங்கத்தவர்கள் ஆகியோரின் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை விரைவில் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் கல்வி அபிவிருத்தி நிதியிலிருந்து வருடாந்தம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, உயர் தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்திபெறும் சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் மற்றும் ஊக்குவிப்பு நிதி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## நயினாதீவுப் பிரதேசத்துக்கு மீண்டும் சுழற்சிமுறையில் மின்

நயினாதீவு பிரதேசத்துக்கு மீண்டும் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது காலநிலை வேறுபாட்டால் மின்பிறப்பாக்கிகளுக்குரிய டீசலை கொண்டு செல்வதில் நெருக்கடி நிலவுகிறது. இதனால் மின் விநியோகத்தில் தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இரவில் மட்டும் இந்த மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது. பகலில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது.

கடல் மார்க்கமாக டீசல் கொண்டு செல்லப்பட்டதும் வழமைபோல் 24 மணி நேரம் மின் விநியோகிக்கப்படும் என்று கூறப்பட்டது.

மின் விநியோகம் இந்த வாரத்தில் சீராகிவிடும் என்றும் கூறப்பட்டது. (ம-17)

## புனரமைப்பு எதுவுமின்றி ஊர்காவற்றுறை வீதி

யாழ்ப்பாணம்,டிசெ.31

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக சுருவில் ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை.

வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளருக்கு இது விடயமாகப் பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டது என்று வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

சுருவில் - ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பு இன்றி உள்ளது.

இதனால் போக்குவரத்து மிக கஷ்டமானதாக மாறிவிட்டது.

இன்னும் சில மாதங்களில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிக்கும் நிலை உருவாகும்.

யாழ். செயலக மற்றும் நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் இந்த விடயம் யாழ். அரச அதிபர் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

2013 ஜனவரி மாதத்திலாவது இந்த வீதியை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வீதி அபிவிருத்தித் திணைக்களம் முன்வரவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-50)

## 5 ஆண்டு காலப் பகுதியில் நெடுந்தீவு சுற்றுலா மையமாகும்

யாழ்ப்பாணம்,டிசெ.31

நெடுந்தீவு பிரதேசம் 2013-2017 ஆகிய 5 ஆண்டு காலப் பகுதியில் நவீன சுற்றுலாமையமாக மாற்றப்படவுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியன இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

அத்துடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்து நெடுந்தீவு பிரதேசத்தை நவீன சுற்றுலாத் தலமாக மாற்றி அங்கு உல்லாசப் பயணிகளை கவருவதற்கு அங்கு அவர்களை வரழைத்து உள்ளூராட்சி சபைகளின் உரிமாணத்தை அதிகரிப்பதற்குமான திட்டத்தை முன்வைக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார்.

இதேவேளை, மண்டைதீவு, குருசுத்துதீவு, சிறுத்தீவு அபிவிருத்தி குறித்தும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பல்வேறு சுற்றுப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்

கர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியன இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

டுள்ளார்.

இதேவேளை நெடுந்தீவு, மண்டைதீவு சுற்றுலா மையம் குறித்த எண்ணக்கரு பத்திரங்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

சிறந்த முதலீட்டாளர்களின் எண்ணக்கருப் பத்திரங்களை மட்டும் பரிசீலித்து 2013 ஜனவரியில் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விடயம் குறித்து விரைவில் வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், அரச அதிபர், உள்ளூராட்சி சபை தலைவர், செயலாளர்களை அழைத்து பேசவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ம-41)

## சுற்றுலாத் துறையினருடன் இணைய ஆர்வமுடையோர் இணையலாம்

யாழ்ப்பாணம், டிசெ.31

சுற்றுலாத்துறை ஊடாக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள ஆர்வமுடைய முதலீட்டாளர்கள் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளலாம்.

சுற்றுலாத்துறையூடாகத் தமது முதலீட்டை அபிவிருத்தி செய்யமுடியும்.

வடமாகாண சுற்றுலாத் துறை ஒன்றியத்தின் தலைவர் ரி.வை. சுந்தரேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 2 மாதகாலமாக வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுற்றுலா ஒன்றியம் இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது.

இந்த ஒன்றியத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த எவரும் முதலீட்டாளர்களாக இணைந்து கொள்ளமுடியும்.

ஒன்றியத்தில் இணைவதற்கு தரகர்கள் எவரையும் நாடவேண்டிய அவசியம் இல்லை. 021-321-6434 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ, ஒன்றிய முகவரியுடனோ தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக இணைய முடியும்.

சாதாரணமாக ஒரு வாகனத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர் உட்பட உணவகங்கள், ஹோட்டல்கள், தங்குமிட வசதிகள் பெற்றுக் கொடுப்போர் என சுற்றுலாத் துறையினர் பயன்படுத்தக் கூடிய முதலீடுகளை வைத்திருக்கக்கூடிய முதலீட்டாளர்கள் ஒன்றியத்தில் அங்கத்தவர்களாக இணைய முடியும்- எனவும் தெரிவித்துள்ளார். (ம-14)

வடமாகாணத்தைச் சேர்ந்த எவரும் முதலீட்டாளர்களாக இணைய முடியும்



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை நடத்திய திருவாசக விழாவில் மாணிக்கவாசகர் சுவாமிகளின் திருவுருவப்படமும் திருவாசக ஏடுகளும் சந்நிதி கோயிலில் இருந்து எடுத்துவரப்பட்டபோது சந்நிதியான் ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் சி.மோகனதாஸ் சுவாமிகள் பஞ்சாலத்தி காட்டுகிறார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனந்தெரியாதோரால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகச் செல்லும்போதே இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் தொடர்பாக றாகம பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது என்று சஞ்ஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

(ஐ-16)

## மருத்துவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மருத்துவர் சிவசங்கரை அவரது மனைவியும், சில மருத்துவர்களும் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

''எனது கணவரை பொலிஸார் விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர். இன்று (ஞாயிற்றுக்கிழமை) முழுவதும் அருகிலேயே நானிருந்தேன். குறுகிய நேரம் மட்டுமே அவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட் டார். தன்னை பொலிஸார் நல்லவிதமாக நடத்துவதாகவும், எந்தவித துன்புறுத்தலுக் கும் தான் ஆளாகவில்லையென்றும் எனது கணவர் கூறினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதால் அவரை சட்ட நடவடிக்கைகளின் பின்னரே விடுவிக்க முடியுமென்று பொலிஸார் என்னிடம் கூறினர்'' - இவ்வாறு மருத்துவர் சிவசங்கரின் மனைவியும் மருத்துவருமான சி.திருமகள் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதேவேளை மருத்துவர் சிவசங்கரின் தாயாரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அங்கு மருத்துவர் சிவசங்கர் குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர் என்று தெரியவருகிறது.

(ஈ)

## புலிகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தாம் எடுக்கும் முடிவு கள் தங்கள் கட்சியை சார்ந்ததா அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பினை சார்ந்தா என்பதை தெளிவுபடுத்த வேண் டும்.

சிறுபான்மை இனத்தவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை, வன்முறையின்றி பேச்சுவார்த்தை மூலமும், இணக்கப்பாட்டுடனும், சமாதானமாகவும் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களுடன் மட்டுமல்லாது ஏனைய இன மக்களுடனும், பல்வேறு இன, மத குழுக்களுடனும் நல்லுறவைப் பேணி வருகிறது. இலங்கை வாழ் அனைத்து மக்களையும் சமாதானத்துடனும், ஜனநாயக மனிதாபிமான அடிப்படையில் உரிமைகளை அனுபவிக்க உத்தரவாதமளிக்க வேண்டுமென்றும் அரசை வலியுறுத்துகின்றது.

விடுதலைப் புலிகள் தலைதூக்குகிறார்கள் என்ற அரசின் குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லை. அவ்வாறு தெரிவித்து மக்களைத் தொந்தரவு செய்து மீண்டும் இருண்ட வாழ்வுக்குள் செல்வதற்குரிய வழிமுறைகளை ஏற்படுத்துவதை அரசு நிறுத்த வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டிய அவசியமில்லை. மாணவர்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளக்கூடிய தகுதியுடையவர்கள். மாணவர்களுடன் சம்பந்தப்பட்ட எவரும் அரசு இராணுவத்தை தொடர்ந்து வைத்திருக்கவும், நியாயப்படுத்தவும், வாய்ப்பளிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. அதிகாரப் பகிர்வின் மூலமே நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும். இந்தக் கருத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதியாக உள்ளது. - என்பன போன்ற விடயங்கள் அந்தத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஈ)

## மணற்காடு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எனினும் அவன் அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பிரதேச மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ-16-8)

## 1,000...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் படையினரிடம் சரணடைந்திருந்தார்கள். அவர்கள் புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டனர். தொழில் பயிற்சியும், புனர்வாழ்வும் வழங்கப்பட்ட பின்னர் அவர்கள் சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டனர்.

ஆனால் தாம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்ததைச் சிலர் மறைத்து புனர்வாழ்வு பெறுவதில் இருந்து நழுவி விட்டார்கள்.

படையினரின் கண்களில் இருந்து தப்பிய இவர்கள் பொதுமக்களோடு பொதுமக்களாக நலன்புரி நிலையங்களுக்குச் சென்று விட்டனர். இவ்வாறு நழுவியவர்களே வடக்கில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

எனவே இவர்க ளின் நடவடிக்கைகளை படைப் புலனாய்வாளர்களும், பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரும் கண்காணித்து வருகின்றனர்.

இதன் அடிப்படையிலேயே குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 48 பேர் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவரும் இந்த முன்னாள் போராளிகள் விரைவில் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்படவுள்ளனர்.

இதேவேள்ள, வடக்கில் ஆயிரம் முன்னாள் போராளிகளை இன்னமும் படைப் புலனாய்வாளர்களும், பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரும் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.- என்று ஹத்துருசிங்க தெரிவித்தார் என்று 'சிலோன் ருடே' தகவல் வெளியிட்டுள்ளது.

(ஈ)

## பஸ் நடத்துநர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பருத்தித்துறை சங்கத்தைச் சேர்ந்த பஸ்ஸை நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலை அண்மித்தபோது, அச்சுவேலியிலிருந்து மினிபஸ்ஸில் வந்திறங்கிய 20 பேர் கொண்ட குழுவினர் பருத்தித்துறை சென்றுகொண்டிருந்த பஸ்ஸின் சாரதியையும், நடத்துநரையும் தாக்கியுள்ளனர்.

இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். இந்த இரு தாக்குதல் சம்பவங் களையும் கண்டித்துக் குறித்த சங்கங்க ளச் சேர்ந்த தனியார் பஸ்களின் சாரதிகளும் நடத்துநர்களும் திடீரென பணிப்புக்கணிப்பில் குதித்தனர்.

எந்தவித முன்னறிவித்தலுமின்றி மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிப்புறக்கணிப்பால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

புதுவருடத்தை முன்னிட்டு நேற்று அதிகளவான மக்கள் வடமராட்சி, அச்சுவேலிப் பகுதிகளில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நகருக்கு வந்திருந்தனர். இவர்களே இந்தப் பணிப்புறக்கணிப்பால் அதிகம் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. மக்களின் நலன் குறித்து எந்தவித அக்கறையும் எடுக்காமல் தமது தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக இவ்வாறு தனியார் பஸ்கள் திடீர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவது நியாமற்றது என்று பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர். (ஈ-4-8-14)

## காலவரையறை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை மற்றும் அச்சுவேலிப் பகுதிகளுக்கு இணையத்தினால் நேரக்கணிப்பாளர்களை நியமித்து நேரஅட்டவணை தயாரித்துப் பணியில் ஈடுபட்டுவந்தோம்.

பின்னர் பருத்தித்துறைச் சங்கம் இணையத்திலிருந்து பிரிந்து தனியாக இயங்க ஆரம்பித்தது. அதனால் அரச அதிபரினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரக்கணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். சில மாதங்களாகப் பருத்தித்துறைச் சங்கத்துக்கும், அச்சுவேலிச் சங்கத்துக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டு அவை கைகலப்பு வரை சென்றன. கடந்தவாரம் அச்சுவேலிச் சங்கத் தலைவர் கடமையில் இருந்தபோது, பருத்தித்துறைச் சங்க பஸ் சாரதி ஒருவர் அவரைத் தாக்கியுள்ளார். நேற்றைய தினமும் முரண்பட்டு பருத்தித்துறைச் சங்கப் பஸ் நடத்துநர் ஒருவர் அச்சுவேலிச் சங்க பஸ் நடத்துநருக்கு உடைத்த போத்தலால் வயிற்றில் குத்திக் காயம் விளைவித்துள்ளார்.

இந்த முரண்பாடு தொடர்பாக யாழ். அரச அதிபருக்கும் உரியவர்களுக்கும் முன்னரும் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சங்கங்கள் ஒன்றாக இயங்குவதற்கு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொடர்ந்தும் இந்தப் பிரச்சினை நீடிப்பதால் எதிர்காலத்தில் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கமுடியாத நிலை ஏற்படும். எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வரை இன்று திங்கட்கிழமை தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம்'' என்றுள்ளது.

''இன்று வருட இறுதிநாள் என்பதால் மக்கள் நகருக்கு வந்துசெல்வது அதிகமாக இருக்கும். தேவைகள் அதிகம் என்பதால் இன்று பணிப்புறக்கணிப்புச் செய்தால் மக்கள் பாதிக்கப்படுவார்களே?'' என்று நாம் இணையத் தலைவர் பொ.கெங்காதரனிடம் தொடர்பு கொண்டு கேட்டோம்.

அதற்குப் பதிலளித்த அவர் ''மக்கள் பாதிக்கப்படுவர்கள் என்பதற்கப்பால், எமது பிரச்சினைகள் மக்களுக்குத் தெரிய வேண்டும். திட்டமிட்டபடி இன்று பணிப்புறக் கணிப்பு நடந்தே தீரும். அரச அதிபரையும் சந்திப்போம்.'' என்றார்.

இதேவேளை,

பருத்தித்துறை - யாழ். சேவையிலீடுபடும் தமது பஸ்கள், சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் பயணிகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கும்வரை இன்று தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக பருத்தித்துறை தனியார் பஸ் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர், சட்டநாதர் சிவன் கோயிலை அண்மித்து, எமது சங்க பஸ் ஒன்று பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அப்போது அச்சுவேலியிலிருந்து பஸ்ஸில் வந்திறங்கிய 20 பேர் கொண்ட குழுவினர் எமது சங்க பஸ் நடத்துநரையயும், சாரதியையும் வழிமறித்துத் தாக்கினர். அவர்கள் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தொடர்ந்து பருத்தித்துறையிலிருந்து யாழ். நோக்கிச் சென்ற எமது சங்க பஸ்ஸை அச்சுவேலி, நாவற்காடுப் பகுதியில் தடை போட்டு சிலர் தடுத்து வைத்தனர். அந்த பஸ்ஸில் இருந்த சாரதி, நடத்துநர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பயணிகளும் தமது பயணத்தைத் தொடர முடியாது தடுமாறினர். இதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து வல்வெட்டித்துறை ஊடாகச் சென்று கொண்டிருந்த 751 வழித்தட பஸ் வண்டியின் சாரதி, நடத்துநர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான தொடர்ச்சியான தாக்குதல்கள் காரணமாக எமது சங்க பஸ்களில் பயணிக்கும் பயணிகளுக்கும், சாரதிகள், நடத்துநர்கள் என்போருக்கும் பாதுகாப்பற்ற அச்சமான சூழ்நிலை தோன்றியுள்ளது. எனவே எமது பஸ்களினதும், பயணிகளினதும், சாரதிகள், நடத்துநர்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தும்வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம்.- என்றுள்ளது.

(ஈ-4-8-14-11)

## சிறுபான்மை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் இந்த மாநாடு தெஹிவளையில் இடம் பெற்றது.

இந்த மாநாட்டில் எட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த எட்டுத் தீர்மானங்களும், அத்தீர்மானங்களுடன் இணைந்த மேலும் சில விடயங்களும் வெளியிடப்பட்டன.

இலங்கை நாடு அனைத்து சமூக மக்களும் ஐக்கியமாக வாழக்கூடிய பிரிக்கப்படாத நாடாகும். திருப்திகரமான அதிகாரப் பகிர்வின் ஊடாகத் தீர்மானம் மேற்கொள்வதிலும் அரச அதிகாரத்துக்குச் செல்வதற்கும் அவர்களுக்கு சம உரிமை உண்டு என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுதிப்படுத்துகிறது.

அதிகாரப்பகிர்வின் ஊடாக ஒவ்வொரு பிரஜைக்குமான சுயாட்சியை உறுதிப்படுத்தி மாகாணசபை முறைமை ஆக்கபூர்வமானதாக ஆக்கப்படவேண்டும் என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எப்போதுமுள்ள நிலைப்பாடாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபைத் தேர்தல்கள் அனைத்திலும் போட்டியிட்டிருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை எட்டும் நோக்கில் இலங்கைஅரசு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் பங்குபற்றியுள்ளது.

தற்போது பரவலாக மேற்கொள்ளப்பட்டுவரும் சமயரீதியான சகிக்கமுடியாத நிகழ்வுகளையும், மாகாணசபை முறைமையைப் பலவீனப்படுத்துவதற்கும் அதை இல்லாமல் செய்வதற்கும் பல சக்திகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளையும், இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்தும் விடயத்தில் குறைந்தளவு கவனம் செலுத்துவதையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்காணித்துவருகிறது. இவற்றில் ஆழமாக அக்கறை செலுத்தியுள்ளது.

ஆகவே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னுரிமை விடயமாக கீழ்வரும் எட்டு விடயங்களில் தீர்மானங்களை மேற்கொள்கிறது.

1. சமயங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அனைத்து மதங்களினதும், அந்த மதங்களின் வணக்கஸ்தலங்களினதும், ஏனைய வழிபாடுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கை அரசுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும்.

2. அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்குத் தேவையான அதிகாரப்பகிர்வை நோக்கிய எமது அர்ப்பணிப்பை நாம் மீண்டும் ஒரு தடவை இந்த எமது 24 ஆவது மாநாட்டில் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

3. முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபைகளுக்கு அதிகமாக அதிகாரத்தை வழங்குவதற்காகத் தமது செல்வாக்கைத் தொடர்ந்து பயன்படுத்தும். தற்போதைய மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்கவோ அல்லது பலவீனப்படுத்தவோ அல்லது இந்த மாகாணசபை முறைமைக்குப் பதிலாக வேறொரு கட்டமைப்பைக் கொண்டு வரவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அவற்றை நாம் கடுமையாக எதிர்ப்போம்.

4. அதிகாரப்பரவலாக்கல் நடவடிக்கையை அழிக்கும் எந்தவொரு முயற்சிகளையும் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும். அனைத்து இன மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்காக நாம் ஆதரவாக நிற்போம்.

5. மாகாணசபைகளின் தற்போதைய அதிகாரங்களை சிதைப்பதற்கான எந்தவொரு சட்டமூலத்தையும் நாம் எதிர்ப்போம்.

6. யுத்தம் முடிந்து 43 மாதங்கள் கடந்துவிட்டபோதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளைப் பொருத்தமான முறையில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்காமையிட்டு நாம் ஆழ்ந்த கவலையடைகிறோம்.

அகதிகளை மீள்குடியமர்த்துவது தொடர்பில் அரசு தேசிய கொள்கை ஒன்றை வகுத்து நடைமுறைப்படுத்தவேண்டும். அதேபோல், இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் உள்ள வடக்கு முஸ்லிம்கள் சுலபமாக மீள்குடியமர்வதற்காகப் பொருத்தமான - பாதுகாப்பான சூழலை அரசு உருவாக்கவேண்டும். அத்தோடு, அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்.

7. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு நாம் அரசிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

8. இலங்கை அரசு பலஸ்தீன மக்களுடனான உறவைப் பலப்படுத்தி காஸாவில் அமைக்கப்படும் இஸ்ரேலின் சட்டவிரோத குடியிருப்புகளை அகற்றுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். - என்பனவையே அந்த எட்டுத் தீர்மானங்களுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும்

## துரைரெட்ணம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,டிசெ.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இடர் முகாமைத்துவ அமைச்சரிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் இடர்முகாமைத்துவ அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மட்டக்களப்பில் இரண்டு வாரங்களுக்கு மேலாகப் பெய்த அடைமழை, வெள்ளம் காரணமாக பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் 63 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

800 இற்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

20ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற் செய்கை நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.

சில இடங்களில் மழையுடன் கூடிய மினி சூறாவளி வீசியதால் களுவாஞ்சிக்குடி, ஓந்தாச்சிமடம், குறுமன்வெளி, மகிழூர், நாவற்குடா, கோப்பாவெளி போன்ற கிராமங்களில் முழுமையாகவும், பகுதியாகவும் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் காரணமாக குளங்கள் திறந்துவிடப்பட்டதால் பாலங்கள் வெள்ள நீரில் மூழ்கின.

வெள்ளநீர் வீடுகளுக்குள் சென்றதால் வீடுகளில் சேமிக்கப்பட்டிருந்த நெல் மூடைகள், அரிசி உட்பட பல்வேறு தானியங்கள் பழுதடைந்துள்ளன.

மேட்டு நில விவசாய பயிர்செய்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. சில இடங்களில் வீட்டுப் பாவனைப் பொருள்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளன.

மீன்பிடி தொழில் உபகரணங்கள் சில இடங்களில் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பெய்த மழையாலும், கடல் கொந்தளிப்பாலும் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை.



கூலித் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு அவர்களது நாளாந்த வருமானமும் தடைப்பட்டுள்ளது.

போக்குவரத்து பாதைகளில் சேதம் ஏற்பட்டுள்ளது.அதனால் பஸ்போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே அந்தச் சூழ்நிலைகள் காரணமாக மட்டக்களப்பில் வறுமை தலைதூக்கி உள்ளது. எனவே பாதிக்கபட்ட பகுதிகளுக்கு நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவின் பிரதிகள் கிழக்கு மாகாண முதலமைச்சர், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச)

## விபத்தில் அறுவர் காயம்



மட்டக்களப்பு,டிசெ.31

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, மாங்காடு பிரதான வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் அறுவர் காயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த நிலையில் இருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும், ஏனையோர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்த விபத்து பிக்கப் வாகனம் தொலைபேசிக் கம்பத்துடன் மோதியதில் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை நிபந்தனை இன்றி விடுதலை செய்க

## காரைதீவு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேறியது

அம்பாறை,டிசெ.31

*தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் நிபந்தனைகள் எதுவும் இன்றி விடுதலை செய்ய வேண்டும். யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கைதுகளை நிறுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*



இவ்வாறு அரசைக் கோரும் தீர்மான மொன்றை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் செல்லையா இராசையா தலைமையில் , சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே குறித்த தீர்மானம் தொடர்பான பிரேரணையை செல்லையா இராசையா முன்மொழிந்ததுடன், சபையில் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

அந்தப் பிரேரணையை முன்மொழிந்து தலைவர் இராசையா தெரிவித்ததாவது:-

வடக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் கவலையளிக்கும் விடயமாகும்.

இராணுவ அடக்கு முறைக்குள் வடபகுதி மக்கள் படும் பெரும் இன்னல்கள் இந்த நாட்டில் நல்லிணக்க செயற்பாடுகளை அஸ்தமிக்கச் செய்யும் விடயமாகவே அமைந்துள்ளது.

தமது ஜனநாயக உரிமையிலான செயற்பாட்டை முன்னெடுத்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை அத்துமீறிப் பிரவேசித்த இராணுவம் அடாவடித்தனம் புரிந்து தாக்கிய சம்பவம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

அதேவேளை நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது விடுதலை கேள்விக்குறியாகியுள்ளது.

புனர்வாழ்வு என்ற போர்வையில் அந்த மாணவர்களைச் சட்டத்துக்கு முரணாக தடுத்து வைத்திருப்பது விசனிக்கத்தக்க விடயமாகும்.

எனவே தடுத்துவைக்கப்பட்டுள்ள மாணவர்களை எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்ய வேண்டும் என நாம் அரசை வலியுறுத்துகிறோம்.

அதேவேளை வடக்கில் இராணுவக் கெடுபிடிகள், கைதுகளை நிறுத்தி மக்கள் கொண்டுள்ள அச்ச சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

சமாதானமும், சிவில் நிர்வாகமும் நிலுவுவதாகத் தம்பட்டமடிக்கும் அரசின் ஆட்சியின் கீழ்தான் சிறுபான்மை மக்கள் அத்தனை அவலங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதற்கெல்லாம் விடிவு காலம் கிடைக்க வேண்டும். அரசு சிறுபான்மை மக்களுடனான நல்லெண்ண செயற்பாடுகளை வெளிக்காட்ட வேண்டும்-என்றார். (ச-30)

# உள்ளூராட்சி மன்றங்களை பலமானதாக மாற்ற வேண்டும்

## அது மக்களின் பொறுப்பு என்கிறார் பிள்ளையான்

மட்டக்களப்பு,டிசெ.31

உள்ளூராட்சி மன்றங்களை மக்கள் பலமானதாக மாற்ற வேண்டும். அப்போதுதான் அதனது முழுமையான பயனையும் மக்கள் அனுபவிக்க முடியும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் புதிய அலுவலகக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் கலந்துக்கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி

**அரசுடன் இணைந்திருந்தாலும் மக்களின் அதிகாரப் பகிர்வு விடயத்தில் நான் உறுதியாகவுள்ளளேன்.**



மன்ற தேர்தலிலே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மட்டக்களப்பு மாநகர சபை உட்பட 8 தமிழ் உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றியது. அதன் பின்னர்தான் உள்ளூராட்சி மன்றங்கள் என்றால் என்ன? அதன் பயன்பாடு, மக்களுக்கான உறவு என்ன? என்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

அரசுடன் இணைந்திருந்தாலும் மக்களின் அதிகாரப் பகிர்வு விடயத்தில் நான் உறுதியாகவுள்ளளேன். அதனை கடந்த கால மாகாண சபை [illegible] அரசுடன் இணைந்திருந்தாலும் மக்கள் நலனே எனது குறிக்கோள்.-என்றார்.(ச)



கல்முனை மாநகரசபையில் 25 தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் மாநகரசபை அரங்கில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் மாநகர முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாஹிப் கலந்துகொண்டு இளைஞர் ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்குகின்றார். (ச-30)

# பொதுச்சபைக் கூட்டம்

அம்பாறை,டிசெ.31

அம்பாறை மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அடுத்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் சொன்னால் சன்மானம்

நவாலி தெற்கைச் சேர்ந்த குணம் ஸ்ரீதரன் ஆகிய நான் கடந்த (29.12.2012) நவாலியிலிருந்து 786 வீதி இல தனியார் சிற்றூர்தி மூலம் யாழ்ப்பாணம் இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு சென்ற போது 2லட்சத்து 29 ஆயிரம் ரொக்கப் பணம் எனது காற்சட்டைப் பொக்கற்றிலிருந்து திருடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக யாராவது தகவல் தருபவர்களுக்கு உரிய சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: நவாலி தெற்கு ஸ்ரீ கட்டட பொருள்கள் கடை
0771296325 (சி/b1/9)(3.14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் காந்தசீலன் செல்லம்மா

தோற்றம் 26.11.1952 — மறைவு 01.12.2012

கடந்த (01.12.2012) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் காந்தசீலன் செல்லம்மா அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (31.12.2012) திங்கட்கிழமை மருதனார்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

(உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

6ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

குடும்பத்தினர்.

## ஒருவர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் சிகரெட்டுக்களை எடுத்துவந்த சந்தேக நபரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அம்பலாங்கொடையில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

அத்துடன், சந்தேகநபரிடம் இருந்த சட்டவிரோத சிகரெட்டுக்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## தாக்கப்பட்டவர் உயிரிழந்தார்

தாக்குதலுக்குள்ளான நிலையில் கல்கிஸை பகுதியில் தண்டவாளத்திற்கு அருகிலிருந்து மீட்கப்பட்ட இரத்மலானையைச் சேர்ந்தவர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம் 1979 இல் பிறந்த நட்சத்திரம் புனர்பூசம் பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 0778536794


புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்குறைப்பும், மலிவு விற்பனையும்.

அலுமாரி ~~12750/=~~ 10950/=
மரக் கட்டில் ~~7250/=~~ 4900/=
குசன் செற் ~~21500/=~~ 15500/=
மெத்தை ~~2400/=~~ 1950/=
கணினி மேசை ~~3275/=~~ 2900/=
கணினி கதிரை ~~4050/=~~ 3300/=

← 6 கதிரைக்கு ரீப்போ FREE →

மற்றும் TV ஸ்ராண்ட், மரமேசைகள், சோக்கேஸ், றெசின் ரேபிள், பிளாஸ்ரிக் மேசைகள் மற்றும் வீட்டு அலுவலக தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள

இல-230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்)
T.P- 0773583879, 0778314201 (சி/2682)(9.14)





## இதய அஞ்சலி

### அமரர் சண்முகம் சபா நடேசன் (மாஸ்ரர்)



காரைநகர் ஈழத்து சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் கௌரவ உறுப்பினர் சண்முகம் சிவஞானம் அவர்களின் அன்புச் சகோதரர்

சண்முகம் சபாநடேசன் திடீர் சிவபதம் அடைந்ததை அறிந்து நாம் அதிர்ச்சியிலும் வேதனையிலும் உறைந்துள்ளோம்.

அன்னாரின் ஆத்மா ஈழத்துசிதம்பர ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜாப் பெருமானின் நித்திய ஆனந்தத்தில் சாந்தி பெற பிரார்த்திப்பதோடு பிரிவால் துயரிலும் மனைவி, பிள்ளைகள், உறவுகள் மற்றும் அனைவருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாணிக்க வாசர் மடாலய அன்னதானசபை
ஈழத்து சிதம்பரம், காரைநகர்.

## மரண அறிவித்தல்

### யுவக்கீம்பிள்ளை செபமாலை ராசா



போயிட்டி இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யுவக்கீம்பிள்ளை செபமாலைராசா கடந்த (28.12.2012) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற அனனியாஸ் செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செபமாலை முத்துவின் அன்புக் கணவரும், செல்வராஜா (நோர்வே), செல்வராஜினி (இலங்கை), செல்வரஞ்சிதம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான ஜெயராஜா, யோகராஜா, தவராஜா (ஆஸ்திரேலியா), செல்வறோகினி (ஜேர்மனி), விஜியராஜா (ஆஸ்திரேலியா), ரட்ணராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசாத்தி, ரத்தினம், காலஞ்சென்றவர்களான புஸ்பம், நாயகம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், எலிசபேத்ராணி (நோர்வே), பயஸ் (பகறின்), சூசைராஜா (ஆஸ்திரேலியா), யூலியானா (இலங்கை), ஜடாபவானி (ஆஸ்திரேலியா), எட்வின் (ஜேர்மனி), ரஜுகாந்தினி (ஆஸ்திரேலியா), உதயராணி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற றொபேட், றொட்டினி, கங்கா, வதனா, றொபின், ராஜினி, றஜனி, கௌரி, கௌசி, றமணன், றஜீத், யோகா, ஜெயா, பிறேம், றஜீம், மார்க்கோ, நோயல், ஜலீன், கொட்பிறி, கொட்வின், றனுசியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (05.01.2013) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் போயிட்டி புனித லூர்த்து அன்னை ஆலயத்தில் துக்கத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித லூர்த்து அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போயிட்டி,
இளவாலை. (27394)(3.14)

பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகலிங்கம் பராசக்தி



குமரகோட்டம் கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி கனகலிங்கம் பராசக்தி நேற்று (30.12.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்தையா - சீனிப்பிள்ளை தம்பதியரின் மகளும், மாணிக்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஏகானந்தராசாவின் (ஜேர்மனி) பெரிய தாயும், சுபத்திராவின் மாமியும், கார்த்தீபன், செந்தூரன், பிரணாவன் ஆகியோரின் பெரிய அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தம்பிப்பிள்ளை, சின்னத்தங்கச்சி மற்றும் சரஸ்வதி (கனடா), இராசம் (இந்தியா), சுபத்திரை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசலிங்கம், அப்புத்துரை அன்னலட்சுமி மற்றும் தம்பிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (27395)(3.14)

தகவல்:
மா. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் கவனிக்கப்படுமா?

இன்று நள்ளிரவு பன்னிரெண்டு மணியோடு 2012 ஆம் ஆண்டு கழிந்துபோகிறது. நாளை காலையில் துயில் எழும் போது புதிய ஆண்டை, 2013 ஆம் ஆண்டை நாம் எல்லோரும் சந்திப்போம்.

அனைத்துலக மட்டத்தில் பாவனையில் உள்ள கிரகோரியன் கலண்டரின் புதிய ஆண்டு நமக்கு எவ்வாறு அமையும்? நலன்களை அதிகம் நல்குமா? அன்றிக் கெடுதல்களையும், பாதிப்புகளையும் தருமா என்று மனதில் எல்லோரும், நாளை தமக்குள் எண்ணிக் கொள்வது இயல்பு.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவரவர் தனிப்பட்ட முறையில் நோக்கும் புத்தாண்டு என்பதனைவிட, ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் புதிய ஆண்டு தமது உரிமைகள் மேன்மேலும் பறிக்கப்படுமா என்ற ஏக்கத்துடனேயே சிந்திக்கும் என்பதே இன்றைய யதார்த்தம்.

கடும் வறட்சியுடன் ஆரம்பித்த இந்த ஆண்டு மோசமான வெள்ள அழிவுடன் முடிவுக்கு வருகிறது. அதே போன்று இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரச்சினை, அரசமைப்பில் நெருக்கடி ஏற்படுத்திவரும் பிரதம நீதியரசர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், ஜெனிவாத் தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் இலங்கைக்கு உள்ள பொறுப்பு ஆகியவை தீர்வு இன்றி அடுத்த வருடத்துக்குள் செல்கின்றன.

புதிய ஆண்டிலாவது இவற்றுக்குத் தீர்வு காணப்படுமா? இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்கு வழி பிறக்குமா? இக்கேள்விகளுக்குப் பதில் அளிக்கக்கூடிய நிலையில் ஆட்சியாளர்கள் இல்லை.

மேற்கூறியவையும் ஏனைய பிரச்சினைகளும் அடுத்த ஆண்டும் தீர்வு இன்றி இழுபடும் என்ற காட்சிகளே விரியும் என்று எதிர்பார்க்கலாம். விட்டுக்கொடுப்புகளுக்கான வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன. கடும்போக்கு அரசியலே மேலோங்கி நிற்கிறது. மேன்மேலும் உயர்ந்து செல்கின்றது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்பு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அளித்த வாக்குறுதி காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டது. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகள் போன்று செயற்படுகிறார்கள். பேச்சுக்கு வருகிறார்கள் இல்லை" என்று ஜனாதிபதி குற்றஞ்சாட்டுகிறார்.

இத்தனைக்கும் தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதற்கு கூட்டமைப்பு விடுத்துள்ள ஒரே ஒரு கோரிக்கை, முதலில் பேச்சுவார்த்தை மூலம் அடிப்படைப் பிரச்சினைகளில் இணக்கம் காணப்பட வேண்டும் என்பதே. இதனை ஏற்க மறுத்தே அரசு அரசியல் தீர்வு முயற்சிகளைத் தட்டிக்கழித்து வருகிறது. பிரதம நீதியரசர் விவகாரத்தில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடம் இல்லை என்று ஜனாதிபதி அறிவித்துவிட்டார். அதே போக்கே, நிலைப்பாடுதான் அரசியல் பேச்சுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்துக்கு முன்னராவது கூட்டமைப்புடன் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு அரசு மனங் கொள்ளுமா? கடந்த மார்ச் மாத ஜெனிவாத் தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் காண்பிக்கப்படும் அசமந்தப் போக்கு அடுத்த கூட்டத்தில் அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம் என்பது பரவலான கருத்து.

இனப்பிரச்சினையை அனைத்துலகம் தனது கையில் எடுத்துக்கொண்டதற்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்றாகவேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதி அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

அரசியல் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பம் 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்டிருந்தது. ஆனால் அரசு அதனைத் தவற விட்டுவிட்டது. மூன்றரை வருட காலத்துக்குள் நிலைமை மாறிவிட்டது. தமிழர்களுடன் அதிகாரப் பகிர்வுக்கு தென்னிலங்கை இணங்காத போக்கே இன்றும், இன்னும் மேலுயர்ந்து வளர்ந்துள்ளது.

நாளை பிறக்கப்போகும் புத்தாண்டில் தென்னிலங்கையின் கடும்போக்கு மேலும் அதிகரிக்கலாம். அப்போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மட்டும் அல்ல, ஜெனிவாத் தீர்மானத்தின் பரிந்துரைகளும் தட்டிக்கழிக்கப்படலாம் என்பதே நிலைப்பாடாகிவிடும்.

அந்த நிலையைத் தணிப்பதற்கு இனியும் காலம் தாழ்த்தாது அரசு செயற்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது பிணையிலாவது வெளியே செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

வடக்கில் கைது செய்யப்படுவோர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளை, இறுக்கு வதனைத் தவிர்த்து, அவர்களின் நியாயமான கோரிக்கைகளைக் கவனத்தில் கொள்ளுமா என்பதே நாளை பிறக்கும் புதிய ஆண்டின் பெரும் வினாவாக எழுந்து நிற்கப் போகிறது.

# மீன்பிடித்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி அரைப்பங்காகக் குறைப்பு

கொழும்பு,டிசெ.31

2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மீன்பிடித் துறை தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த நிதி அரைப்பங்காக குறைக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

அவ்விதம் வெட்டிக் குறைக்கப்பட்டுள்ள தொகை 2000 மில்லியன் ரூபாவாகும்.

2011 ஆம் ஆண்டில் மீன்பிடித் துறை தொடர்பாக 4450 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் 2012 ஆம் ஆண்டில் அத் தொகை 3658 மில்லியன் ரூபாவாக இருந்தது.

ஆனால் 2013 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு அரசால் 2687 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இத்தொகையானது 2011 ஆம் ஆண்டில் மீன்பிடித்துறை தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையின் அரைப்பங்கேயாகும்.

இன்றைய அளவில் இந்த நாட்டின் மீன்பிடித் தொழில் பாரதுரமான பிரச்சினைகள் பலவற்றுக்கும் முகம் கொடுத்துள்ளது.

அரசால் அடிக்கடி எரிபொருள் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளமை மற்றும் வரி விதிப்புக்களால் மீன்பிடி உபகரணங்கள் விலைகள் எகிறிச் சென்றுள்ளமையும் இந்த நிலைப்பாட்டுக்குக் காரணமாகியுள்ளது.

அதேபோன்று மீன்பிடித்துறை அமைச்சால் வெளிநாடுகளில் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டு உள்நாட்டு வர்த்தகச் சந்தைக்கு விநியோகிப்பதனால் இந்த நாட்டு மீன் வர்த்தகச் சந்தைகள் சரிந்து போயுள்ளன.

வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான ரோலர் மீன்பிடிக் கலங்களுக்கு இந்த நாட்டுக் கடற்பரப்பின் மீன் வளத்தை அள்ளிச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதாலும் இந்நாட்டு மீனவர்கள் பிரச்சினைகள் பலவற்றுக்கும் முகம் கொடுத்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ம-22)

# ஒப்பந்தத்தில் வன்னி சென்ற ஆசிரியர்கள் விசனத்தில்

## இரண்டு வருடங்கள் முடிந்தும் மாற்று நடவடிக்கை இல்லையாம்

இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்குச் சென்ற ஆசிரியர்கள் ஒப்பந்த காலம் நிறைவடைந்த நிலையில் மீளவும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாதமை குறித்து விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இன்றைய தினம் வடமாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துக்குச் சென்று அது பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

உரிய தீர்வு கிடைக்கப் பெறாவிடின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதோடு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம் யாழ். நாவலர் கல்வி நிலையத்தில் நேற்று ஏற்பாடு செய்திருந்த இந்த ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்த ஆசிரியர்கள் இதனைத் தெரிவித்தனர்.

2011 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 2013 ஜனவரி முதலாம் திகதிவரையான இரண்டு வருட கால ஒப்பந்த அடிப்படையில் சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வன்னிக்குஇடமாற்றம் செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் மேலதிகமாக இருந்த ஆசிரியர்களே இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் வன்னிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் ஏற்கனவே பல வருடங்கள் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியிருந்தனர்.

வன்னியில் 2 வருட சேவைக் காலம் நிறைவடைந்துள்ள நிலையில் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்புவதற்கு அதிகாரிகள் எவரும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

அது தொடர்பில் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே இன்று மாகாணக் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கவுள்ளோம். உரிய தீர்வு கிடைக்கத் தவறின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப் போவதோடு உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ம-4)

# பஸ் சேவை நேர மாற்றம்

வடமராட்சி, டிசெ. 31

பருத்தித்துறையில் இருந்து வவுனியாவுக்கு காலை நேரத்தில் நடத்தப்படும் இ.போ.ச. பஸ் புறப்படும் நேரத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மாற்றம் செய்யப்படுவதாக சாலை முகாமையாளர் எஸ்.கந்தசாமி தெரிவித்தார்.

தற்போது காலை 7.15 மணிக்குப் பருத்தித்துறையில் இருந்து வவுனியா நோக்கிப் புறப்படும் பஸ் வண்டி இனிமேல் காலை 7 மணிக்குப் புறப்படும்.

முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து வவுனியாவுக்கும், பிற்பகல் ஒரு மணிக்கும், மாலை 5 மணிக்கும் வவுனியாவிலிருந்து பருத்தித்துறைக்குப் புறப்படும் பஸ்வண்டிகளின் சேவை நேரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

# இ.போ.ச.வவுனியா சாலை இரு அதிகாரிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு பிராந்திய பிரதான அலுவலகத்தின் வவுனியா சாலையைச் சேர்ந்த இரு அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா சாலையில் நீண்ட காலமாக கடமையாற்றி வந்த அதிகாரிகளான சாலை முகாமையாளர், சாலை சிரேஷ்ட பரிசோதகர் ஆகியோரே இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகள் என்று கூறப்படுகிறது.

இந்த அதிகாரிகளின் இடைநிறுத்தத்துக்கு எதிராக வடக்கில் உள்ள 7 சாலை அதிகாரிகளின் குழு நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

முதற்கட்டமாக இரு அதிகாரிகளையும் உள்வாங்க மனித உரிமை ஆணைக்குழு ஊடாக நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக வடபிராந்திய முகாமையாளர் அஸ்கரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது :-

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையில் பணிபுரியும் இரண்டு அதிகாரிகளும் ஒழுக்காற்று விசாரணைக்காக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

அந்த இரண்டு அதிகாரிகளும் கடமை நேரத்தில் தவறிழைத்துள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனவே அது தொடர்பில் அவர்களிடம் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளது. அதற்காகவே இரண்டு பேரும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று மேலும் கூறினார். (ம-4)

# சிறுமியை வன்புணர்வு செய்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## வேலணை பிரதேச சபை கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

மண்டைதீவில் நான்கு வயது சிறுமி வன்புணர்வின் பின் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட குற்றவாளிகளை கண்டுபிடித்து அதிகப்படியான தண்டனையை நீதித்துறை வழங்க வேண்டும்.

இவ்வாறான குற்றவாளிகளை பிடிப்பதற்கு பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் துரித தேடுதலை மேற்கொள்ள வேண்டும்.

வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா குறித்த சம்பவத்துக்கும் கடும் கண்டனம் தெரிவித்ததுடன் சிறுமியின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாகத் தலைவர் சி.சிவராசா மேலும் தெரிவித்ததாவது:-

மண்டைதீவு - 2 ஆம் வட்டாரத்தில் நான்கு வயது சிறுமியின் மீது வன்புணர்வின் பின்னரான கொலை என்ற செய்தியை பார்த்ததும் அதிர்ந்து போய் உள்ளோம்.

இந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர்களை கண்டு பிடிக்க நேற்று முழுவதும் மண்டைதீவின் பல்வேறு இடங்களிலும் பல விசாரணைகளை மேற்கொண்டோம்.

எனினும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

இந்தச் சிறுமியை கொலை செய்த காட்டுமிராண்டிகளை கைது செய்து மிக கடுமையான தண்டனையை நீதித்துறை வழங்க வேண்டும்.

எமது நிர்வாக பிரிவுக்கு உட்பட்ட மக்கள் இந்தச் சோக சம்பவத்தினால் உறைந்து போயுள்ளனர்.

எனவே, இக் குற்றவாளிகளை கைது செய்ய அனைத்து மக்களும் கைகொடுத்து உதவ வேண்டும் என்று வேலணை பிரதேச சபைத் தலைவர் மேலும் கூறினார். (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தில் தன்னிறைவு காண அனைவரும் விவசாயம் செய்யவேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி ஒரு விவசாய மாவட்டமாக உள்ள போதும் நாங்கள் எத்தனை பேர் விவசாயம் செய்கின்றோம் என்பது கேள்விக்குறியான விடயம் என மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தினூடாக நடத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான வீட்டுத்தோட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

> எமக்குத் தேவையான உணவுவகைகளை நாங்களே உற்பத்தி செய்ய வேண்டும். அதன்மூலம் நாங்கள் ஒரு ஆரோக்கியமான வாழ்வை வாழமுடியும்.

எமது மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக உள்ள போதும் நாங்கள் எல்லோரும் விவசாயம் செய்வதில்லை. எமக்குத் தேவையான மரக்கறிகளையும் வேறு மாவட்டங்களில் இருந்து எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

எமக்குத் தேவையான உணவுவகைகளை நாமே உற்பத்தி செய்யும்போதுதான் நாங்கள் தன்னிறைவு அடைய முடியும்.

எமக்குத் தேவையான உணவுவகைகளை நாங்களே உற்பத்தி செய்ய வேண்டும். அதன்மூலம் நாங்கள் ஒரு ஆரோக்கியமான வாழ்வை வாழமுடியும். ஆரோக்கியமான வாழ்வுக்கு எமது வாழ்க்கை முறையே காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து வீட்டுத் தோட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன், மாவட்ட கால்நடை சுகாதார திணைக்கள அதிகாரி கௌரிதிலகன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் செல்வராசா மற்றும் விவசாய போதனாசிரியர்கள், அரச அதிகாரிகள், விவசாயிகள் எனப்பலர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ-6)

# கசிப்பு உற்பத்தி, விற்பனை: 42 பேர் இம்மாதம் கைது

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தியில் ஈடுபட்ட 42 பேர் இந்த மாதம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும் நடவடிக்கைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த மாதம் நூறுக்கும் மேற்பட்டோர் கசிப்பு விற்பனை, உற்பத்தி, சட்டவிரோத மதுபான விற்பனை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கண்டாவளைப் பிரதேசத்தின் முரசுமோட்டை, ஊரியான், தருமபுரம், கல்மடுநகர், புளியம்பொக்கணை, பிரமந்தனாறு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து இந்த மாதம் 42 பேர் கைதாகினர். இவ்வாறு சட்டவிரோத மதுபான விற்பனை, உற்பத்திகளில் ஈடுபட்ட இவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-6)

### கரைச்சி பிரதேச சபையால்

# ரூ.60 லட்சம் செலவில் தண்ணீர் விநியோகம் இந்த வருடத்தில்

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினால் இந்த ஆண்டு குடிதண்ணீர் விநியோகத்துக்குச் சுமார் அறுபது லட்சம் ரூபா செலவிடப்பட்டிருப்பதாகக் கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் வை.குகராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையால் தொடர்ச்சியாக நான்கு கிராமங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனைவிட 32 வரையான கிராமங்களுக்குக் கடும் வறட்சிக் காலங்களில் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

> 32 வரையான கிராமங்களுக்கு கடும் வறட்சிக் காலங்களில் குடி தண்ணீர்விநியோகம் மேற்கொள்ளப் படுகின்றது.

இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபையினால் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை மேற்படி 36 கிராமங்களுக்குமான குடிநீர் விநியோகத்துக்குச் சுமார் அறுபது லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் வ.குகராசா தெரிவித்துள்ளார். (ஐ-6)

# புதிய ஆண்டில் தடை வரும் சட்டவிரோத வலைப் பாவனை;

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி மாவட்டத்தின் நன்னீர் மீன்பிடியில் சட்டவிரோத வலைகள் பாவிப்பதைத் தடை செய்யும் நடவடிக்கை 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், அக்கராயன்குளம், புதுமுறிப்புக்குளம் உள்ளிட்ட குளங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நன்னீர் மீன்பிடியில் கடந்த காலங்களில் இருந்து தங்கூசி, வலை போன்ற தடைசெய்யப்பட்ட வலைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2013 ஆம் ஆண்டில் இருந்து மேற்படி தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்படவுள்ளது எனக் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகள் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி தருமபுரத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தனர். (த-6)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிவாரண உதவி

### வவுனியா தமிழ் பிரதேச சபை நடவடிக்கை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தொடர்ந்து நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றது.

வவுனியா புதுக்குளம் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியுள்ளனர்.

புதுக்குளத்தில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேருக்கு உதவி வழங்கப்பட்டுள்ளன. பால் மா வகைகள் மற்றும் சமைத்த உணவு போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களான எல்லப்பர் மருதங்குளம், கல்வீரன்குளம், ஆனந்தபுரம், இந்திக்குளம் போன்ற பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-421)



மன்னார் பிரமணாலங்குளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் உதவிப் பிரதேச செயலர் வே.ஆபாகுலன், சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், கிராம சேவை உத்தியோகத்தர் இராஜரட்ணம், ஐ.ஓ.எம். நிறுவனத்தைச் சேர்ந்த தயாபரன் ஆகியோர் (ம-12)

# மன்னார் இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவிகள்

மன்னார், டிசெ. 31

கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டு இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மன்னார் மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள மீள் எழுச்சித் திட்டம், வடக்கின் துரித மீட்சித்திட்ட கிராம அபிவிருத்தி அமைப்பின் ஊடாக நிவாரணப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்திலும் வடக்கின் ஏனைய மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களின் ஒரு தொகுதியே இவ்வாறு விநியோகிக்கப்பட்டது.

> ஒரு தொகுதி பொருள் கள் மடு பிரதேசத் துக்கு வழங்குவதற் காக மடு உதவி அரச அதிபரிடம் சின்னபண் டிவிரிச்சான் பாட சாலையில் வைத்து கையளிக்கப்பட்டன.

வடமாகாண மேலதிக திட்டப் பணிப்பாளர், மன்னார் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆகியோரால் நானாட்டான் பகுதிகளுக்கு வழங்குவதற்காக நானாட்டான் பிரதேச செயலரிடம் ஒரு தொகுதி பொருள்கள் நானாட்டான் மகாவித்தியாலயத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

அதேபோல் மேலும் ஒரு தொகுதி பொருள்கள் மடு பிரதேசத்துக்கு வழங்குவதற்காக மடு உதவி அரச அதிபரிடம் சின்னபண்டிவிரிச்சான் பாடசாலையில் வைத்து கையளிக்கப்பட்டன.

மேலும் ஒரு தொகுதி பொருள்கள் நேற்று முன்தினம் முசலி பிரதேசத்துக்கு வழங்குவதற்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் மன்னார் இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரிடம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளன. (த-12)

# கண்டாவளையில் 214 வீதிகளில் 15 வீதிகள் மட்டுமே புனரமைப்பு

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் பிரதேச சபைக்குச் சொந்தமான 258.3 கி.மீ. நீளமான வீதிகளில் இதுவரை 23 கி.மீ. வீதி மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 258.3 கி.மீ. நீளமான 214 வீதிகள் உள்ளன. இதில் இதுவரை 23.5 கி.மீ. நீளமான 15 வீதிகள் மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பிரதேச சபைக்குரிய வீதிகள் கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைப்புக்கள் இன்றி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. சில வீதிகள் பெரியளவில் அழிவடைந்து காணப்படுகின்றன.

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள 103 கிராமங்களிலும் பொதுமயானங்கள், பாடசாலைகள், குடியிருப்புக்கள் ஆகியவற்றுக்குத் தினமும் பொதுமக்கள் பயன்படுத்தும் வீதிகளே இவ்வாறு புனரமைக்கப் [illegible] காணப்படுகின்றன. (ஐ-6)

# 6 மில்லியன் ரூபா செலவில் சுகாதார வைத்திய பணிமனை

### கண்டாவளையில் புனரமைப்புப் பணிகள்

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி, கண்டாவளையில் வைத்திய அதிகாரி பணிமனை சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ப.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்டடப் பணிகளில் 85 வீதமான வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

ஏனைய வேலைகளும் மிக விரைவில் நிறைவு பெற்றுவிடும். புதிய ஆண்டில் மேலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றார். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் இடைவிலகிய மாணவரை இணைக்க நடவடிக்கை

## வர்த்தக சங்கம் மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,டிசெ.31

பாடசாலைகளில் இருந்து இடைவிலகி உள்ள 490 மாணவர்களுக்கு யாழ். வர்த்தக சங்கம் கற்றல் உபகரணங்களை வழங்கி பாடசாலைகளில் மீண்டும் இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என்று யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடி மற்றும் போர்ச் சூழலால் ஏற்பட்ட உளத்தாக்கம் மற்றும் உரிய பாதுகாவலர்கள் இல்லாத காரணங்கள் யாழ். மாவட்டத்தில் அதிகளவான மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி வீடுகளில் முடக்கப்பட்டுள்ளார்கள்.

இதன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இதனைச் சீர்செய்யும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இருந்து 490 மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

**இடைவிலகல் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.**

இந்த 490 மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கி மீண்டும் பாடசாலை சென்று அவர்கள் கல்வி கற்பதற்கான நடவடிக்கைகளை வர்த்தக சங்கம் முன்னெடுக்கவுள்ளது.

இதனைவிட பெற்றோர்களின் பொறுப் பற்ற தன்மையாலும் மாணவர்கள் பாடசாலை செல்லாது இடைவிலகியுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்தால் எதிர்காலத்தில் வடமாகாணத்தில் ஏற்படக் கூடிய கல்விப் பின்னடைவை குறைக்க முடியும் எனவும் தெரிவித்தார். (ம-14)

## நிறைவடைந்த திட்டங்களுக்காக உலக உணவுத் திட்ட பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.31

2012 உலக உணவுத் திட்டத்தின் கீழ் வேலை முடிவடைந்த அபிவிருத்தி திட்டங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

பிரதேச மட்டத்தில் சமூக கழக மட்ட நிறுவனங்களுக்கு ஊடாக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கே இவை வழங்கப்படவுள்ளன.

மொத்தமாக யாழ்.மாவட்டத்தில் 44,122 வேலை நாள்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உல க உணவுத் திட்ட யாழ். தலைமை அதிகாரி ஜெட் பூட்டா அறிவித்துள்ளார்.

இதில் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு ஊடாக முன்வைக்கப்பட்ட பல்வேறு வேலைத்திட்ட முடிவுகளின் அறிக்கையின் பிரகாரம் உலக உணவு திட்டத்துக்கான உணவுகள் மனித நாள்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் மூலம் அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகிய மூன்று பொருள்கள் உணவுக்கான வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

கீழ்காணும் ப.நோ.கூ. சங்கங்களூடாக வழங்கப்பட்ட மொத்த வேலை நாள்கள், கிலோகிராமில் மொத்த பொருள்களின் அளவு வருமாறு:-

| ப.நோ. கூ.சங்கம் | வேலைநாள் | (கிலோ) மொத்தம் |
|---|---|---|
| அளவெட்டி | 399 | 1057.350 கி.கி |
| அச்சுவேலி | 399 | 1057.350 " |
| சங்கானை | 3197 | 8472.050 " |
| சாவகச்சேரி | 1337 | 3543.050 " |
| சுன்னாகம் | 1569 | 4157.850 " |
| யாழ்ப்பாணம் | 1338 | 3545.700 " |
| காரைநகர் | 991 | 2626.150 " |
| கொடிகாமம் | 7263 | 19246.950 " |
| மானிப்பாய் | 3366 | 8919.900 " |
| மருதங்கேணி | 1140 | 3021.000 " |
| நல்லூர் | 4183 | 11084.950 " |
| பண்டத்தரிப்பு | 3576 | 9476.400 " |
| புலோலி | 4446 | 11781.900 " |
| புங்குடுதீவு | 4776 | 12656.400 " |
| தெல்லிப்பழை | 1197 | 3172.050 " |
| வேலணை | 4945 | 13104.250 " |

(ம-41)

## தகராறில் மூவர் காயம்

தென்மராட்சி,டிசெ.31

மகள் கணவனால் தாக்கப்படுவதைத் தடுக்கச் சென்ற தந்தையும் தாக்கப்பட்டார். காயமடைந்த இருவரும் திருப்பித் தாக்கியதில் மருமகனும் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றது.

காயமடைந்த தந்தையும் மகளும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுகாயங்களுக்கு உள்ளான மருமகன் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். (ம-9)



கொழும்புத்துறை புனித சொம்பாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்ற குடும்ப விழாவான ஒளி விழாவில் இடம்பெற்ற சிறுவர்களின் கலைநிகழ்வில் ஒரு காட்சி. (ம-135)

## சமூக நோக்க உட்கட்டுமானத்துக்கு காணி வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

சமூக நோக்க உட்கட்டுமானத்துக்கென பண்டத்தரிப்பு பிரான்பற்றில் காணி வழங்கப்படும்.

காணி தேவைப்படுவோர் அதற்கான முன் மொழிவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உட்கட்டுமானம் செய்ய அரசு முன்வந்தால் காணி இலவசமாக வழங்கப்படும்.

மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரும், பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையத் தலைவருமான சி.சி.மகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

**குறித்த காலப் பகுதியில் ஏதேனும் உட்கட்டுமான அபிவிருத்தி திட்டம் ஊடாக பொது மக்களுக்கு நன்மையளிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்**

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நிறுவனங்கள் ஏதேனும் உட்கட்டுமான அபிவிருத்திக்கு காணி தேவை என்று முன்மொழிந்தால் அதற்கான காணி வழங்கப்படும் .

ஆனால், காணி வழங்கப் பட்டு குறித்த காலப் பகுதியில் ஏதேனும் உட் கட்டுமான அபிவிருத்தி திட்டம் ஊடாக பொது மக்களுக்கு நன்மையளிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-41)

## வயலில் நின்றவரை பாம்பு தீண்டியது

தென்மராட்சி,டிசெ.31

அண்மைய மழையை அடுத்து நெல் வயலுக்கு உரம் எறிந்தவரை பயிருக்குள் மறைந்திருந்த பாம்பு கடித்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கைதடியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி குணபாலன் (வயது- 34) என்பவர் பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## நயினாதீவில் மலசலகூடம் அமைக்கக் கோரிக் கடிதம்

யாழ்பாணம்,டிசெ.31

வெளியூர்களில் இருந்து படகுமூலம் நயினாதீவுக்குள் செல்லும் யாத்திரிகர்கள், பயணிகள், சுற்றுலா பயணிகளின் வசதி கருதி நயினாதீவு பாலத்துக்கு அருகில் மலசலகூட வசதி உடன் ஏற்படுத்தப்பட வேண்டும்.

நயினாதீவு உப அலுவலக பொறுப்பதிகாரி ந.மோகனரூபன் மேற்படி மலசலகூடத்தின் தேவையை வலியுறுத்தி சபைத் தலைவர் மற்றும் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தகரங்களால் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூடம் தற்போது பாவனைக்கு பொருத்தமற்றுள்ளது.

குடாநாட்டிலுள்ள பல்வேறு இடங்களில் இருந்து நீண்டதூரம், நீண்ட நேரத்துக்கு பின்னர் வெளியூர்களில் இருந்து படகு மூலம் நயினாதீவு துறைமுகத்தை வந்தடையும் பயணிகளுக்கு மிகவும் அவசியமாகும்.

இதனைப் பிரதேச சபையினர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எனவே இதற்கான மலசலகூடங்களை அமைத்து உதவ வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-50)

## இலங்கை வங்கி இன்று அரைநாள் செயற்படும்

தென்மராட்சி,டிசெ.31

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையினர் வருட இறுதியை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை வங்கி இயங்கும்.

நாளை செவ்வாய்க்கிழமை வழமை போல வங்கி செயற்பாடுகள் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## விளான் மயான அபிவிருத்திக்கு தனிநபரின் உதவி கிடைத்தது

யாழ்ப்பாணம்,டிசெ.31

பண்டத்தரிப்பு பிரான்பற்று விளாவெளி மயான அபிவிருத்திக்கு கனடாவைச் சேர்ந்த தனி நபர் ஒருவர் உதவி வழங்கியுள்ளார்.

முதற்கட்டமாக மயானத்தின் வாயிலுக்கு ''கேற்'' வசசதிக்காக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று விளாவெளி மயானம் நீண்ட காலமாக அபிவிருத் தியின்றி உள்ளது.

இந்த மயான அபிவிருத்திக்கு உதவிகள் செய்ய வேண்டும் என வெளிநாட்டு உறவுகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதன் முதற் கட்டமாக கனடாவைச் சேர்ந்த நாகரத்தினம் பவளராசா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கேற் ஒன்றை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-41)

## வலி.கிழக்கு மூத்த பிரஜைகளுக்கு கொடுப்பனவு

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 937 மூத்த பிரஜைகளுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

சமூக சேவை அமைச்சால் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப் படு கின்றது. 937 முதியவர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார். (ம-11)

## 'கமநெகும' திட்டத்துக்கான தெரிவுகள் நிறைவேறின

யாழ்பாணம்,டிசெ.31

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கமநெகும 100 மில்லியன் ரூபா திட்டத்துக்கான இறுதி அபிவிருத்தி தெரிவுகள் மக்கள் பங்கேற்பு பிரதிநிதிகளுடன் நிறைவேறியுள்ளன.

இதற்கான முன்மொழிவுகளுக்கு விரைவில் மதிப் பீடுகள், வரைவுகள் தயாரிக்கும் பணி ஆரம்பமாகும்.

**முன்மொழிவுகளுக்கு விரைவில் மதிப் பீடுகள், வரைவுகள் தயாரிக்கும் பணி ஆரம்பமாகும்.**

இவ்வாறு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் வேலணைப் பிரதேச சபை அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தியே 30 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதான மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கருத்திட்டங்கள் விரை வில் யாழ்.அரச அதிபருக்குச் சமர்ப்பித்து அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று மேலும் கூறினார். (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை விமானநிலையம் வந்த ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை, தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா மற்றும் ஆளுநர் ரோசய்யா பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

# 7 நாள்களில் 7 ஓவியங்கள் குமரி ஓவியர் கின்னஸ் சாதனை!

களியக்காவிளை, டிசெ.31

7 நாள்களில் 7 ஓவியங்கள் வரைந்து கன்னியா குமரி ஓவியர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

குமரி மாவட்டம், களியக் காவிளை அருகே படந்தாலு மூடு மீனச்சல் பகுதியைச் சேர்ந்தவர் ராஜசேகரன். ஓவியரான அவர், இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் படத்தை மிகப்பெரிய ஈசல் ஓவியமாக வரைந்து கின்னஸ் சாதனை படைத்தவர். யுனிக் வேல்டு ரிகார்ட்ஸ் இந்தியன் புக் ஒப் ரிகார்ட்ஸ் மற்றும் அசிஸ்ட் வேல்ட் ரிகார்ட்ஸ் ஆகிய 3 அமைப்புகளும் அவரது சாதனையை ஒரே நேரத்தில் அங்கீகரித்துள்ளன. இந்த நிலையில் 'வலேடி வித் ரெயின்போ கர்ட்டன்ஸ்' என்னும் தலைப்பில் வான வில்லின் வண்ணங்களில் 7 நாள்களில் ஏழு உருவப் படங்களைத் தீட்டியுள்ளார். மலேசியாவைச் சேர்ந்த டொக்டர் ஆதிலெட்சுமியை மொடலாகக் கொண்டு கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து 7ஆம் திகதி வரை, 7 மணி நேரத்தில் ஒரு ஓவியம் என 7 ஓவியங்கள் வரைந்துள்ளார்.

எண் ணெய் ஓவியங்கள் காய் வதற்கு அதிக காலம் எடுக் கும் நிலையில், உடனுக் குடன் மீளச் செய்து உலக சாதனை புரிந்ததை அங்கீ கரித்து யுனிக் வேல்டு ரிகார்ட்ஸ் சான்றிதழ் வழங்கியுள்ளது. (வ)

## காஷ்மீரில் பனிச்சறுக்கு விளையாட்டு

இந்தியாவின் வட மாநிலங்களில் தற்போது கடுங்குளிர் வாட்டி வருகிறது.

புதுடில்லி, ஹிமாச்சல பிரதேசம், ஜம்மு- காஷ்மீர் என நாட்டின் முக்கிய பிரதேசங்களில் கடுங்குளிர் நிலவுகிறது.

அந்தக் குளிரில் மக்களின் அன்றாட வாழ்க்கையின் இயல்பு நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 30 இற்கும் மேற்பட்டோர் குளிரால் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையில் ஜம்முவில் உள்ள பிரதான சுற்றுலாத் தளமான குல்மார்க்கில் பயணிகளின் கூட்டம் குவிகிறது. (வ)

# நவீனமயமாகிறது இந்தியக்கடற்படை

## ஜனவரியில் சுப்பர்சோனிக் ஏவுகணையைப் பரிசோதிக்கத் திட்டம்




டில்லி, டிசெ.31

இந்தியக் கடற்படையின் பலத்தை அதிகரிக்கும் நோக்கில் உலகின் அதிவேக சுப்பர் சோனிக் ஏவுகணையை கடலுக்கடியில் எதிர்வரும் ஜனவரியில் இந்தியா பரிசோதிக்கவுள்ளது.

எதிரியின் போர்க்கப்பல்களை மறைந்திருந்து தாக்கும் விதமாக இந்த ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஏவுகணை இந்தியக் கடற்படையின் பலத்தை பலமடங்கு கூட்டும் என்றும் கருதப் படுகிறது.

**சிறப்புகள்**

290 கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் இலக்கை 6 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் இது தாக்கும். இந்தியா -ரஷ்யாவின் கூட்டுத் தயாரிப்பில் உருவானது.

சீனாவின் 'சன்பர்ன் சுப்பர்சோனிக்'' ஏவுக ணையை விட வேகமானது. அமெரிக்கா, பிரிட்டனின் 'டொமாஹக்' ஏவுகணையை விட மூன்று மடங்கு வேகமானது. குறைவான உயரத்தில் பறக்கும் 'சுப்பர் சோனிக்' உளவு விமானங்கள்கூட இதைக் கண்டறிவது கஷ்டம்.

இலக்கைத் தாக்கும் போது கடலுக்கடியில் 10 மீற்றர் ஆழத்துக்கும் குறைவாகச் சென்று தாக்கும்.

**தாக்கும் விதம்**

'பான்டூன்' எனப்படும் நீர்மூழ்கி உதவியுடன் ஏவுகணை, ஏவப்படும் ஆழத்துக்குக் கொண்டு செல்லப்படும். அதன்பின் 60 மீ. ஆழத்திலிருந்து ஏவப்படும். இது கடலுக்கடியிலிருந்து நீர்மட்டத்தை 3 விநாடியில் கடந்து வெளியேறும். கடக்கும் தூரத்துக்கேற்ப உயரச் சென்று இலக்கை நோக்கி திரும்பும் தன்மை கொண்டது.

திட எரிபொருள் 'சுப்பர் சோனிக்' வேகத்துக்கும், திரவ எரிபொருள் ஏவுகணையின் இன்ஜின் வேகத்துக்கும் இது உதவுகிறது.

இலக்குக்கு சிறிது தூரத்துக்கு முன்னர் கடலுக்கடியில் சென்று தாக்கும் வல்லமை கொண்டது.

ஓர் ஏவுகணை 10 கோடி ரூபா மதிப் புள்ளதாகும். இது 300 கிலோ வெடிபொருள்களைச் சுமந்து சென்று 290 கி.மீ. தூரம் தாக்கும் திறன் கொண்டவை. இதன் வேகம் 2.8 மாக் வேகம் ஆகும் 1 மாக் (ஒலி) வேகம் என்பது மணிக்கு 1195 கி.மீ., ஆகும்.

## சென்னை துறைமுகத்துக்கு அருகில் கடலில் தத்தளித்த நிலையில் கப்பல்



சென்னை துறைமுகத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தொலைவில் கப்பலொன்று எரிபொருள் இன்றி நங்கூரம் வலுவிழந்த நிலையில் நடுக்கடலில் தத்தளித்து நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதிபா வர்ண கப்பல் என்று அழைக்கப்படும் குறித்த கப்பலில் 30 இற்கும் மேற்பட்ட கப்பல் ஊழியர்கள் அடிப்படைத் தேவைகளான தண்ணீர், உணவு இன்றி தவித்துக் கொண்டிருந்தனர். அதையடுத்து கடலோர பாதுகாப்பு அதிகாரிகளும் சமூக ஆர்வலர்களும் கப்பல் ஊழியர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், தண்ணீருடன் கப்பல் அருகே செல்ல முயன்றனர். இதன்போது கடலில் கடும் சூறாவளிக் காற்று வீசுவ தால் கப்பலை நெருங்க முடியாதிருப்பதாகவும் தெரி விக்கப்படுகிறது.

இவ்வாறானநிலையில் குறித்த கப்பலின் கப்டன் இப்போது வரவேண்டாம் என்று பதில் செய்தி அனுப்பியுள்ளார். நீலம் புயலின் போது தரை தட்டி நின்ற பிரதிபா காவேரிக் கப்பல் நிறுவ னத்துக்குச் சொந்தமானதே இந்த பிரதிபா வர்ண கப்பல் என்றும், அந்தக்கப்பலுக்கும் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை என்றும் தெரிவிக் கப்படுகிறது.

# காமுகர்களின் பசிக்கு இரையான மாணவியின் உடல் நேற்று தகனம்

## டில்லியில் பதற்றம்; தலைவர்கள் அஞ்சலி

டில்லி, டிசெ.31

பாலியல் வன்புணர்வுக்குள்ளாகி உயிரிழந்த மருத்துவ மாணவியின் உடல் டில்லியில் நேற்று அதிகாலை தகனம் செய்யப்பட்டது.

டில்லியில் ஓடும் பஸ்ஸில் கடந்த 16 ஆம் திகதி குறித்த மாணவியை 6 பேர் கொண்ட கும்பல் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கியது. பின்னர் டில்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காததால் நேற்று முன்தினம் காலை உயிரிழந்தார். அவரது உடல், நேற்று அதிகாலை 3.15 மணிக்கு டில்லிக்குக் கொண்டு வரப்பட்டது.

டில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தில் மாணவியின் உடல் வந்து இறங்கிய போது, அங்கு வந்த பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிர தலைவர் சோனியா காந்தி ஆகியோர், மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் கூறினர்.

அதனையடுத்து அந்த மாணவியின் உடல் டில்லியில் உள்ள அவரது வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது.



அங்கு நடைபெற்ற மதச்சடங்குகளுக்கு பின்னர் மாணவியின் உடல், பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் துவாரகா செக்டார் 24 இல் உள்ள மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இறுதிச்சடங்கில் மத்திய உள்துறை இணையமைச்சர் கே.பி. என்.சிங், மேற்கு டில்லி நாடாளுமன்ற உறுப்பினர் மஹாபால் மிஸ்ரா, டில்லி பாரதீய ஜனதா தலைவர் விஜேந்தர் குப்தா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

இறுதிச்சடங்கு நடைபெற்ற இடத்துக்கு பத்திரிகையாளர்கள், புகைப்படக் காரர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இதனிடையே மாணவியின் மறைவுக்கு நாடு முழுவதும் பொதுமக்கள் மெழுகு வர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தி வருகின்றனர். டில்லியில் மாணவ, மாணவிகளின் போராட்டம் மீண்டும் வெடிக்குமோ என்ற எதிர்பார்ப்புடன் நகர் முழுவதும் சிறப்பு அதிரடிப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். முக்கிய ரயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

**பான் கீ மூன் கவலை**

இதேவேளை மாணவியின் மறைவுக்கு ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கி-மூன் ஆழ்ந்த கவலை தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், டில்லி மாணவிக்கு நேர்ந்ததைப் போன்ற மிருகத்தனமாக குற்றச் செயல்களை வன்மையாக கண்டிப்பதாகவும், மாணவியின் மரணம் பற்றி அறிந்து ஆழ்ந்த வருத்தம் கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (வ)

# "இந்திய நுழைவாயில்' பகுதியில் 144 தடை உத்தரவை ரத்து செய்க

## டில்லி நீதிமன்றில் பொதுநலன் வழக்கு



டில்லி, டிசெ.31

இந்தியா நுழைவாயில் பகுதியைச் சூழ பிறப்பிக்கப்பட்டுள்ள 144 பொலிஸ் தடை உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று டில்லி உயர் நீதி மன்றத்தில் ஒரு பொது நலன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

டில்லியில் ஓடும் பஸ்ஸில் மருத்துவ மாணவி பலாத்காரம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா நுழைவாயில் பகுதியில் போராட்டம் நடத்தப்பட்டது. இதனால் அந்தப்பகுதி முழுவதும் எப்போது பார்த்தாலும் பரபரப்பாகக் காணப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியா நுழைவாயில் மற்றும் அதைச் சூழவுள்ள பகுதிகளில் கடந்த 22 ஆம் திகதி முதல் 144 தடை உத்தரவு டில்லி பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடை உத்தரவை ரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆனந்த் மிஸ்ரா பொதுநலன் வழக்குத் தொடர்ந்துள்ளார். அந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதிகள் சித்தார்த் மிருதுள் மற்றும் பிரதிபா ராணி ஆகியோர் அடங்கிய குழு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சித்தார்த் லுத்ரா முன்னிலையாகி 'இந்தியா நுழைவாயில்' பகுதியில் அமைதியை நிலைநாட்டு வது அவசியம். எனவேதான் அந்தப் பகுதியில் 144 தடை உத்தரவைப் பொலிஸார் பிறப்பித்துள்ளனர். எனவே அந்தத் தடை உத்தரவை ரத்துச் செய்யக் கோரும் மனு வை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதா டினார். எதிர்வரும் 2 ஆம் திகதி விசாரணை மீண்டும் நடைபெறவுள்ளது.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா விவகாரத்தில் தலையிடுகிறது ரஷ்யா

## புரட்சியாளர்களுடன் பேசுமாறு அசாத்துக்கு அழுத்தம்

மொஸ்கோ, டிசெ.31

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது ரஷ்யா.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் மோதல்களை நிறுத்தி, புரட்சியாளர்களுடன் பேச்சு நடத்துமாறு சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு அறிவுறுத்தியுள்ளது ரஷ்யா.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்ற பேச்சுக்களின்போது, சிரியாவின் வெளியுறவு அமைச்சர் பைசல் மாக்தாத்திடம் இந்த விடயத்தை வலியுறுத்தியாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரெவ் தெரிவித்தார்.

இதேவேளை, சிரியாவில் நீடித்து வரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சரை ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அரபு நாடுகள் கூட்டமைப்பின் சிரியாவுக்கான அமைதித் தூதர் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் சிரிய விவகாரம் குறித்து ரஷ்ய வெளிவிவகார அமைச்சருடன் விரிவாக ஆராயப்பட்டதாக ஐ.நா. அமைதித்தூதர் லக்தர் பிரஹிமி தெரிவித்தார்.

சிரியாவில் கடந்த 21 மாதங்களாக அரசுக்கும், அரசு எதிர்ப்பாளர்களுக்கும் இடையே கடும் சண்டை நீடித்து வருகிறது. இதனால் சுமார் 45 ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

சிரிய அரசுக்கு எதிராகப் பல்வேறு நாடுகள் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இந்த நிலையில் சிரியாவின் நெருங்கிய நட்பு நாடான ரஷ்யாவும் தற்போது சிரிய அரசுக்குக் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கராச்சி நகரில் குண்டு வெடிப்பு

## 5 பேர் சாவு; 50 பேர் காயம்

இஸ்லாமாபாத், டிசெ.31

பாகிஸ்தானின் கராச்சி நகரில் ரயில், நிலையத்தில் நேற்றுமுன்தினம் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் 5 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர்.

கண்டோன்மென்ட் ரயில் நிலையம் அருகே ஒரு பஸ்ஸைக் குறிவைத்து இந்தக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் அந்த பஸ் தீப்பற்றிக் கொண்டது.

குண்டு வெடிப்பில் அந்தப் பகுதியில் இருந்த கடைகள், கட்டடங்கள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள் பலத்த சேதமடைந்தன. இந்த சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர்.

இந்த தகவலை சிந்து மாகாண சுகாதாரத் துறை அமைச்சர் சகீர் அகமது உறுதிப்படுத்தினார்.. காயமடைந்தவர்களில் 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு இதுவரை எந்தவோர் அமைப்பும் பொறுப்பேற்க வில்லை. சம்பவ இடத்தில் ஏராளமான பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.


# ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, டிசெ.31

ஜப்பானில் வடகிழக்கு பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவித்துள்ளது.

ஜப்பானின் வடக்குப் புறநகரான சென்டாயில் 123 கி.மீ. தொலைவில் உணரப்பட்டதாகவும் ரிச்டர் அளவுகோலில் 5.5 ஆக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் அது ரிச்டர் அளவுகோலில் 7.3 ஆக பதிவானதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சேத விவரங்கள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.



அமெரிக்காவில் அண்மையில் பாடசாலைச் சிறார்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 28 பேர் உயிரிழந்தனர். அதனையடுத்து பாடசாலை ஆசிரியர்களுக்கு துப்பாக்கிச் சுடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# சூகி பின்னிய ஸ்வெட்டர் 25 லட்சத்துக்கு ஏலம்



ரங்கூன், டிசெ.31

மியன்மாரின் ஜனநாயகக் கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி தயாரித்த 'ஸ்வெட்டர்' 25 லட்ச ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசு வென்ற சூகி தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

30 ஆண்டுகளுக்கு முன்பு லண்டனில் வசித்த போது, ஸ்வெட்டர் பின்னும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

இவர் தயாரித்த 3 ஸ்வெட்டர்கள், யாங்கூன் நகரில் சூகியின் கட்சியினரால் ஏழைக் குழந்தைகளின் கல்விக்காக ஏலம் விடப்பட்டது. மூன்று லட்ச ரூபாவுக்கு ஆரம்பமான ஏலம், 25 லட்ச ரூபாவில் முடிந்தது.

# யூ டியூப் மீதான தடையை நீக்க பாக். முடிவு

இஸ்லாமாபாத், டிசெ.31

யூ டியூப் இணையதளம் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க முடிவு செய்துள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

''பொதுமக்களிடமிருந்து வந்துள்ள வேண்டுகோளை ஏற்று யூ டியூப் மற்றும் டுவிட்டர் இணையதளங்கள் மீதான தடையை நீக்க முடிவு செய்துள்ளோம். அதே சமயம் இஸ்லாம் மதம் குறித்து அவதூறான செய்திகள், படங்கள், பாலியல் தொடர்பான படங்களைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என்று ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கர் ஒருவர் தயாரித்த, 'இன்னசென்ஸ் ஆப் முஸ்லிம்ஸ்' என்ற திரைப்படம் குறித்த காட்சிகள் யூ டியூப் இணையதளத்தில்வெளியானதைத்தொடர்ந்து உலகமெங்கும் முஸ்லிம் நாடுகளில் எதிர்ப்பு எழுந்தது. அத்திரைப்படத்தில் முகமது நபியை அவமதித்து விட்டதாகக் கூறி பல்வேறு போராட்டங்கள் நடந்தன.

அதைத் தொடர்ந்து யூ டியூப், டுவிட்டர் உள்ளிட்டவற்றை தடைசெய்ய பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரஃப் கடந்த செப்ரெம்பரில் நடவடிக்கை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# படகு விபத்து 22 பேர் சாவு

## ஆபிரிக்கா கினியா பிஸாவில் துயரம்

மேற்கு ஆபிரிக்க நாடான கினியா பிஸாவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்தனர். 69 பேரைக் காணவில்லை.

அளவுக்கு அதிகமாக ஆள்கள் பயணித்தமையாலும் சீரற்ற காலநிலையாலுமே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கினியா பிஸா நாட்டின் பலோமா தீவில் இருந்து பிஸாவ் நகருக்கு அட்லாண்டிக் கடல் வழியே 97 பேரை ஏற்றிக் கொண்டு சென்ற படகே விபத்துக்குள்ளானது.

இதில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று மீட்புக்குழுவினர் தெரிவித்தனர். 69 பேரின் நிலை குறித்து தகவல் எதுவும் கிடைக்க வில்லை. அவர்களைத் தேடும் பணியில் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அட் லாண்டிக் கடலில் பலோமா உட்பட சுமார் 100 சிறிய தீவு கள் உள்ளன.

அவற்றில் பெரும் பாலான தீவுகளில் மனிதர்கள் யாரும் வசிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆப்கன் எல்லையில் கடத்தப்பட்ட

## பாக். படையினர் 20 பேர் தலிபான்களால் சுட்டுக்கொலை

பாகிஸ்தானில் தலிபான் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்ட 22 இராணுவத்தினர் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருவர் தப்பித்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் - ஆப்கன் எல்லையில் உள்ள பெஷாவர் பகுதியின் சோதனைச் சாவடிகளில் இருந்த 22 இராணுவத்தினரை தலிபான்கள் கடத்திச் சென்றிருந்தனர். இவர்களை மீட்கும் முயற்சியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில், கடத்தப்பட்ட இடத்திலிருந்து 4 ஆவது கிலோமீற்றரில் அவர்கள் 20 பேரின் உடல் கள் மீட்கப்பட்டுள்ளன. கடத்தப்பட்டவர்களில் இருவர் மட்டுமே தப்பித்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

# சர்ச்சைக்குரிய தீவு விடயத்தில் தொல்லை தருகிறது ஜப்பான்

## குற்றஞ்சாட்டுகிறது சீன அரசு

பீஜிங், டிசெ.31

தியாவோயூ தீவுகள் அருகே ரோந்துப் பணியில் ஈடுபடும் தமது விமானத்துக்கு, ஜப்பான் இராணுவ விமானம் தொந்தரவு கொடுக்கிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளது சீனா.

இதுதொடர்பாக சீனா கடல் நிர்வாகத்துறை செய்தித் தொடர்பாளர் ஷி கிங் பெங் தெரிவித்ததாவது:-

''எங்கள் கடற்படை விமானத்திற்கு ஜப்பான் தொந்தரவு செய்கிறது. இந்த நடவடிக்கையின் மூலம், ஜப்பான் அரசு பிரச்சினையை அதிகரிக்கிறது.



கிழக்கு சீனா கடற்பகுதியில் 150 கிலோ மீற்றர் தொலைவு வரை வான்வெளியில் சீனா வழக்கமான கண்காணிப்பு பணியில் ஈடுபடுகிறது. 2007ஆம் ஆண்டு முதல் இதற்காக கண்காணிப்பு விமானம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்போது ஜப்பான் இடையூறு செய்வதன்மூலம், உண்மையை மறைத்து குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறது''- என்றார்.

ஆனால், இரண்டாம் உலகப் போர் முடிந்தபோது சரண் அடையும் வரை பிரச்சினைக்குரிய தீவுகள் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்ததாக ஜப்பான் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொலம்பியாவின் காலி நகரில் ஆண்டுதோறும் நடைபெறும் கலாசார மற்றும் பாரம்பரியமிக்க பெரியா டீ காலி திருவிழாவில் நடைபெற்ற காலி வீஜோ என்ற அணிவகுப்பில் அப்பகுதி மக்கள் ஒப்பனையிட்டு கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளப் பாதிப்பை சரிசெய்து கொண்டு மீண்டும் 3 ஆவது முறையாக

# அணு ஆயுத சோதனைக்கு தயாராகிறது வடகொரியா?

வோஷிங்ரன், டிசெ.31

அணு ஆயுத சோதனைக்கு வடகொரியா தயாராவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வெள்ளப் பாதிப்பிலிருந்து அணு உலையை சரிசெய்துள்ள வட கொரியா, அணு ஆயுத சோதனைக்குத் தயாராகி வருகிறது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ள சேதத்தில் பாதிக்கப்பட்ட அணு பரிசோதனை மையத்தை, வட கொரியா சீரமைத்து உள்ளது. இரண்டு வார முன்னறிவிப்புடன் அணு ஆயுத பரிசோதனை நடத்த அது தயாராக உள்ளது. செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட படங்களை ஆய்வு செய்ததன் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளது'' என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

வடகொரியா அண்மையில் நீண்ட தூர ஏவுகணையை பரீட்சித்துப் பார்த்தது. இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. வடகொரியா மீது பொருளாதாரத் தடையை விதிக்கவும் அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெய்த கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், வடகொரிய அணு உலைகள் பாதிப்படைந்தன. அவற்றை வடகொரியா மிகத் துரிதமாகச் சரி செய்துள்ளது.

முன்னர் இருதடவைகள் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விமான விபத்து; ரஷ்யாவில் 4 பேர் சாவு




மொஸ்கோ, டிசெ.31

ரஷ்யாவில் பயணிகள் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவின் ரெட் விங்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த விமானம் செக் குடியரசுக்குச் சென்று விமான நிலையத்துக்கு திரும்பியது.

தரையிறங்கும் போது ஓடு பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 8 பேர் படுகாயமடைந்தனர்.

விமானியின் தவறே விபத்துக்கு காரணம் என சந்தேகிக்கப்படுகிறது.

# போர்ப் பயிற்சியில் ஈடுபடுகிறது ஈரான்

வளைகுடா பிராந்தியத்தில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த ஹோமுஸ் நீரிணைப் பகுதியில் ஈரான் தொடர்ந்து கடற்படை போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இந்தப் பயிற்சி ஹோமுஸ் நீரிணையைச் சுற்றிய 10 லட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பில் நடப்பதாக கடற்படை தளபதி ஹபிபோலோசையரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

'' இந்தப் பயிற்சியின் போது கப்பலிலிருந்து ஏவுகணைகளைச் செலுத்துவது, நீர்மூழ்கிகள் மூலம் தாக்குதல் நடத்துவது போன்றவை பரீட்சிக்கப்படுகின்றன. எதிரி நாட்டுப் படைகளின் ஆக்கிரமிப்பு முயற்சியை தடுத்து நிறுத்துவதற்கான ஒத்திகை, வெற்றிகரமாக நடத்தப்படுகிறது'' என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**ஹோமுஸ் நீரிணைப் பகுதியில் 10 லட்சம் சதுர கி.மீ. பரப்பில் தொடர்ந்துபோர்ப்பயிற்சி**

அணுசக்தித் திட்டங்களை முடக்குவதற்காக, ஈரான் மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் ஹோமுஸ் நீரிணையை ஈரான் அடைத்துவிடும் என்றும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

## அமெரிக்க முன்னாள் போர்த்தளபதி சாவு

குவைத் மீது படையெடுத்த ஈராக்கின் நடவடிக்கையை முறியடித்த அமெரிக்க இராணுவத் தளபதி காலமானார்.

1991ஆம் ஆண்டு, சதாம் உசேன் தலைமையிலான ஈராக் படை குவைத் நாட்டை ஆக்கிரமிக்கும் நோக்குடன் போர்நடவடிக்கையை மேற்கொண்டது.

அதனை தொடர்ந்து அமெரிக்க படைகள் நடவடிக்கை பாலைவனப் புயல் என்ற பெயரில் தலையிட்டு சதாம் உசேனின் படைகளை விரட்டியடித்தன.

இந்த போரை தலைமை ஏற்று நடத்தியவரே நார்மன் ஸ்வார்ஜ்கோப். இவர் உடல் நலக் குறைவால் தனது 78ஆவது வயதில் மரணமடைந்தார்.

# 2 ஆம் உலகப் போர் குண்டை கண்டெடுத்தான் 3 வயதுச் சிறுவன்

இங்கிலாந்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் இரண்டாம் உலகப் போரில் வெடிக்காத குண்டொன்றைக் கண்டுபிடித்துள்ளான்.

இங்கிலாந்தில் நார் போலக் அருகேயுள்ள இங்ஸ்லின் பகுதியைச் சேர்ந்த சிறுவன் சோன்னி கேடெர் (வயது 7). இவனது தந்தை வெடி பொருள்களை கண்டறியும் 'மெட்டல் டிடெக்டர்' கருவியை நத்தாருக்குப் பரிசாக வாங்கி கொடுத்தார்.

தற்போது விடுமுறை என்பதால் சோனியும், அவனது சகோதரனும் மெட்டல் டிடெக்டரை வைத்து விளையாடினர். ஓர் இடத்தில் இந்த மெட்டல் டிடெக்டர், பீப் என சத்தம் எழுப்பியது. சத்தம் வந்த இடத்தில், ஓர் உலோக குமிழ் கிடந்தது.

சகதி படிந்து கிடந்த அந்த உலோகத்தை, சிறுவர்கள் வீட்டுக்கு எடுத்து வந்தனர். அதைப் பார்த்த சிறுவர்களின் தந்தைக்கு சந்தேகம் ஏற்பட்டது.

தன்னுடைய இராணுவ நண்பரை அழைத்து, உலோக குண்டை காட்டினார். இராணுவ நண்பர் அதை வெடி குண்டு என உறுதி செய்தார்.

இதனையடுத்து பொலிஸாரிடம் அந்த வெடிகுண்டு ஒப்படைக்கப்பட்டது. இரண்டாம் உலகபோரின்போது, இந்த வெடிகுண்டு பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது.

# தங்கத்தில் முதலிடம் சீனா!

பீஜிங், டிசெ.31

உலகளவில் தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடுகளில் சீனா முதலிடம் வகிக்கிறது. தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக தங்கம் உற்பத்தியில் சீனா முதன்மை நாடாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மட்டும், 323 தொன் தங்கம் உற்பத்தி செய்துள்ளதாக தங்க உற்பத்தியாளர் சங்கம் அறிவித்துள்ளது. இது கடந்தாண்டை விட 11 வீதம் அதிகமாகும். எனினும் உலகளவில் அதிக தங்கத்தை பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இன்று வரை இந்தியா தான் முதலிடம் வகிக்கிறது

## முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

கீழ் வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பத்தை தலைவர், முல்லை கிழக்கு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும்.

1. பொது முகாமையாளர் - 101/08
சம்பள அளவுத்திட்டம் - 11200 -14100
140x10 -150x10

தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றில் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

நிபந்தனைகள்

01. வயதெல்லை 18-45 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் (சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது)
02. கூட்டுறவு சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப் படிவம் அனுப்பப்படவேண்டும்.
03. விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதியும் இணைக்கப்படவேண்டும்.
04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விசேட படிகளும் வழங்கப்படும்.
05. மேற்படி பதவிக்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

***விண்ணப்ப முடிவு திகதி: 2013.01.14***

தலைவர்
முல்லைத்தீவு கிழக்கு,
பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கரைச்சி குடியிருப்பு, முல்லைத்தீவு.
(37378) (15.6)

## ஆப்கனில் நிலநடுக்கம்

காபூல்,டிசெ.31

ஆப்கனில இந்துகுஷ் மலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் தலைநகர் காபூல், ஜலாலாபாத் மற்றும் அவற்றை சுற்றியுள்ள பகுதிகள் அதிர்ந்தன. வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கினர்.

5.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்த தகவல் எதுவும் வெளியாகவில்லை. ஜலாலாபாத் மற்றும் பாகிஸ்தானின் சிட்ரால் பகுதிகளுக்கு இடையே பூமிக்கு அடியில் 115 கி.மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கனில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் பாகிஸ்தானிலும் எதிரொலித்தது. தலைநகர் இஸ்லாமாபாத் மற்றும்வடமேற்குபாகிஸ்தானில் பூமி குலுங்கியது. அதனால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

## ஈர விழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03.12.1983
அரக்கரின் பறிப்பில் 31.12.2010



அமரர்
## தேவராசா கேதீஸ்தரன்
(கேதீஸ்- தீசன்)

ஈராண்டுகள் ஆனபோதும் ஈரம் காயவில்லை கண்களில்
நூறாண்டுகள் ஆனாலும் இதயங்களில் இருக்குமையா - உன்முகம்
பார்புகழ நீ வாழ்ந்தாய் உன்னவருடன் - இன்று
நாவறண்டு போகின்றோம் நாமெல்லாம் உனையிழந்து

மாலையிட்டவளை மண்ணிலே தனியாக விட்டு
வேளை வந்ததென்று சீக்கிரமாய் யார் அழைத்தார் உனை?
திக்குத்திசை தெரியாமல் இவ்வுலகிலே உன்னவள்
புயலில் அகப்பட்ட துரும்பானாள் உனையிழந்து
தேற்றுவார் யாருமின்றி நினைவிழந்து - தினம்
கனவினில் உனை காண்கிறாள் நீ அறியாயோ?

பத்து மாதம் சுமந்தவளை பாதியிலே விட்டுவிட்டு
கத்திக்கதறி சொந்தங்கள் உனை சுற்றி வர
வற்றிப்போகு மளவிற்கு உன் நண்பர் கண்ணீர் விட
சற்றும் இரக்கமில்லாது எமையெல்லாம்
அனாதையாக்கிவிட்டு ஏனையா போனாய்....?
ஈராண்டு அல்ல இருநூறு ஆண்டுகள் - ஆனாலும்
மறவாது உன் நினைவுகள் தீரா........

[illegible] கிழக்கு,
பருத்தித்துறை.
(36949) (45.6.7)

மனைவி, தாய்,
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் சாதனை புரிந்தது எப்படி?

(9)

வேறு விதமாக யோசித்துப் பார்க்கலாம். ஷேக்ஸ்பியர் தனக்கு இருந்த இந்த ஆற்றலைப் பயன்படுத்தாமல் இருந்திருந்தால், ஷேக்ஸ்பியர் என்கிற ஒரு மேதை இருந்தது நமக்குத் தெரியாமலே போய் இருக்கும். தன்னை உணர்ந்தார். தன்னுடைய திறமையை உணர்ந்தார். அதைக் கதாபாத்திரங்கள் மூலம் பிறருக்கு உணர்த்தினார். அதுதான் அவருடைய சாதனை.

மனித இயல்புகளை உணர்ந்தவர்கள் நாடகங்கள், கதைகள் ஆகியவற்றைத் தான் எழுத வேண்டும் என்கிற அவசியமில்லை. வேறு துறைகளிலும் தமது திறமையைப் பயன்படுத்தி வெற்றி காண முடியும். சாதனை புரியமுடியும். நம்முடைய காலத்தில் வாழ்ந்த எம்.ஜி. ஆர். இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு.

மனித இயல்புகளை நன்கு அறிந்தவர் அவர். அவர் புகழ் பெறுவதற்கு மட்டுமல்ல, பெற்ற புகழைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் தன்னுடைய இந்தத் திறமையை வெகு இலாவகமாக பயன்படுத்தினார் வெற்றிக் கண்டார்.

'ஒரு மனிதனுடைய இதயத்தை அவனுடைய வயிற்றின் மூலம் சுலபமாக அடைந்து விடலாம்' என்று சொல்வார்கள். ஒரு மனிதனுக்கு நீங்கள் எதைக் கொடுத்தாலும் போதும் என்கிற திருப்தி ஏற்படாது. உணவைக் கொடுத்தால், எவ்வளவு சுவைத்துச் சாப்பிடுகின்றாரோ, எவ்வளவு அதிகமாக சாப்பிடுகிறாரோ ஏதோ ஒரு நிலையில் போதும், போதும் என்று சொல்லி விடுவார். தன்னை நாடி வந்தவர்களுக்கெல்லாம் உணவளித்து உபசரிப்பதில் எம்.ஜி. ஆருக்கு இணை அவரே.

மனித இயல்புகளைச் சரிவரப் புரிந்து கொண்டு செயற்பட்டு வெற்றி கண்டவர் அவர். தனக்கு அறிமுகமாகும் எவருடனும் எளிதில் தோழமை உணர்ச்சி கொண்டு பழகுவார். புகழ் பெற்ற மனிதராகவும், செல்வாக்குப் பெற்ற அரசியல் தலைவராகவும் விளங்கிய காலத்திலேகூட, இந்தப் பழக்கத்தை அவர் கைவிட்டதில்லை.

அவருடைய மகத்தான வெற்றிக்கு முக்கிய காரணம் மனிதர்களின் மனப்பான்மையைப் புரிந்து கொண்டு அவர் செயற்பட்டதுதான் என்று சொல்லிவிடலாம். நாட்டில் ஏழைகள் தான் அதிகம். ஏழை என்பதால் எவரும் தன்னுடைய ஆசைகளுக்கு எல்லை கட்டிக் கொண்டு விடுவதில்லை. அந்த ஆசைகள் நிறைவேறாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றவர்களே அதிகம். இதை நன்கு உணர்ந்திருந்தவர் எம்.ஜி.ஆர். படங்களில் அவர் ஏற்ற பாத்திரங்களில் ஏழையின் பாத்திரத்தையே அவர் ஏற்பார். அல்லது கொடுமைக்குள்ளானவன், அநீதிக்கு ஆட்பட்டவன் போன்ற பாத்திரங்களையே ஏற்று நடிப்பார். அந்தக் கதாபாத்திரம் கதையில் வெற்றி பெறுகின்றபோது, படம் பார்க்கின்ற ஏழை எளியவர்கள் தங்களுடைய பிரதிநிதி ஒருவர் வெற்றி பெற்றதைப் போன்ற உணர்ச்சியைப் பெற்றார்கள். அது ஒரு வகையான திருப்தியை அவர்களுக்கு ஏற்படுத்தியது.

தனக்குள்ள ஆற்றலை அவர் உணர்ந்தார். சாதாரண மனிதர்களின் மன இயல்பையும் உணர்ந்தார். இரண்டையும் தொழிலில் அவர் இணைத்தபோது அது ஒரு பெரிய சாதனையாக உருப்பெற்றது. ஆட்சிக்கு வந்தபோதும் மக்களிடம் தனக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்குக்கு என்ன காரணம் என்பதை உணர்ந்து, அது பாதிப்புக்கு உள்ளாகாதபடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். மதிய உணவுத் திட்டம் அதற்கொரு உதாரணம்.

எம்.ஜி.ஆரைப் பற்றி இப்படி எத்தனையோ விடயங்களைச் சொல்லிக் கொண்டு போக முடியும். தன்னுடைய திறமையை ஒருவன் உணர்ந்து, தன்னைச் சுற்றியுள்ள மக்களின் மனநிலையையும் உணர்ந்து, தன்னுடைய ஆற்றலை மக்களுக்கு உணர்த்துகின்றபோது அது ஒரு சாதனையாகப் பரிணமிக்கிறது.

நம்மில் பெரும்பாலோர் நினைத்ததை சாதிக்க முடியாமல் தவிப்பதற்குக் காரணம் முதலில் நம்மை நாமே உணர்ந்து கொள்ளுவதில்லை. அடுத்து நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களைப் பற்றியே உணர்ந்து கொள்ளுவதில்லை. இரண்டும் சரிவர இருந்தால்தான் நம்முடைய ஆற்றலைப் பிறருக்கு வெற்றிகரமாக உணர்த்த முடியும்.

ஆற்றல் என்பது எந்த ஒருவருக்கு மட்டுமே சொந்தமானது அல்ல. ஆற்றலில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆற்றலே இல்லாதவர் என்று எவருமே இல்லை. வெற்றி பெற்ற மனிதர் எவருடைய வாழ்க்கையை வேண்டுமானாலும் படித்துப் பாருங்கள். அவர்களது வாழ்க்கையில் இரண்டு நிலைகள் இருப்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

தங்கள் ஆற்றலை அவர்கள் உணர்ந்து கொண்டது ஒரு நிலை. அதை மற்றவர்களுக்கு உணர்த்தியது இன்னொரு நிலை.

நம்முடைய ஆற்றலை நாம் உணரும்போது தான் அதை நாம் எப்படி செயற்படுத்துவது என்று தீர்மானிக்க முடியும். ஆற்றலை உணராதவர்கள், தெளிவில்லாதவர்களாக எங்கெங்கோ சுற்றி அலைகின்றார்கள். மற்றவர்களையும், அவர்கள் உணரத் தவறி விடுகின்ற போது, எதிலும் நிலை கொள்ள முடியாதவர்களாகத் தடுமாறுகிறார்கள்.

சாதனை என்பது சூனியத்தில் நிகழ்வதில்லை. ஒன்றை ஆதாரமாக வைத்துதான் அது செயற்பட வேண்டும். அந்த ஆதாரம் எது? அதை நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும் மற்றவர்கள் உங்களுக்குக் கண்டு பிடித்துக் கொடுக்கமாட்டார்கள் காரணம், ஆற்றலை உணர்ந்த ஒவ்வொருவரும் நிலை கொள்ளுவதற்கு ஏதோ ஒன்றைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் ஆற்றலுக்குத் தேவையான நிலையைக் கண்டு பிடித்துக் கொடுப்பதற்கு அவர்களுக்கு நேரம் இருக்கவழியில்லை.

உங்களிடம் உள்ள ஆற்றல் எது என்று கண்டு பிடியுங்கள். அதை மற்றவர்கள் ஏற்கின்ற சூழ்நிலையை உருவாக்குங்கள். பிறகு சாதனை புரிவது எளிமையாகிவிடும். ஒரு சாதனை இன்னொரு சாதனைக்கு அத்திபாரமாகிவிடும்.

பி.சி.கணேசன் (தொடரும்)

# எங்களுடைய வரலாறு திரிபுபட ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது

## வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் உரை

சுன்னாகம், டிசெ.31

எங்களுடைய வரலாறு திரிபுபடுத்தப்பட அனுமதிக்கக்கூடாது என்பதில் நாம் அக்கறை உடையவர்களாக இருக்கவேண்டும். இதற்காக கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் எமது இனம், மொழி சார்பான பூரணமான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் பெற்றுக்கொண்ட வரலாற்று அறிவுத்தேடலை பிறருக்கும் எதிர்கால இளம் சந்ததியினருக்கும் வழங்கவேண்டும்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு வலி.தெற்கு பிரதேச சபையின் புதிய கட்டடத்தில் இடம்பெற்றபோது அந்த நிகழ்வில் கலந்து தலைமையுரை ஆற்றும் போது இவ்வாறு தெரிவித்தார் வலி. தெற்கு பிரதேச சபையின் தலைவர் தி.பிரகாஷ்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் மிகத் துரிதமான வளர்ச்சிப் போக்கில் சுழலுகின்ற பூமியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது வரலாற்றுத் தொடர்புடைய அடையாளங்களை அடையாளப்படுத்த வேண்டும்.

எமது பண்பாட்டு அடையாளங்களை அடையாளப்படுத்துவதற்கும் பேணுவதற்கும் பல்வேறு செயற்பாடுகளை எமது பிரதேச சபையின் வளங்களுக்கும் வருமானத்துக்கும் ஏற்ப செயற்படுத்தி வருகின்றோம். இவற்றை அதி உச்சமாக பயன்படுத்தி பயன்பெறுகின்ற வகையில் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மக்களின் நலன் மீது அக்கறை கொண்டவர்கள் இணைந்து அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கவேண்டும்.

நீண்ட நெடிய பாரம்பரியத்தை கொண்ட இனவிடுதலைப் போராட்டத்தில் எமது பிரதேச மக்கள் அளித்த ஆணையை ஏற்று எங்களுடைய அதிகாரத்துக்கு எட்டிய வகையில் எமது பிரதேச மக்களுக்காக சேவையாற்றி வருகின்றோம். மக்களுக்கு சேவையாற்றுவதற்காக எமது உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் உள்ளனர்.

எமது மாணவர்கள் எமது பிரதேசம் சார்ந்த ஒழுங்கு முறைக் கல்வியில் பரீட்சையை நோக்கமாக கொண்ட கற்றல் செயற்பாடுகளில் மாத்திரம் கவனம் செலுத்தி வருகின்றார்கள். மாணவர்களுடைய அறிவைப் பரீட்சைக்கு மாத்திரம் அல்லாது அவர்களுடைய அறிவை வளர்க்கும் நோக்கிலும் நூலகமானது சேவையாற்றிவருகின்றது.

எமது கல்வி முறையில் வாழ்க்கை முழுவதும் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டதாக விளங்குகின்றது. இப்பரீட்சை நோக்குக்கு அப்பால் அறிவை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களை நூலகங்கள் வழங்குகின்றன.

கல்வியின் ஊடாகவும் எமது வரலாற்று அடையாளங்களை கற்பதன் ஊடாகவும் சர்வதேச ரீதியில் எமது பலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். எமது பலத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு வரலாற்று பண்பாட்டு ரீதியிலான அடையாளங்களைப் பேணுகின்ற கல்வி அறிவு அவசியமானதாக அமைகின்றது. இதன் ஊடாகவே எம்மை நாம் அடையாளப்படுத்திக் கொள்ளமுடியும்.

இன்றைய இளைஞர், யுவதிகள் கலாசார அடையாளங்களில் இருந்து விலகிச் செல்வதைப் பார்க்கின்றோம். அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை நாம் அனுபவித்துக்கொள்கின்றோம். நாங்கள் பெற்ற அறிவு எங்களை சமூகத்தில் முன்னிலைப்படுத்த உதவவேண்டும். எமது மாணவர்களாகிய எதிர்கால சந்ததியினர் நிறையவிடயங்களை கற்று அறிவில் உயர்ந்தவர்களாக உருவாக வேண்டும்.- எனத் தெரிவித்தார்.

(ம-38)

# அளவெட்டி பாடசாலைகளின் போட்டி முடிவுகள்

அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தால் அளவெட்டி பிரதேச பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பண்ணிசைப்போட்டி, பேச்சுப்போட்டி, மனனப்போட்டி ஆகியவற்றின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பண்ணிசைப்போட்டி**

**பாலர் கீழ்ப்பிரிவு ஆண்** - கு.விஸ்வசுந்தர், ம.சுடரகன், உ.சோபிதரன் (மூவரும் அருணோதயக் கல்லூரி)

பாலர் கீழ்ப்பிரிவு பெண்- சி.கோமகள் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), ம.அபிரமா, பா.மதுமிதா - (இருவரும் அருணோதயக் கல்லூரி)

**பாலர் மேற்பரிவு ஆண்** - ச.புவனகுமரன் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை), ஆ.மதுசன் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), த.விதுசன் (அருணோதயக்கல்லூரி)

**பாலர் மேற்பிரிவு பெண்** - செ.ஜென்சிகா (அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்), செ.உஷானி (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை), சி.டனுசியா

**கீழ்ப்பிரிவு ஆண்**- நி.சிவாஜன் (அருணோதயாக்கல்லூரி), ம.கஜவரன் (அருணோதயக் கல்லூரி), பே.நிமலன் அளவெட்டி ஞானோதய வித்தியாலயம்

**கீழ்ப்பிரிவு பெண்** - தே.அனுசியா (அருணோதயக் கல்லூரி), ப.திவிஜா (அருணோதயக் கல்லூரி), ஜெ.சுகன்யா (அளவெட்டி வெட்டி அருணாசலம் வித்தியாலயம்)

**மத்தியபிரிவு பெண்**- த.காயத்திரி (அருணோதயக்கல்லூரி), கோ.தேனுகா (அருணோதயக் கல்லூரி)

**மேற்பிரிவு ஆண்**- சி தர்சன் (அருணோதயக் கல்லூரி)

**மேற்பிரிவு பெண்**- சி.சாருகா (அருணோதயக் கல்லூரி)

**பேச்சுப் போட்டி**

**பாலர் கீழ்ப்பிரிவு ஆண்** - உ.சோபிதரன் (அருணோதயக் கல்லூரி), ம.சுடரகன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), சி.தனுசன் (அளவடக்குஅ.மிதகபாடசாலை)

**பாலர்கீழ்ப்பரிவு பெண்** - சி.கோமகள் (அள.வெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), ப.தீபிகா ( அருணோதயக் கல்லூரி), வி.இந்துஜா (அருணோதயக்கல்லூரி)

**பாலர் மேற்பரிவு ஆண்** - ம.லட்சிகன் (அருணோதயக் கல்லூரி), இ.லக்ஷன் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை), தெ.வானுஷன் அளவெட்டி ஞானோதய வித்தியாலயம்.

**பாலர் மேற்பிரிவு பெண்** லோ.தனுப்பிரியா (அளவெட்டி வெட்டி அருணாசலம்), ஆ.தமிழிசை (அருணோதயாக் கல்லூரி), உ.கம்சாயினி (அருணோதயக் கல்லூரி)

**கீழ்ப்பரிவு ஆண்** - ம.கஜவரன், ம.மேருஜன், ச.பிரவீன்ராஜ் (மூவரும் அருணோதயக் கல்லூரி)

**கீழ்ப்பரிவு பெண்** - ப.சாத்விகா (அருணோதயக் கல்லூரி), ம.ஆர்த்திகா (அளவெட்டி வெட்டி அருணாசலம்), தெ.தனுஜா (அளவெட்டி ஞானோதய வித்தியாலயம்)

**மத்திய பரிவு ஆண்** - நி.அருட்பிரியன் (அளவெட்டி வெட்டி அருணாசலம்), மோ.பானுஜன் (அருணோதயக்கல்லூரி), த.யதுர்சன் (அருணோதயக்கல்லூரி)

**மத்திய பிரிவு பெண்** - இ.இனோஜா, சி.நிரோஜினி, அபிராமி ( மூவரும் அருணோதயக் கல்லூரி)

**மேற்பிரிவு ஆண்**- சி.நிதர்சன் (அருணோதயக் கல்லூரி)

**மனனப்போட்டி**

**பாலர் கீழ்ப்பிரிவு ஆண்**- கு.விஸ்வசுந்தர், உ.சோபிதரன், ம.சுடரகன் (மூவரும் அருணோதயக் கல்லூரி) சி.தனுசன் ( அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை)

**பாலர் கீழ்ப்பிரிவு பெண்**- சி.கோமகள் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை), பா.கேதுஷா (அளவெட்டிவடக்குஅ.மி.த.க.பாடசாலை), வி.இந்துஜா (அருணோதயக் கல்லூரி)

**பாலர் மேற்பரிவு ஆண்**- ஆ.மதுஸன் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), ம.லட்சிகன் (அருணோதயக் கல்லூரி), சு.புவனகுமரன் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை)

பாலர் மேற்பிரிவு பெண் - உ.கம்சாயினி (அருணோதயக் கல்லூரி), வ.சானுஜா (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை), ந.சுவர்ணா (அருணோதயக் கல்லூரி)

(ம-38)

# அபிவிருத்திப் பேரவையின் நிர்வாகிகள் தெரிவு

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் பொதுக் கூட்டம் கடந்த வாரம் பளை, முல்லையடியில் உள்ள பேரவை மண்டபத்தில் பேரவையின் உபதலைவர் ச.மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் கு.ந.பாலச்சந்திரன், உபதலைவர் செ.சிவசிதம்பரம், செயலாளர் த.ரதீஸ்குமார், இணைச்செயலாளர் க.சண்முகதாஸ், பொருளாளர் க.கிருஷ்ணபிள்ளை, நிர்வாக உறுப்பினர்களாக சி.இராமகிருஷ்ணன், சி.பேரம்பலம், மா. ஸ்ரீபன், செ. சரவிந்தன், திருமதி கா.ஜெயகுமாரி, திருமதி இ.ரேணுகா ஆகியோரும் இவர்களுடன் முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் ஏழு பேர் கொண்ட மத்திய குழுவும் பேரவையின் செயற்பாட்டை விருத்தி செய்யும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்டது.

பேரவையின் போஷகர்களாக பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பளை பிரதேச சபை செயலாளர் சி.சிவப்பிரகாசம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் பேரவையின் பொதுச் சபை உறுப்பினர்களாக பளைப் பிரதேசத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவில் இருந்தும் தலா இருவர் வீதம் 36 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கடும்புலி வாழும் காடு நன்றே..'

சி.ஜெ. ரவிகிருஷ்ணன்

இலங்கையாகட்டும், இந்தியாவாகட்டும் மாணவர்களின் போராட்டத்தை அடக்கி ஒடுக்கிவிட வேண்டும் என்று ஆளும் அரசுகள் நினைக்கின்றன. கொடுங்கோலன் ஆட்சி செய்யும் நாட்டைக் காட்டிலும், ''கடும்புலி வாழும் காடு நன்றே' (நற்றிணை) என்கிற நிலைக்கு மக்கள் மெல்ல மெல்ல தள்ளப்பட்டு வருகின்றனர்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஆளும் அரசுகள் மீதான மக்களின் கோபம் மாணவர்களின் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் படிக்கும் தமிழ் மாணவர்கள் அனைவரும் ''மாவீரர்கள் தினம்' அனுசரிக்கப் போகிறார்கள் என புலனாய்வுத்துறையினருக்கு சந்தேகம் வலுத்தது. அதன் விளைவாக, பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் பல்கலைக்கழக மாணவர் விடுதிகளுக்குள் புகுந்து திடீர் சோதனை நடத்தினர்.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைதியான முறையில் மாணவர்கள் பேரணி நடத்தினர். அந்தப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் மீது பொலிஸார் ஈவுஇரக்கமின்றி தாக்குதல் நடத்தினர்.

இதன் தொடர்ச்சியாக, 11 பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட மாணவர்களுக்கு ''மறுவாழ்வு' அவசியம் என இலங்கை அரசு கூறியுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் உடல் மற்றும் உளவியல் ரீதியான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட உள்ளனர் என்பதை மறைமுகமாக, ''மறுவாழ்வு' என்று கூறுகிறது இலங்கை அரசு.

இந்த நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவியரை விசாரணைக்கு வரும்படி, பயங்கரவாத புலனாய்வுத் துறையினர் நோட்டீஸ் அனுப்பி வருகின்றனர். அவர்களிடம் பல மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டு, இறுதியாக அவர்கள் எச்சரித்து அனுப்பப்படுகின்றனர்.

இலங்கை அரசின் இத்தகைய நடவடிக்கைகள் அவர்களுக்கு மீண்டும் புலிகள் மீதான பயம் ஏற்பட்டுவிட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஏனெனில், போர் முடிந்து 3 ஆண்டுகளாகிவிட்ட நிலையிலும், அங்கு தமிழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் போதிய அளவு இல்லை. தமிழர்கள் பெரும்பான்மையாக இருந்த பகுதிகள் இராணுவ மையமாக்கப்பட்டுவிட்டன. சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு மிக அதிகமாகவே உள்ளது.

கோவில்கள் இருந்த இடங்களில் எல்லாம் புத்த விகாரைகள் அமைக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

இராணுவக் கட்டுப்பாடு நிறைந்த அந்த நாட்டில் போராட்டம் நடத்தினால், எத்தகைய விளைவு ஏற்படும் என்பதை அனைவரும் அறிவர்.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு, சம உரிமை கோரி தமிழர்கள் நடத்திய போராட்டத்துக்கு மாணவர்கள்தான் வலுசேர்த்தனர். இலங்கை அரசின் இரக்கமற்ற அடக்குமுறையால், அகிம்சை வழிப்போராட்டம் பிற்காலத்தில் ஆயுதமேந்திய போராட்டமாக மாற்றம் அடைந்தது. அதே போன்ற சூழல்தான் மீண்டும் அங்கே உருவாகியுள்ளது.

அகிம்சை வழியில் போராட்டம் நடத்தியவர்களைத் தொந்தரவு செய்யாமல் விட்டுவிட்டால், அவர்கள் பாட்டுக்கு கோஷங்களை எழுப்பிவிட்டு கலைந்து சென்று இருப்பர்; ஆனால், அடக்க முயலும்போதுதான் அந்தப் போராட்டம் வலுவடைகிறது.

காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு, ஊழல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் பெட்ரோல், டீசல், சமையல் கேஸ், மண்ணெண்ணெய், உரம் போன்றவற்றின் மானியத்தைக் குறைத்து வருகிறது.

இதனால் விலைவாசி கடுமையாக உயர்ந்து, மக்களின் கோபத்துக்கு மத்திய அரசும், அந்த அரசை பாதுகாக்கும் கூட்டணி அரசியல் கட்சிகளும் ஆளாகி வருகின்றன. இந்தக் கோபத்தின் வெளிப்பாடுதான் பாலியல் வன்முறைக்கு எதிரான மாணவர்களின் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

டில்லியில் நடந்த ஒரு பாலியல் வன்முறை சம்பவத்துக்கே இத்தனை பெரிய போராட்டம் நடந்தது என்றால், இலங்கையில் அன்றாடம் நடக்கும் பாலியல் மற்றும் உளவியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகும் மக்களின் கோபத்தை வெளிப்படுத்தும் வகையில் எத்தகைய போராட்டம் நடைபெற்றிருக்க வேண்டும்?

மாணவர்கள் என்ற உணர்வில் இந்தப் போராட்டத்துக்கு சிங்கள மாணவர்கள் அமைப்பினரும் ஆதரவு தெரிவித்து இருந்தனர். இந்தப் போராட்டம் ஒட்டுமொத்த மாணவர்களின் போராட்டமாக மாறாமல் இருப்பதற்காக, கைது செய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள்' என சித்திரிக்கும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும் பணியை இலங்கை ராணுவத்தினர் செய்து வருகின்றனர்.

டில்லியில் நடந்த போராட்டத்தில் மாணவர்கள் தாக்கியதால் ஒரு காவலர் இறந்தார் என தகவல் பரப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து, காவலர் மரணத்துக்குக் காரணமானவர்கள் எனக் கூறி, 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் போராட்டத்தில் பங்கேற்கும் மாணவர்கள் பயப்படுவர் என்பது மத்திய அரசின் கணிப்பு.

இலங்கையாகட்டும், இந்தியாவாகட்டும் மாணவர்களின் போராட்டத்தை அடக்கி ஒடுக்கிவிட வேண்டும் என்று ஆளும் அரசுகள் நினைக்கின்றன என்பதே உண்மை.

*(நன்றி : தினமணி)*

# பொலிஸ் பணிகளை அரசியல்வாதிகள் இனி கையில் எடுக்கும் அபாயம்...!

சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையின் ஒரு பகுதி

கோகுலன்

> "நாட்டின் சட்ட செயற்பாட்டு பொறிமுறை சுயாதீனத்தை இழந்தால், உள்ளூர் அரசியல் வாதிகள் பொலிஸ் பணிகளை கையில் எடுக்கும் அபாயம் ஏற்படும்."

அளவுக்குமீறிய வாக்குறுதிகளோடு அரசியல் கட்சிகள் வெற்றிபெற்று பதவிக்குவரும் போது அரசமைப்பில் கை வைப்பதற்கு அரசுகளுக்கு அது வசதிவாய்ப்பாக போய் விடுகிறது. அவ்வாறான செயற்பாடுகளைநிறைவேற்றுஅதிகாரமுள்ள ஜனாதிபதியை சர்வவல்லமையுள்ள ஒருவராக ஆக்கிவிடுகின்றது. அரசமைப்புக்கு பிற்காலத்தில் செய்யப்பட்ட 18 ஆவது திருத்தமானது நாடாளுமன்றத்தை தரம் குறைத்துவிட்டது மட்டுமன்றி அப்பதவியின் தனி நபர் அதிகாரங்களை மேலும் பலப்படுத்தி விட்டது. அந்த வகையில்தான் நிறைவேற்று ஜனாதிபதியானவர் பிரதம நீதியரசரையும் சிரேஷ்ட நீதிபதிகளையும், பொலிஸ் துறைத் தலைவர் மற்றும் தேர்தல் ஆணையாளர் போன்ற முக்கிய பதவியாளர்களையும் நியமினம் செய்பவரானார்.

எதிர்க்கட்சியினரின் பங்களிப்பானது வெறும்ஆலோசனை வழங்குவதாக அமைந்துள்ளது. அவ்வாறு தொடர்ந்தும் செயல்படுவதற்கு அவர்கள் மறுத்துள்ளார்கள்.

மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பல அமைப்புகள் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டு விட்டன. நிறுவனங்களுக்கான அதிகாரம் இந்த வகையில் பலவீனப்படுத்தப்பட்டு விட்டது.

இருந்த போதிலும் இந்த தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குரிய நிறுவனங்கள், உயர் நிலையிலுள்ள நாடாளுமன்றம் போன்றவை புனிதத்துவத்தை இழந்து விடாமல் இருந்து வருகின்றன.

சட்டங்களை இயற்றுவது போன்ற அவைகளால் அதிகாரபூர்வமாக ஆவணங்களாக பதியப்படுவன - அவைகளில் சில வழக்கொழிந்து போனாலும், இன்னும் சில திருத்தங்களுக்குள்ளானாலும் வருங்கால தலைமுறையினருக்காக பாதுகாப்பாக இருக்கின்றன. அவ்வாறு தான் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களும் அமையும். அவ்வாறு அவைகளால் கண்டு பிடிக்கப்படுவன சம்பந்தப்பட்ட துறைகளுக்கான ஒரு சாசனம் போன்று அமைந்துவிடுகின்றன.

அந்த வகையில் தான் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் 1,575 பக்கங்கள் கொண்ட அறிக்கையும் அமைகின்றது.

விசாரணை நடைமுறைகள் நீதியாகவும் நியாயமாகவும் அமையவில்லை எனக் கூறி குழுவிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நால்வர் வெளிநடப்பு செய்திருந்தபோதிலும் அரச தரப்பைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்களால் மட்டுமே அறிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தாலும் கூட அது பொது மக்களுக்கும் தலைமுறை தலைமுறையாக வரப்போகின்ற எதிர்கால நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆவணமாகவே இருக்கப்போகின்றது. எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய நாடாளுமன்ற ஆய்வுகளுக்கு அது ஒரு அளவுகோலாகவே இருக்கப் போகின்றது.'

இன்றைய செயல்பாடுகளுக்கு முன்னைய கூற்றுகளும் அறிக்கைகளும் அவைகளை நியாயப்படுத்த எடுத்துக்காட்டாக முன் வைக்கப்படும் இந்த கால சூழ்நிலைகளில் இது முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாறான நியாயப்படுத்தலானது சில சமயங்களில் சாதாரண தர்க்க நியாயங்களையும் சட்டச் சிக்கல்களையும் மீறிச் சென்றுவிடுவதையும் காணமுடிகின்றது.

2013 ஆம் ஆண்டில் நாடு அடிவைத்து ஏறத்தாழ பத்து நாள்களில் பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணையை நாடாளுமன்றம் விவாதிக்கவிருக்கின்றது. ஜனவரி 9 ஆம் திகதியிலிருந்து மூன்று நாள்கள் மட்டுமே அந்த விவாதம் நடைபெறவிருந்தாலும் அன்றைய தினத்தை குற்றபிரேரணை மீதான விவாதத்தை நடத்துவதற்காக ஒதுக்கிவிட பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. விரும்பவில்லை. 10 -11 ஆம் திகதிகள் அந்த விடயத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதிக நாள்க்ள் தேவையென எதிர்க்கட்சியினர் கோருவார்கள் என்று தெரிகின்றது. எதிர்க்கட்சிகள் விரும்பினால்பத்து நாள்களுக்கும் கூட விவாதத்தை நடத்தலாம் என்று சபாநாயகர் நாமல் ராஜபக்ஷ முன்னர் தெரிவித்திருந்ததின் அடிப்படையில் இந்த கோரிக்கை வைக்கப்படும் என்று தெரிகின்றது.

தெரிவுக்குழு தனது விசாரணையை எட்டு நாள்களுக்குள் முடித்து கொண்டிருக்கும் நிலையில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும் பத்து நாள்களுக்கு விவதத்தை நடத்த அனுமதிக்கப்படுமா என்பது சாத்தியமில்லை.

அரசின் கூட்டாளிக் கட்சிகளில் சிலவற்றால் நாடாளுமன்றத்தை தற்காலிமாக ஒத்திப்போட்டுவிட்டு இப்போது உருவாகியுள்ள நீதித்துறைக்கும் சட்டம் இயற்றும் துறைக்கும் இடையிலான முட்டுக்கட்டையை முடிவுக்கு கொண்டுவரும்படி ஆலோசனை முன்வைத்துள்ளபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் குற்றப்பிரேரணை செயற்பாட்டினை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது.

குற்றப் பிரேரணையை முன்னெடுக்க வேண்டாம் என்று பௌத்த கிறிஸ்தவ, இந்து மற்றும் முஸ்லிம் சமயப் பெரியார்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் இரண்டும் நாடாளுமன்றத்தின் செயல்பாடுகளின் செல்லுபடியாகும் தன்மை குறித்து விசாரித்து தீர்ப்பு வழங்க 'தங்கள் முன்வந்துள்ள மனுக்கள் மீது தீர்ப்புகள் வழங்கப்படும் வரை மேல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் அரசு அவைகளுக்கு செவி சாய்ப்பதாயில்லை.

அரசின் இந்த செயற்பாடு தொடரும் என்று தமது அமைச்சர்களுக்கு தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் நிலைப்பாட்டை தற்காத்துக்கொள்ளும் படியும் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார். அவர்களில் சிலர் இவ்விடயம் குறித்து மௌனம் காத்துவந்தமை தெரியவந்ததன் பேரில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

★★★

கிறிஸ்மஸ் வாரத்தில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க கொழும்பு பேராயர் கார்டினல் மல்கொம் ரஞ்சித்துடன் சுமார் 45 நிமிடங்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேணை செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாம் என்று அரசைக்கோரும் அறிக்கையில் ஏனைய சமயத் தலைவர்களுடன் பேராயரும் கையெழுத்திட்டிருந்தார் என்பது குறிப்பிடக்கூடியது. கடந்த வாரம் பிரதம நீதியரசர் சரித்திர பிரசித்தி பெற்ற களனி பௌத்த விகாரைக்குச் சென்று சமய சடங்குகளில் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறான நிறைவேற்று அதிகாரத்துறை - சட்டம் இயற்றும் துறை ஆகியவை ஒரு பக்கமாகவும் நீதித்துறை இன்னொரு பக்கமாகவும் இருந்து ஆபத்துகள் நிறைந்த விளைவுகளைக்கொண்டு வரக்கூடிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நீதித்துறையை அரசியல் மயமாக்குவதானது நாட்டின் சட்ட ஒழுங்கு செயற்பாடுகளை சீர்குலைத்துவிடும் எனப்பதில் சந்தேகமில்லை.

சட்டத்தை செயல்படுத்தும் பொறிமுறையானது சுயாதீனமாக செயல்படாது போகுமானால் உள்ளூர் அரசியல் வாதிகள் பொலிஸாரின் கடமைகளை செய்யத் தொடங்கிவிடுவார்கள் என்ற அச்சம் நிலவுகின்றது. அது இலங்கையர்களை மட்டுமல்ல இந்த நாட்டுக்கு வருகை தருபவர்களையும் பாதிப்பதாக இருக்கப்போகின்றது. இவ்வாறாக பிரமுகர்களை சம்பந்தப்படுத்தி எழுந்துள்ள இந்தப் பிரச்சினையானது மிகமுக்கிய தேசிய பிரச்சினையாக வெளிப்பட்டிருக்கின்றது. இதன் விளைவுகள் எப்படி இருந்தாலும் அதன் தாக்கம் எதிர்காலத்தில் பல தலைமுறைகளைப் பாதிப்பதாக இருக்கப்போகின்றது என்பது திண்ணம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களால் உருவாகிய வவுனியா அவலம்

வானன்

வவுனியா மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டமைக்கு இயற்கையை மட்டுமே நாம் குற்றம் சுமத்துவதில் எவ்வித நியாயமும் இல்லை.

மனிதர்களின் திட்டமிடாத நடவடிக்கைகளே இதற்கு மூலகாரணியாக அமைந்துள்ளன. போருக்குப் பின்னர் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கெனத் தயாரிக்கப்பட்ட திட்டங்களிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. மக்களின் நலன்கருதி எதனை முதலில் மேற்கொள்ள வேண்டுமென்பதில் தவறுகள் நேர்ந்துள்ளன. மேலும் திட்டமிடப்படாத குடியேற்றத் திட்டங்களும், நில அபகரிப்பும் அனுமதி பெறாத கட்டட நிர்மாணங்களும் மக்களின் அவலங்களுக்கு வழி வகுத்துள்ளன.

போர் காரணமாக 1990 இற்குப் பின்னர் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து வந்தனர். இதன்போது வேப்பங்குளம், குருமன்காடு, நெளுக்குளம், பம்பைமடு, திருநாவற்குளம், தவசிக்குளம் ஆகிய இடங்கள் குடியேற்றங்கள் ஏற்பட்டன. இவையாவும் அரசியல் கட்சிகள், அரசு சார்பானவர்கள் ஆகியோரின் முழு உதவியுடன் இடம்பெற்றன.



மழைநீர் வழிந்தோடிச் சென்று குளங்களை அடைய வேண்டிய இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்புகளாகக் காட்சியளிக்கின்றன. சில குளங்கள் கூட மூடப்பட்டு அவை இன்று வீடுகளாகவும் பயிர் நிலங்களாகவும் காட்சியளிக்கின்றன. இவ்வாறு குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் உரிய வகையில் வடிகால்கள் அமைக்கப்படவில்லை.

நீர் வழிந்தோடும் வசதிகள், காற்றோட்டம், வீதியமைக்கும் நடைமுறைகள் என்பன முற்றாகவே மீறப்பட்டன. ஏதோ அவசரத்தில் மண் வீதிகளையும் மண் அணைகளையும் அமைத்தார்கள். இதன் விளைவுகளை இன்று வவுனியா மக்கள் அனுபவிக்கின்றனர். வவுனியா மாவட்டத்திலே 1990 இற்கு முன்னர் சுமார் ஆயிரத்து 200 குளங்கள் இருந்ததாகவும் அவை தற்போது 406 ஆக சுருங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணாமல் போன குளங்கள் யாவும் இன்று குடியிருப்புகளாகவும் வயல் நிலங்களாகவும் காட்சியளிக்கின்றன. இந்த நிலையில் மழைநீர் சென்றடைவதற்கு எங்கே இடமுள்ளது. மேலும் எஞ்சிய குளங்களும் உரிய வகையில் புனரமைக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் மழை வெள்ளம் ஓடிச் செல்ல முடியாத நிலையில் மக்களுக்கு பெரும் அவலத்தை விளைவித்து வருகின்றது.

அண்மையில் பெய்த மழையால் வவுனியாவில் சுமார் 4700 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

பல பயிர் நிலங்கள் நாசமாகியுள்ளன. ஏராளமான வீடுகள் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன. பல வீதிகளில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. குறிப்பாக ஏ-9 வீதியில் இரண்டு தொடக்கம் நான்கு அடிவரை வெள்ளம் பாய்ந்து சென்றதால் சில மணித்தியாலங்கள் போக்குவரத்துத் தடைகளும் ஏற்பட்டன. இதனால் ஆயிரக் கணக்கான மக்கள் இடைநடுவில் அவலப்பட்டு சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஏ-9 வீதி காப்பெற் வீதியாக உருப்பெற்று வருகின்றது. ஆனால் நீர் வழிந்து செல்லும் வசதிகள் தொடர்பாக எவரும் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. இதன் விளைவுகள் எல்லாம் மக்களின் தலைகளின் மீதே சுமத்தப்படுகின்றன.

மேலும் இங்கு ஒரு விடயத்தையும் குறிப்பிட்டேயாக வேண்டும். சில வயல் நிலங்களில் இராணுவத்தினர் முகாம் அமைத்துத் தங்கியிருந்ததால் அந்த வயல் நிலங்களுக்குரியவர்கள் குளங்களை அண்மித்த நீர் வழிந்தோடும் இடங்களிலும் காடுகளிலுள்ள நீர் செல்லக் கூடிய இடங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். இதுவும் மழைநீர் தேங்கி நிற்பதற்குரிய காரணங்களில் ஒன்றாகிவிட்டது.

எனவே இயற்கையை மட்டுமே நாம் குற்றம் சுமத்துவதை விடுத்து எம்மை நாமே திருத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக மழைநீர் தங்குதடையின்றி வழிந்தோடக் கூடிய இடங்களில் அமைந்துள்ள சகல ஆக்கிரமிப்புக்களும் அகற்றப்பட வேண்டும்.

வடிகால் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். வீதிகள் யாவும் உரிய வகையில் புனரமைக்கப்படுவதோடு அவற்றை ஒட்டியதாக நீர்வழிந்து செல்லும் வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் சட்டத்துக்கு முரணான வகையில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்பு என்பன தடை செய்யப்படல் வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் அமைக்கப்படும் குடியிருப்புகளுக்கான அனுமதிகள் மறுக்கப்பட வேண்டும்.

இவை யாவும் சீரான வகையில் மேற்கொள்ளப்படாது விடில் இனிவரும் காலங்களில் வவுனியா மக்களை ஆண்டவன் கூடக் காப்பாற்ற மாட்டார் என்பதுதான் யதார்த்த நிலைமையாகும். ★

# ஏழிசையாயும் இசைப்பயனுமாய்...


செ.சொர்ணலிங்கம்

ஏழிசை என்பது 'ஸரிகமபதநி' எனும் ஏழு சுரங்களினால் விரிவுறும் இசை. அது தும்புரு, நாரதர், அநுமான் தொட்டு இராவணனோடாக மிளிர்ந்து அருணகிரிநாதர், புரந்தரதாசர், அன்னமாச்சாரியார் மூலமாக இக்கால இசைக்கு வழி வகுத்தது. இவர்களைத் தொடர்ந்து முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர் எனும் தமிழிசை மும்மணிகளாலும் பின்னர் தியாகராஜசுவாமிகள், சியாமா சாஸ்திரிகள், முத்துச்சாமி தீட்சதர் ஆகிய சங்கீத மும்மூர்த்திகளாலும் பொலிவு பெற்ற இசையானது இன்று உலகப் புகழ் மிக்க கர்நாடக இசை எனும் பெயருடன் மிளிர்கின்றது.

இந்த சுருக்கமான இசை வரலாற்றில் உள்ளடங்கிய தெய்வீக அற்புத நிகழ்வுகள் ஏராளம். தமிழ் கூறும் நல்லுலகம் அன்று திராவிடம் என்னும் பெயருடன் விரிந்து பரந்து இருந்தது. அந்நியர் வருகைக்கு முன்னர் பாரதம் எங்கும் தமிழிசையை அடிப்படையாகக் கொண்ட ஒரே இசையே பரந்திருந்தது. முகமதியரின் வருகையினால் வடக்கில் இந்துஸ்தானி இசை உருவாகிற்று. கிறிஸ்துவுக்கு முன் 3ஆம் நூற்றாண்டில் எழுந்த பஞ்சமரபு எனும் நூல் தமிழிசை, நாடகத்தின் தொன்மையையும் நுண்மையையும் பறைசாற்றி நிற்கின்றது. இதில் யாழ்மரபு, ஆடல் மரபு, குரலிசை மரபு வாத்திய மரபு, தாளமரபு என தொல்காப்பியர் காலந்தொட்டு தமிழ் நாட்டில் வழங்கிவந்த ஐந்து மரபுகளை மிக்க ஆழமாகவும், அகலமாகவும், நுண்மையாகவும் ஆய்ந்து எழுதப்பட்டுள்ளது.

பஞ்சமரபு நூல் மிக அண்மைக் காலத்தில் (50 வருடமளவில்) ஏட்டுருவில் கண்டெடுக்கப்பட்டு சில பத்து வருடங்களுக்கு முன்னரே கா. பா. சுந்தரனாரின் உரை விளக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. மிக அண்மைக் காலங்களாகவே இது பல்கலைக் கழகங்களால் இசைப்பட்டப்படிப்பிற்கு நூலாக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பஞ்சமரபு முதலிய நூல்களால் முத்தமிழ் தொன்று தொட்டு சிறப்புறுவதை உணர முடிகின்றது. மேலும் விநாயகர், நாரதர், சரஸ்வதி, தட்சணாமூர்த்தி ஆகிய தெய்வங்களின் கைகளில் வீணையும், நந்தி கைகளில் மத்தளமும் ஆடல் அரசனின் 108 தாண்டவம் உள்ளிட்ட ஆடல்வகைகளும் முத்தமிழின் தொன்மையை ஐயம் திரிபற விளக்கி வந்துள்ளன. தமிழ் தன் இன்றைய எழுத்து வரி வடிவை அன்று பிராகிருத வடிவில் கொண்டிருந்தாலும் அதன் கலை வடிவங்களின் மரபு பாரதம் எங்கும் தொன்று தொட்டே காலத்திற்கேற்ப சில மாற்றங்களுடன் சிறப்புற்றிருந்தது.

ஆரிய மயமாதல் போன்ற சில சரித்திர நிகழ்வுகளால் வழிபாட்டு முறைகளும் இசையும் ஒரு கலப்புப் பிறப்பாக்க நிலையை அடைந்தன. அதனால் தமிழிசை கருநாடக இசை எனப் புதுவடிவும் புதுப்பொலிவும் பெற்றது. சலம்பூவொடு தூபம் கொண்டு வணங்கிய இலகுவான தமிழ் வணக்க முறைகள் சமஸ்கிருத வணக்க முறைகளாக மாறியதுபோல சங்ககாலப் பாவினங்களுக்கான தூங்கலிசை, துள்ளலிசை முதலியவற்றையும், தேவாரப் பண்களையும் அடிப்படையாகக் கொண்ட தமிழிசை தெலுங்கின் கைப்பட்டு கர்நாடக இசையாக மிளிர்ந்தது. தெலுங்கரும் கன்னடரும் திராவிட இனத்தின் பிரிவினரே. இவர்களுடன் சமஸ்கிருத மொழி வளம் மிக்க ஆரியரும் அக்கால தெலுங்கரின் ஆட்சி அதிகாரச் சிறப்பினால் தத்தம் மொழிகளில் கருநாடக இசையை வளர்க்கவே, தமிழிசையே யாவற்றுக்கும் மூலம் என்பது மறக்கப்பட்டது. தமிழிசை வித்துவான்களும் தமிழ் நாட்டில் வாழ்ந்த சங்கீத மும்மூர்த்திகளின் பாடற் சிறப்புகளை உணர்ந்து அதனையே தாமும் கச்சேரிகளில் கைக்கொண்டனர். இதனால் ஏழிசை வளர்ந்ததே ஒழிய தமிழகத்தில் இசைப்பயன் கிடைக்கப்பெறவில்லை. இசை ஆர்வலர்கள் கச்சேரிகளில் தமிழ் இசைப் பாடல்கள் பாடப்படும் வரை முகச்சோர்வுடன் காணப்பட்டமையை மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அண்ணாமலை அரசர் ஆகியோர் வேதனையுடன் தம் பேச்சிலும் எழுத்திலும் குறிப்பிட்டுள்ளதுடன் தமிழிசை இயக்கத்தினை ஆரம்பித்து மக்கள் ஏழிசையை மட்டுமன்றி இசைப் பயனாகிய இறை இன்பத்தையும் பொருளறிந்து பயன் பெற வேண்டும் எனக் கருதி பல நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். அதன் [illegible] அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.



இந்நிலையில் சைவசித்தாந்தத்தை இசையினூடாக வளர்த்து சைவத்துக்கும், தமிழுக்கும், தமிழிசைக்கும் காலத்துக்கேற்ற தொண்டினைச் செய்யும் முனைப்புடன் கொழும்புச் சிவத்திருமன்றம் கடந்த இருவருடங்களாக அறிமுறை செய்முறை வடிவங்களில் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்ற மகுடத்தில் 550 பக்கங்கள் வரையான ஆய்வு நூலையும், இசை மற்றும் இசை மேற்பட்டம் பெற்ற பத்து இசையாளர்களைக் கொண்டு சைவசித்தாந்தப் பொருளடங்கிய தமிழிசை மும்மணிகள் போன்றோர்களின் 50 பாடல்களையும் திருமுறைகளில் இருந்து 20 பாடல்களையும் தலா முக்கால் மணி நேர பத்துக் கச்சேரிகளாகப் பாடி இறுவட்டாக்கியுள்ளது. இதில் இசை மாணவர்களுக்காய உருப்படிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. நூலின் பற்பல தலைப்புக்களில் தமிழிசையின் தொன்மை, பஞ்சமரபு நூல் விளக்கம், பண்ணிசைச் சிறப்பு, 160 இந்திய வாக்கேயகாரர்கள், இசையாளர்கள், ஈழத்து இசை வல்லார்கள், வாத்தியக்காரர்கள், கூத்து மற்றும் கதாப்பிரசங்கத்தினர் முதலிய 187 கலைஞர்கள் விவரிக்கப்பட்டுள்ளனர். மேலும் சிறப்பாக இசைக்காய சுத்தமாயையில் வரும் நாத விந்துக்கள் உள்ளிட்ட சைவசித்தாந்தக் கண்ணோட்டம் மிக ஆழமாக ஆயப்பட்டுள்ளது. கர்நாடக சங்கீத பாடமுறைகளில் வழங்கப்பட்டு வரும் 120க்கு மேற்பட்ட தெலுங்கு மற்றும் சமஸ்கிருத சொற்களின் இயன்ற வரையான தமிழப் பதங்களும், அவற்றின் பொருள் விளக்கங்களும் இந்நூலில் இடம் பெறுதல் மிகவும் பயனுள்ள அம்சமாகும். மேலும் தமிழிசையின் அவசியமும், தென்னிந்தியாவின் தமிழிசை இயக்க வரலாறும், அதனால் ஈழவர் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களும், சினிமாவின் தாக்கத்தினால் தூய இசை கெடுவதும், இறுவட்டில் இடம் பெறும் பாடல்களின் விவரங்களும் சிலவற்றின் பொருள் விளக்கங்களும் மாணவர்களும் பிறரும் பயன் பெறும் பொருட்டு எழுதப்பட்டுள்ளன.

முத்தமிழின் சிறப்பாக இசையின் தத்துவம், சிறப்பு, தெய்வீகம் இசையாளர்களினதும் இசையினதும் சரித்திரம், பண்ணாய்வு அருஞ்சொற்பத விளக்கங்கள், பதினொராம் திருமுறை பாடுவதற்கான ஆய்வு, புராண திருமுறை ஓதல்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய தற்காய ஆலோசனைகள் போன்ற பல்வகை ஆய்வுகளோடு கூடிய முத்தமிழ் களஞ்சியமாக இந்நூல் அமைந்திருப்பது பற்றி இந்திய இலங்கைப் பேராசிரியர்கள், அறிஞர்கள் பலரும் தத்தமது பாராட்டுரை அணிந்துரை, விதப்புரை, நயப்புரை மூலமாக நூலுக்கு அணி செய்துள்ளனர். முத்தமிழைக் கற்கும், ஆயும், விரும்பும் மாணவர்கள் ஆசிரியர்கள் ஆய்வாளர்கள் பொது மக்கள் ஆகிய பல தரப்பினருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாய் அமையும் என்பது அறிஞர் பலரின் கருத்தாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தின் அடிமைகள்

ஓர் ஆட்டுக்குட்டியின் கழுத்தில் கயிற்றைக் ஒருவர் இழுத்துக் கொண்டு செல்கின்றார். அது அவன் பின்னாலே போய்க் கொண்டிருந்தது.

''எங்கு போய்க் கொண்டு இருக்கின்றாய்'' என்று அவனைப் பார்த்துக் கேட்டார் ஒரு பெரியவர்.

''சந்தைக்கு இழுத்துக் கொண்டு போகின்றேன்!'' என்றான்.

''எதற்காக?'' என்று கேட்டார். அவன் ''விற்பதற்கு'' என்றான்.

''ஏன் இதை இப்பொழுது விற்க வேண்டும்?'' என்று கேட்டார்.

''நாளை எங்கள் வீட்டில் ஒரு விசேஷம் அதற்கு பணம் தேவை அதுதான் இதை இன்றைக்கு விற்றால் நாளைக்கு நல்லபடியாக அதைக் கொண்டாடலாம்''

இவ்வாறு சொல்லி விட்டு அவன் அந்த ஆட்டுக்குட்டியை இழுத்துக் கொண்டு போய்விட்டான்.

அப்பொழுது அந்தப் பெரியவர் கூறினார்:-

''அந்த ஆட்டுக்குட்டியை அவன் எப்படி இழுத்துக் கொண்டு போகின்றானோ அதே மாதிரிதான் அவனை எதிர்காலம் இழுத்துக் கொண்டு போகின்றது'' என்றார்.

அவர் சொல்கின்ற அந்தக் கருத்துக்கு விளக்கம் என்ன என்றால்...

நாளைக்கு அவன் வீட்டில் நடக்கப் போகின்ற விஷேஷம் தான் அவனை சந்தைக்கு போக வைக்கின்றது.

நாளைக்கு பலன் கிடைக்கும் என்பதற்காக அவன் இன்று பாடுபடுகின்றான்.

எதிர்காலப் பலனை எதிர்பார்த்துச் செய்கின்ற செயல் இது.

இந்தச் செயலை தூண்டுவது எதிர்காலம்தான்.

கழுத்திலே கயிறு கட்டப்பட்ட ஒரு விலங்கு இழுத்துச் செல்லப்படுவது போல எதிர்காலம் எங்களை இழுத்துக் கொண்டு போகின்றது என்பது பெரியவர்கள் (ஓஷோ)கருத்து.

மனிதனுடைய செயற்பாடு எப்படி இருக்கின்றது என்றால்.

அவன் கண் பார்வை எதிர்காலத்தில் இருக்கின்றது.

கையின் செற்பாடு நிகழ்காலத்தில் இருக்கின்றது.

அதாவது செயல் நிகழ்காலத்திலே இருக்கின்றது. அதன் பலன் எதிர்காலத்தில் இருக்கின்றது.

எதிர்காலம் என்பது அறியப்படாமல் இருக்கின்றது. நிச்சயமில்லாமல் இருக்கின்றது.

எதிர்காலம் என்று சொல்கின்றோமே தவிர அது இப்பொழுது இல்லாத ஒன்று.

அது ஒரு நம்பிக்கை. ஒரு கனவு... ஓர் எதிர்பார்ப்பு... அவ்வளவுதான்.

அந்த நம்பிக்கையிலேதான் நாங்களும் ஒரு மாடு மாதிரி எதிர்காலம் நோக்கி இழுத்துச் செல்லப்படுகின்றோம்.

விலங்குக்கு வடமொழியில் பசு என்று பெயர். அது அர்த்தமுள்ள சொல்.

பசு என்றால் பாசம், விலங்கு, தளை என்ற அர்த்தம் உள்ளது.

'பசு'-பிடிக்கப்பட்ட ஒன்று. அடிமையான ஒன்று.

அந்த அர்த்தத்தில் நாங்கள் எல்லாம் பசுக்கள்.. காரணம், நாம் எதிர்காலத்தின் அடிமைகள். எதிர்கால நம்பிக்கையில் வாழ்பவர்கள்-என்கிறார் ஓஷோ.


எங்கள் வாழ்க்கையுடன் மூக்கணாங்கயிறு எதிர்காலத்தின் கைகளில் இருக்கின்றது.

மனிதன் இன்று வாழ்வதெல்லாம் எதிர்கால நம்பிக்கையில்தான். நாளை அவன் அடுத்த நாளின் நம்பிக்கையில் வாழப்போகின்றான்.

அந்த மறுநாளுக்கும் இன்று எப்படியோ அதுபோலவேதான்.. அதாவது... இன்றைய மாதிரித்தான் இருக்கப் போகின்றது. அதாவது அதற்கு அடுத்த நாளைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கப் போகின்றான்.

அதனால் அவன் என்றும் வாழ்வது இல்லை.

எதிர்காலத்தில் வாழ்வதற்காக அவன் ஒவ்வொரு நாளும் தள்ளிப் போட்டுக் கொண்டு போகிறான். அப்படிப் போய் இவனுடைய வாழ்வு முழுமையாக வாழாமல் போய்விடுகின்றது. கடைசியில் நினைத்துப் பார்ப்பான்.



''காலமெல்லாம் வாழ ஆசைப் பட்டேன். ஆனால் உண்மையிலேயே நான் வாழவே இல்லையே'' என்று நினைத்து வருத்தப்படுவான். வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாத மனிதர்கள் இவ்வாறு தான் வீணாக்கப் போகிறார்கள்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அத்தியடிப் பகுதி பெண்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் கிராம அபிவிருத்திச் சங்கம்




**லக்ஸ்மன்**

யாழ்.பிரதேச செயலகப் பிரிவின் அத்தியடிப் பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்குடனும் அந்தப் பகுதியில் வாழும் பெண்களின் பொருளாதார வலுவூட்டலையும் கருத்தில் கொண்டு 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே அத்தியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம். இந்தப் பிரதேசத்தின் மகளிர் நலனுக்கு உகந்த செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாக மகளிர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என இந்தப் பகுதியில் உள்ளவர்கள் விடுத்த கோரிக்கையின் பேரில் சங்கம் அமைக்கப்பட்டது.

முதலில் யாப்பு முறைகளுக்கு அமையாமல் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் இருந்துள்ளது. மகளிர் சங்கத்தின் முதல் தலைவியாகப் பொறுப்பேற்றவர் திருமதி எஸ். பத்மஶ்ரீ. யாப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டதும் அதன் தலைவியாக திருமதி செல்லத்துரை சச்சிதானந்ததேவி தெரிவு செய்யப்பட்டார்.

24.02.2007 இல் குறித்த தெரிவு இடம் பெற்றது. முப்பது அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட குறித்த சங்கத்தில் தற்போது 75 இற்கும் மேற்பட்ட பெண்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

முதலில் யாப்பு முறைகளுக்கு அமையாமல் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் இருந்துள்ளது. மகளிர் சங்கத்தின் முதல் தலைவியாகப் பொறுப்பேற்றவர் திருமதி எஸ். பத்மஶ்ரீ. யாப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டதும் அதன் தலைவியாக திருமதி செல்லத்துரை சச்சிதானந்ததேவி தெரிவு செய்யப்பட்டார்.

கிராமத்தின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் நோக்கில் முதலாவதாக கல்வித் தேவையை இந்தப் பகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய க.பொ.த. சாதாரண தரம் படிக்கும் 14 மாணவிகளுக்கு இலவச கணித வகுப்புக்களை ஆரம்பித்தது.

அதைத் தொடர்ந்து தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரையான மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களையும் ஆரம்பித்து ஆண்டு ஐந்துக்கான புலமைப்பரிசில் பாடப் புத்தகங்களையும் க.பொ.த சாதாரண தரத்திற்கான சில அத்தியாவசிய பாடநூல்களையும் வழங்கி உதவியுள்ளது.

ஆர்.குமார சாமியூடாக மேற்படி உதவிகள் பெறப்பட்டுள்ளன. பாஷையூர் சென். அன்ரனிஸ் மற்றும் கோட்டை மீனாட்சி பாடசாலை மாணவர்களுக்கும் இந்த உதவிகள் கிடைக்கப் பெற்றன.

மாணவர்களுக்கான இலவச வகுப்புக்களை நடத்துவதற்காக ஆசிரியர்களுக்கு உதவித் தொகையை அத்தியடியைச் சேர்ந்த ந.ஜெயராசா வழங்கியிருந்தார். எமது பகுதிக்கான கல்வி வளர்ச்சிக்காக மகளிர் சங்கம் தன்னால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டுள்ளது. கல்விக்காக உதவ விரும்புபவர்களை நாம் பெருமையுடன் வரவேற்கிறோம் என்கிறார். தற்போதைய தலைவியாக திருமதி புவனேஸ்வரி இராஜகோபால் விளங்குகிறார். கல்வியுடன் சுகாதாரத்துக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் சுகாதாரக் கருத்தரங்குகளை அவ்வப்போது நடத்துகின்றது. இதற்கென சுகாதாரப் பரிசோதகர்கள், உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல்களும் இடம் பெறுகின்றன.

சமீபத்தில் சிக்குன்குனியா நோய்த்தாக்கம் ஏற்பட்ட காலத்திலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளிலும் அது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஆங்காங்கு நடத்தியது. மக்களுக்கு இது தொடர்பான செயற்பாடுகளை சுகாதார சேவை உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்படுத்தி வந்துள்ளது. வைத்திய அதிகாரிகளான ரவீந்திர குமார், சுதர்சனன் ஆகியோரின் அனுசரணையுடன் இலவச மருத்துவ முகாம்களை ஏற்படுத்தி வைத்திய பரிசோதனைகளை அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கி உதவியுள்ளது.

சுயதொழில் முயற்சிகள் ஊடாக தமது பகுதியில் உள்ள பெண்கள் தமது வாழ்வாதாரத்தை வளப்படுத்திக் கொள்ளக் கூடியதான தொழிற் பயிற்சிகளை உருவாக்கிக் கொடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விதாதா தொழில்நுட்ப அமைப்பின் மூலம் மெழுகுவர்த்தி, ஊதுபத்தி போன்றவற்றை உற்பத்தி செய்யக் கூடிய பயிற்சிகளை யுவதிகளுக்கு வழங்கியுள்ளது. இதனால் யுவதிகள் பயன்களைப் பெற முடிகின்றது.

கழிவுப் பொருள்களைக் கொண்டு வீட்டு அலங்காரப் பொருள்கள் உற்பத்திக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. கேக் மற்றும் மணப்பெண் அலங்காரம் போன்றவைகளும் பயிற்சியில் இருப்பதால் இன்று அலங்காரத்தின் மூலம் பெருமளவு வருவாயை குறிப்பிட்ட பெண்களால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. சித்த மருத்துவப் பகுதியால் அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய இடம்பெற்ற மருத் துவ முகாமில் இலவசக் கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ள நிவாரணம்

### நாசிவன்தீவு மக்களுக்கு



மட்டக்களப்பு,டிசெ.31

மட்டக்களப்பு, கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாசிவன்தீவு கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாசிவன்தீவு பல்தேவைக் கட்டடத்தில் வைத்து அந்த நிவாரணப் பொருள்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விநியோகிக்கப்பட்டன.

அந்த நிவாரணப் பொருள்கள் குடும்பமொன்றுக்கு 600 ரூபா வீதம் 337 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் எம்.பவளகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருண்மொழி, கோறளைப்பற்று பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜெயசேகர், கிராம அலுவலக உத்தியோகத்தர் வரதராஜன் ஆகியோர் கலந்துகொண்டு நிவாரணப் பொதிகளை வழங்கினர். (ச)

## வெள்ளக் காடாக கிழக்கு

# மக்கள் அகதி முகாம்களில் தஞ்சம் ஆனால் கொழும்பில் மு.காங்.மாநாடு

### துரோகம் இழைத்துவிட்டது என்கிறார் அஸாத் சாலி

மட்டக்களப்பு,டிசெ.31

கிழக்கு மாகாணம் வெள்ளக்காடாக மாறியுள்ள நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கட்சி மாநாடு தேவைதானா? என்று முஸ்லிம் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர் அஸாத் சாலி கேள்வியெழுப்பியுள்ளார்.

அதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பிரசார காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறியமை கிழக்கு மாகாண மக்களுக்கு இழைத்த துரோகமாகும்.

வாக்களித்த மக்களுக்கு துரோகம் இழைத்துவிட்டு தனது கோட்டையிலிருந்து வெளியேறி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் வருடாந்த மாநாட்டை கொழும்



பில் நடத்தியுள்ளமை கவலைக்குரியது.

கிழக்கு மாகாணத்தில் பல இடங்கள் வெள்ளக் காடாக மாறியுள்ளன. பல கிராமங்களுக்கு இதுவரை செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அந்தநிலையில் முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டை நடத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகம் சார்பாகவோ, தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சார்பாகவோ இதுவரை எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை.

அன்றாட வாழ்வாதாரத்தை இழந்து முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள மக்களின் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல், முஸ்லிம் காங்கிரஸ் தலைமை நடந்து கொள்ளும் விதம் கண்டு கிழக்கு மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.


இதேவேளை மக்களுக்கான நிவாரணங்களை உரிய முறையில் வழங்க பாதிக்கப்பட்ட இடங்களில் அவசர கால நிலை பிரகடனம் செய்யப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸோ வெள்ளத்தில் நீந்தியாவது கொழும்பில் நடைபெற்ற மாநாட்டுக்கு வாருங்கள் என்று மக்களுக்கு கட்டளைப் பிறப்பித்துள்ளது. அது மக்களைப் பற்றிய அலட்சியப் போக்கையே சித்திரிக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் அரசுடனான தனது செல்வாக்கை முழுமையாகப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆனால் இன்று வரை அதற்கான நடவடிக்கைகள் எதையும் முஸ்லிம் காங்கிரஸ் எடுத்ததாக எந்தவித தகவலும் இல்லை.-என்றார். (ச)

## பிள்ளையான் கட்சியின் எதிர்காலத் திட்டம் என்ன?

### நேற்றுமுன்தினம் கூடி ஆராய்வு



மட்டக்களப்பு,டிசெ.31

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் இந்த ஆண்டுக்கான இறுதிக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கட்சி மேற்கொண்ட செயற்பாடுகள், புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளுதல், கட்சியின் எதிர்காலத்திட்டங்கள் ஆகியன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. (ச)



கண்டி, கன்னொருவ மின்சார மற்றும் இயந்திர பொறியியல் பயிற்சி நிலையத்தில் தலைமைத்துவ பயிற்சிபெறும் பல்கலைக்கழக மாணவர்களுடன் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கலந்துரையாடுகிறார்.

## யுத்தத்தால் வலுவிழந்த சிறுவருக்குப் பாடசாலை

### வந்தாறுமூலையில் திறப்பு

மட்டக்களப்பு,டிசெ.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரால் வலுவிழந்த சிறுவர்களை இணைத்துக் கொள்ள பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலை லண்டன் அகிலன் பவுண்டேஷனின் அனுசரணையுடன் வந்தாறுமூலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'அன்பகம் விசேட தேவையுடைய மாணவர்கள் பாடசாலை' என்ற நாமத்துடன் திறந்துவைக்கப்பட்ட அந்தப் பாடசாலையில் விசேட தேவையுடைய மாணவர்கள் பலர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பாடசாலை திறப்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, லண்டன் அகிலன் பவுண்டேசன் ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணன், மாகாண சபை உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், பிரசன்னா இந்திரகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




அந்த நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா பாடசாலையின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். (ச)

## வயோதிபரின் சடலம் மீட்பு

அம்பாறை,நவ.31

ஆலையடிவேம்பு, தீவுக்காலை பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் கொலை செய்யப்பட்ட நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை மீட்கப்பட்டது என்று அக்கரைப் பற்று பொலிஸார் தெரிவித்தனர். தீவக்காலை, சுனாமி வீட்டுத்திட் டத்தைச் சேர்ந்த எஸ்.யோன்வெஸ்லி (வயது-73) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வீட்டு உரிமையாளரை தாக்கிவிட்டு திருட்டு

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு,டிசெ.31

வீட்டு உரிமையாளரை கத்தியால் வெட்டிவிட்டு அந்த வீட்டிலிருந்த பணம், நகைகள் திருடப்பட்டுள்ளன.

அந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 4 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கத்தி வெட்டுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குணரெத்தினம் ஹரிதரன் (வயது 33) என்ற நபரே இவ்வாறு கத்தி வெட்டுக்குள்ளான்வராவார்.

அந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## புதுவருடத்தை வரவேற்க வீதிச் சித்திரம்

2013 ஆம் வருடத்தை வரவேற்கும் முகமாக க்றி யேடிவ் ஸ்டுபட் கலை ஆலய ஸ்தாபகர் பா.கோபி ரமணன் வித்தியாசமான கலை விருந்தை மட்டக்களப்பில் வழங்கவுள்ளார்.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 தொடக்கம் நள்ளிரவு வரை மட்டக்களப்பு நுழைவாயில் வீதி ஓரத்தில் வீதிச்சித்திரம் செய்யவுள்ளார்.

அது புதுவருடத்தை வித்தியாசமாக வரவேற்கும் ஒரு மட் டக்களப்பு கலைஞனின் முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
31/12/2012

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**இடபம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரை சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அரசியல் வாதிகளின் சந்திப்பு நிகழும்.

**கடகம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். உங்கள் வாயைக் சிலர் கிழறி வேடிக்கைப் பார்ப்பார்கள். அதிகம் பேச வேண்டாம். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**சிங்கம்:** சில காரியங்களை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். அரச காரியங்கள் இழுபறியாகும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் கணிசமான இலாபம் உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**கன்னி:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

**நாளை**

மார்கழி -17 செவ்வாய்க்கிழமை 01.01.2013
திதி: சதுர்த்தி மு.இ 08.27 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப 10.51 வரை
சுபநேரம்: 11.00- 12.30 வரை
ராகுகாலம்: 03.30- 05.00 வரை

**துலாம்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள்.

**தனுசு:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். மற்றவர்கள் பற்றிய வீண் விமர்சனங்களைத் தவிர்க்கப் பாருங்கள். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மகரம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.

**கும்பம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். கோபம் நீங்கும்.

**மீனம்:** வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்ட நாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | | | | | | | 7 |
| 1 | | | 6 | | | | 8 | |
| | 4 | 2 | | 8 | | 5 | | 6 |
| 2 | | 7 | 5 | | 3 | 4 | | 9 |
| | | | 9 | | 7 | | | |
| 4 | | 1 | 8 | | 6 | 3 | | 5 |
| 5 | | 6 | | 7 | | 9 | 4 | |
| | 1 | | | | 2 | | | 3 |
| 9 | | | | | | | 2 | 8 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 5 |
| 5 | 9 | 3 | 1 | 2 | 8 | 7 | 6 | 4 |
| 4 | 1 | 2 | 6 | 7 | 5 | 3 | 9 | 8 |
| 6 | 5 | 9 | 2 | 3 | 4 | 1 | 8 | 7 |
| 8 | 3 | 7 | 5 | 1 | 9 | 6 | 4 | 2 |
| 1 | 2 | 4 | 7 | 8 | 6 | 9 | 5 | 3 |
| 2 | 4 | 1 | 9 | 5 | 7 | 8 | 3 | 6 |
| 9 | 8 | 6 | 3 | 4 | 2 | 5 | 7 | 1 |
| 3 | 7 | 5 | 8 | 6 | 1 | 4 | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# சமூகசேவையினைப் பாராட்டி வாழ்த்துகிறோம்







**அண்மையில் நடைபெற்ற ஒளிவிழாவில் அதிவணக்கத்திற்குரிய பேராயர்களது கரங்களால் பணப்பரிசில்களைப் பெற்றுக் கொண்ட 140 மாணவச்செல்வங்களுக்கு எமது பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும்.**



அதேவேளை எமது இனத்தின் கொடையான கல்வியை எமது வருங்காலத் தூண்கள் சிறப்புடன் பெற்றிட உதவியாக

* ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 140 குழந்தைகளுக்கு தலா 10,000 ரூபாவும்
* க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்த 25 மாணவர்களுக்கு தலா 5,000 ரூபாவும்
* பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் எமது மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு தலா ஒரு மடிக்கணனியும்

இந்த ஒளிவிழாவிலே வழங்கி உதவிய அனைவருக்கும் இதற்கு முன்னின்று பாடுபட்ட கிளிநொச்சிப் படைத்துறைத் தலைமையகத்தினருக்கும் கிளிநொச்சிச் சமூகத்தினரான எமது நன்றிகளும் பாராட்டுகளும் என்றென்றும் உரித்தாகட்டும்.

மேலும் நலிவுற்றிருந்த எமது கிளிநொச்சி மண்ணை மீண்டெழவைக்கும் நோக்குடன் தமிழர்தம் கலாசார பண்பாட்டு விழுமியங்களை மதித்து எமது பாரம்பரிய விழாக்களை எமது காலாசாரத்தோடு ஒன்றியவகையில் சிறப்புற நடந்தேறுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் கிளிநொச்சி படைத்துறைத் தலைமையகத்தினருக்கும் தலைமைத் தளபதி **உதய பெரேரா** அவர்களுக்கும் எமது மேலான நன்றிகள். எமது இந்தப் பாராட்டுச்செய்தியை மக்கள் மனங்கவர்ந்த நாளிதழாம் உதயனில் பிரசுரிக்க உதவிய கொடைவள்ளலான குமரகுரு பல்பொருள் வாணிப உரிமையாளருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

**– கிளிநொச்சி சமூகம்.**

(26127)(2.6)

**குமரகுரு [illegible], ஏ9 – வீதி, கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியப் பாடசாலைகளுக்கு புதிதாக அதிபர்கள் நியமனம்

கொழும்பு,டிசெ.31

102 தேசிய பாடசாலைகளுக்குப் புதிதாக அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிதாக அதிபர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்று கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரட்ண தெரிவித்தார்.

அதிபர் தரம் ஒன்றில் உள்ளவர்களையே புதிதாக சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

கடந்த காலங்களில் புதிதாக அதிபர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை தெஹிவளையில் இடம்பெற்றபோது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், உபதலைவர் பஷீர் சேகுதாவூத், செயலாளர் எம்.ரி.ஹஸனலி, நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் ஆகியோர் அழைத்துவரப்பட்ட போது...

## ஆளும் கூட்டணியிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகாது

### ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.31

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகிக் கொள்ளும் திட்டம் எதுவும் இல்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தெஹிவளையில் நடைபெற்ற கட்சிப் பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகித்த போதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தன்மையை இழந்து செயற்படாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது ஆளும் கட்சி, முஸ்லிம் காங்கிரஸுக்கு அளித்த சலுகைகள் தொடர்பில் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் திருப்தியின்மை நிலவி வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சியுடன் இணைந்திருந்த போதிலும் கட்சியின் தனித்தன்மைக்கு ஒருபோதும் குந்தகம் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கொலன்னாவவில் அரசியல் பணிக்கு துமிந்தவை அனுமதிக்க மாட்டோம்

### முல்லேரியா பிரதேச சபையின் தலைவர் சொல்கிறார்



கொழும்பு,டிசெ.31

கொலன்னாவ, முல்லேரியாவில் அரசியல் நடவடிக்கைகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை அனுமதிக்கப்போவதில்லை என்று முல்லேரியா பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன சோலங்காராச்சி தெரிவித்தார்.

கொலன்னாவயில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலையின் போது காயமடைந்த துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரில் சிகிச்சைபெற்று வருகிறார். அவர் அடுத்தவாரம் இலங்கைக்கு திரும்பி, நீதிமன்றத்தில் முன்னிலையாகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தநிலையில் கொலன்னாவையில் அமைதியை குலைத்து விட்டுள்ள துமிந்த சில்வாவை அங்கு அரசியல் செய்ய அனுமதிக்கப் போவதில்லை என்று பிரசன்ன சோலங்காராச்சி குறிப்பிட்டார். (ச)

# வெளிநாட்டுத் தமிழருக்கு இரட்டை பிரஜாவுரிமை ரத்து

### அரசு உத்தரவு

கொழும்பு,டிசெ.31

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இரட்டை பிரஜாவுரிமையை ரத்து செய்யுமாறு அரசு, குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது தாக்கம் செலுத்தும் நோக்கில் ஈழ ஆதரவுத் தமிழர்கள் இரட்டைப் பிராஜாவுரிமை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் புலம்பெயர் தமிழர்கள் பத்து லட்சம் பேருக்கு இரட்டை பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்ளுமாறு புலி ஆதரவு அமைப்புக்கள் ஆலோசனை வழங்கியுள்ளன.

அவர்களின் இந்தச் சூழ்ச்சித் திட்டத்தை அறிந்து கொண்ட அரசு, அவ்வாறான புலம்பெயர் தமிழர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதில்லை என்று தீர்மானித்துள்ளது.

பெரும்பான்மை கட்சியொன்று ஆட்சி அமைப்பதைத் தடுக்கும் நோக்கில், அவ்வாறு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்ளுமாறு அங்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விடைத்தாள் திருத்தும் பாடசாலைகள் 10 இல் ஆரம்பம்


கொழும்பு,டிசெ.31

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நிலையங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 78 பாடசாலைகள் எதிர்வரும் 10ஆம் திகதியே திறக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் முதலாம் கட்ட மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளுக்குத் தெரிவு செய்யப்படாத சகல பாடசாலைகளும் திட்டமிட்டபடி நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

## சிவப்பு, மஞ்சள் மழை பிரிட்டனில் பரிசோதனை



கொழும்பு,டிசெ.31

இலங்கையில் அண்மையில் பெய்த சிவப்பு மற்றும் மஞ்சள் மழை குறித்து மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சேகரிக்கப்பட்ட மழை நீர் பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மழை நீர், பிரிட்டன் காடீப் பல்கலைக்கழகத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக நாட்டின் பல பாகங்களில் சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை மழை பெய்து வந்தது.

இதேவேளை, சிவப்பு மழையின் துளிகளில் அல்கா வகை உயிரினங்கள் காணப்பட்டன என்று இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் அனில் சமரநாயக்கா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களது சொத்து விவரம் குறித்து விசாரணை

கொழும்பு,டிசெ.31

அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களது சொத்து விவரங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

கடந்த 12 ஆண்டுகளாக தனியார் அல்லது அரச நிறுவனங்களில் கடமையை மாற்றாது, அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் சொத்துக்களை குவித்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களின் உள்நாட்டு, வெளிநாட்டு சொத்துக்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சில அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களிடம் வீடுகள், சொகுசு வாகனங்கள் மற்றும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன.

அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் பல தடவைகள் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அதேவேளை சொத்து விவரங்களை வெளியிடாத அரசியல் கட்சிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பல்கலை. புதுமுக மாணவருக்கு மார்ச் 5இல் கல்வி நடவடிக்கைகள்

### உயர்கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,டிசெ.31

2013ஆம் ஆண்டு பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடங்களை விட அடுத்த ஆண்டில் 5,609 மாணவர்கள் மேலதிகமாக பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அகதி அந்தஸ்துக் கோருவதில் 12 ஆம் இடத்தில் இலங்கை

கொழும்பு,டிசெ.31

அகதி அந்தஸ்து கோருவதில் 12 ஆவது நாடாக இலங்கை உள்ளது என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

எனினும் 2011 ஆம் ஆண்டை விட இலங்கையர்கள் அகதி நிலைக் கோரல் தரப்படுத்தல் குறைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் இலங்கை அகதி நிலைக் கோரலில் 10 ஆவது நாடாக தரப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கை அகதிகள் கடந்த வருடத்தில் மாத்திரம் 44 கைத்தொழில் மய நாடுகளில் அகதி அந்தஸ்தைக் கோரியிருந்தனர்.

இலங்கையில் இருந்து கடந்த வருடத்தில் 8, 521 அகதி விண்ணப்பங்கள் அந்த நாடுகளுக்குக் கிடைத்துள்ளன. அதற்கமைய இலங்கையர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், இந்தியா, சுவிற்சர்லாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகளில் அகதி அந்தஸ்தைக் கோரியுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பலசரக்குக் கடை மற்றும் உணவுச் சாலைக்கு வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

18 - 30 வயதுக்குட்பட்ட ஆண்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0771102816, 0774206559

(சி/5171)(3.6)

## மரண அறிவித்தல்



### லிங்கநாயகம் சாரங்கன்

நெடுந்தீவு மேற்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லிங்கநாயகம் சாரங்கன் 28.12.2012 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.122012) திங்கட்கிழமை மாலை 4 மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுந்தீவு மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்வரை,
நெடுந்தீவு 03
T.P.-0213216980 (c/5166)(6.11)

தகவல்:
கு-லிங்கநாயகம்
(தந்தை)

## 3 ஆம் ஆண்டு நினைவு



### அமரர் ரெட்ணம் சூசை பேணாட்

பிறப்பு
1953.08.19

இறப்பு
2009.12.31

எம் குடும்பத்தின் தலைவனே
கொட்டும் அன்பின் சீலனே
கோடி ஆண்டுகள் கழிந்தாலும்
நாம் கொண்ட அன்பு மறக்குமோ -
உம் பிள்ளைகள் நெஞ்சம் தாங்குமோ.

நீர் தொட்ட கைகள்
நீர் சிந்திய மொழிகள்
தேவன்தந்த உயிரில்
தேங்கிய இடம் எதுவோ...?

காலம் மலருகின்றது
கார் மேகம் சூழகின்றது
தந்தை நீர் பெற்றெடுத்த
பிள்ளைகள் மனம் நோகின்றது

எம் நெஞ்சத்தில்
உம் நினைவுகள் துடிக்க
வார்த்தைகள் ததும்புகின்றன

எங்கு நீர் சென்றுவிட்டீர்
எதற்காக சென்றுவிட்டீர்
அன்பானவர்கள் இருக்கையில் இடைவழியில் நின்று
எம் கண்கள் சொரிகின்ற கண்ணீரை
துடைத்திட நீர் வருவீரோ?

இறந்தாலும் வாழ்கின்றீர்
எங்கள் மனங்களோடு
காலம் பிறக்கின்றது பாரினிலே
மறுபடியும் நீங்கள் வருவீர்கள்
உம்மடியில் எம்மை
தவழ விடுவீர்கள் என......

இல.7, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# தமிழக ஈழத் தமிழர் முகாம்களில் ஆய்வு

சென்னை, டிசெ.31

தமிழகத்திலுள்ள தம்மம் பட்டி பகுதிகளில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில், தமிழக அரசின் மறு வாழ்வுத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

கெங்கவல்லி ஒன்றியத்தில், தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி மற்றும் நாகியம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில், 316 குடும்பங்களை சேர்ந்த, ஆயிரத்து 107 பேர் வசிகின்றனர்.

முகாம்களில் உள்ளவர் கள் பல்வேறு அடிப்படை வசதிகள் கேட்டு, தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதையடுத்து, மாநில மறுவாழ்வு துறை துணை ஆட்சியாளர் மங்கலநாதன் தலைமையில், சேலம் மாவட்ட மறுவாழ்வுதுறை தாசில்தார் கீதா, கெங் கவல்லி துணை தாசில்தார் சிராஜூதீன் உள்ளிட்ட அதிகாரிகள், நேற்று முன் தினம் முகாம்களில் ஆய்வு செய்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். (வ)

## சாயி நிலையத்தில் புத்தாண்டு

யாழ்ப்பாணம், பல்கலைக்கழகத்துக்கு முன்பாக அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் புத்தாண்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில் பஜனை வழிபாட்டைத்தொடர்ந்து 'சாந்தி, சமாதானம் நிலவும் புத்தாண்டு' எனும் பொருளில் வைத்தியக் கலாநிதி. ஆர்.கணேசமூர்த்தியின் விசேட சொற்பொழிவும் இடம்பெறும். (3)

## செல்போன் திருடன் கைது

பஸ் பயணிகளின் கைத்தொலைபேசிகளைக் கொள்ளையடிக்கும் இளைஞனை மஹரகம கொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், அவரிடமிருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான 43 தொலைபேசிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

## ஒருவர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் சிகரெட்டுக்களை எடுத்துவந்த சந்தேகநபரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அம்பலாங்கொடையில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

அத்துடன், சந்தேகநபரிடம் இருந்த சட்டவிரோத சிகரெட்டுக்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

### காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் பின்வீதியில் இருந்து 500m தூரத்தில் அரசடி வீதியில் அமைந்துள்ள 1½பரப்புக்காணி சுற்றுமதில் சகல வசதிகளும் உள்ளது.

தொடர்புகளுக்கு : 0773512591 (27464)(7)

### வீடு வாடகைக்கு

நாவலர் வீதி(கஸ்தூரியார் வீதி நாவலர் வீதிச்சந்திக்கு அருகில்) மாடி வீடு மேல் தளம் 06 அறைகள், கீழ்தளம் 06 அறைகள்,04 குளியல் அறைகள் மற்றும்வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய 2000 சதுர அடி வீடு அரச சார்பற்ற நிறுவனம் அல்லது கம்பனிகளுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:0716179216 (27375)(6.4)

### வாகன விற்பனை

251-XXXX தொடரிலக்கமுடைய HAICE வாகனம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 3564259 (27473) (6.7.4)

### Vacancies

எமது நெல்லியடி கிளையில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Course Counselor | - Female |
| Customer Relation Officer | - Female |
| Computer Instuctor | - Male / Female |
| Assist. Lecturer for Java, Tally | - Male / Female |
| Hardware Technician | - Male |

தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

ASIAN COMPUTER EDUCATION
Kodikamam Road, Nelliyadi.
e-mail : asianedu@dialogsl.net

### கடை வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி,மல்லாகத்தில் 3 மாடி கடை வாடகைக்குண்டு.

தொடர்பு:077 4020433
0776405497. (27321)(6.7.4)

### பொருளியற் கல்லூரி

| நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் றோட், இணுவில். |
|---|---|

(இரு இடத்திலும்)

A/L 2015

கலை, வர்த்தகப் பிரிவு
ஜனவரி - 6 இல்

எமது வழமையான ஆசிரிய குழுவினால்

குறிப்பு:- 5ஆம் திகதி அட்டமிநாள் ஆகையால் இத்திகதிக்கு முன்னர் உங்கள் அனுமதிகளை முன் கூட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

நேர அட்டவணையும், அனுமதியும் தினமும்

யாழ். நகரில் - 8.00am - 4.00pm
இணுவில் - 9.00am - 11.00am
3.00pm - 5.00pm
பெற்றுக் கொள்ளவும். (c/5170)(3.6)

### CHEMISTRY CENTRE
A/L 2015

By: அன்பு

4 இடங்களில் ஆரம்பம்
- ★ 33, அராலிவீதி,ஓட்டுமடம் சந்தி அருகில்
- ★ மஞ்சவனப்பதி வடக்கு வீதி,கொக்குவில்
- ★ மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக
- ★ பழம் வீதி, கந்தர்மடம் சந்தி

A/L 2013
விசேடபிரிவு
ஒரே வேளையில் Inorganic Organic, Physical

A/L 2014
Basic Thermo
Group Class தேவையானவர்கள்.

(27281)(5-6-7)

தொடர்பு: 077 069 0654

## மரண அறிவித்தல்

### திருமதி சிங்கராயர் திரேசம்மா



சில்லாலை கிழக்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் 74/1, ஓட்டுமடவீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிங்கராயர் திரேசம்மா நேற்று முன்தினம் (29.12.2012) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறுப்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற அந்தோனிப் பிள்ளை சிங்கராயரின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான அந்தோனிப் பிள்ளை, ஞானம்மா,அருளம்மா மற்றும் யேசுதாசன், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜோசவ்றட்ணம் (கனடா), மரிகொறற்றி,மேரிமெக்டலீன் (சுவிஸ்), எட்வேட்லூயிஸ் (பிரான்ஸ்),மரிய கரோலின்(கனடா),மரிய இயூஜின் சிலோஜினா (ஜேர்மனி)ஆகியோரின் அன்புத் தாயும் திரேசாலில்லிமலர், தாசீயஸ் தேவராசா, பிரான்சிஸ்குமார், மேரிகிளேயாப்பா, அன்ரன் யோகநாதன், கில்பேட்றஞ்சன் ஆகியோரின்அன்பு மாமியும் சுபா,ஷோபி,ஜெயதர்சன் (Engineer, Singapore), ஜெயடினேஸ் (H.N.D.A, B.COM இறுதியாண்டு மாணவன், Account Assistant Colombo),ஜெயதனுஷா,ஜெயடிலக்ஷன் (2012 A/L கணிதப்பிரிவு மாணவன் ,யாழ்/இந்து கல்லூரி),ஜெயடான்சி(யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தரம்6 மாணவி), ஜெனோல்ரன், பிரான்சிஸ்கா, வேஜினி, அனோஜினி, இலக்கியா, றொசிற்றா,சாம்றோய்,ஜோணசன்,அலென்திவ்யன் ஆகியோரின்அன்புப் பேர்த்தியும்,தமிழினியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.12.2012) திங்கட்கிழமை மு.ப 9.30 மணியளவில் கஸ்தூரியார் வீதி புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் சில்லாலை புனித யாகப்பர்தேவாலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஜெயமஹால்"
74/1, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(27474) (6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கட்டாயமாக்கப்படும் விவசாயக் காப்புறுதி

கொழும்பு,டிசெ.31

நெல் உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகள் அடுத்து வரும் போகத்திலிருந்து கட்டாயமாக விவசாயக் காப்புறுதி ஒன்றைப் பெறவேண்டும் என்று விவசாய சேவைகள் மற்றும் வனவாழ் உயிரினங்கள் தொடர்பான பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அடுத்து வரும் சிறுபோகத்தில் சலுகை விலையில் உரவகைகளைப் பெறும் அனைத்து விவசாயிகளும் உரங்களுக்குச் செலுத்தப்படும் பணத் தொகையுடன் மேலதிகமாக 150 ரூபாவை செலுத்தி விவசாயக் காப்பு றுதியொன்றைப் பெற வேண் டிய நிலை ஏற்படும். கடந்த 26 ஆம் திகதி விவசாய சேவை கள் மற்றும் வனவாழ் உயிரினங்கள் அமைச்சில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் பிரதி அமைச்சர் இந் தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

விவசாயக் காப்புறுதியொன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பயிர் அழிவொன்றுக்கு விவசாயிகள் முகம் கொடுக்க நேரும் சந்தர்ப்பங்களில் திறைசேரிக்கு சுமை ஏற்றாத விதமாக விவசாயிகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க வாய்ப்பாக அமையும்.

இலங்கையின் 16 மாவட்டங்களில் 1 இலட்சத்து 70 ஆயிரம் ஏக்கர்கள் வரையிலான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் இம்முறை ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக நெல் வயல்கள் அழிவுக்கு உள்ளாகியுள்ளன. இதனால் 40 கோடி ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (3-22)

## ஹயஸ் - சைக்கிள் விபத்து

வலி.வடக்கு, டிசெ. 31

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள இலங்கை வங்கிக்கு முன்னால் இடம் பெற்ற வாகன விபத்தில் சைக் கிளில் வந்த ஒருவர் ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது. இந்த விபத்து தொடர்பாக தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகம் நோக்கி வந்த ஹயஸ் வாகனம் இலங்கை வங்கிக்கு முன்னால் சைக்கிளில் வந்தவரை மோதியுள்ளது.

அதனைத் தொடர்ந்து வாகனம் நிற்காது வேகமாக வந்த பாதையால் மீண்டும் திரும்பி தப்பிச் சென்றுள்ளது. விபத்து இடம் பெற்ற இடத்தில் பலர் பார்த்துக் கொண்டு இருக்கக் கூடியதாக குறிப்பிட்ட ஹயஸ் வாகனம் திரும்பிச்சென்றுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் உடனடியாக குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்து வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (3 -86)

## பிடிபட்டான் ஆட்டுக் கள்வன்

வலி.வடக்கு, டிசெ. 31.

ஆடுகளைத் திருடிய திருடன் ஒருவன் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்டுள்ளான். இரண்டு ஆடுகளையும் குட்டிகளையும் திருடிக் கொண்டு செல்லும் வழியில் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டான்.

குறிப்பிட்ட ஆடுகள் மற்றும் குட்டிகளின் பெறுமதி 24 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்கும் படி கட்டளையிடப்பட்டுள்ளது.(3-86)

## நெல்லியடி ஆலயத்தில் திருட்டு

வலி.வடக்கு, டிசெ.31

நெல்லியடி குழையம்பதி விநாயகர் ஆலயம் உடைக்கப்பட்டு சுமார் இருபதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் ஆலய தர்மகர்த்தா சபையினால் முறையிடப்பட்டுள்ளது.

இரவு வேளையில் ஆலயத்தின் கதவை உடைத்து உள்நுழைந்த கள்வர்கள் ஆலயத்தின் பூசைகளுக்காக வைத்திருந்த வெண் கல உபகரணங்கள உட்பட மற்றும் சில பொருள்களை திருடிச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-86)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க் கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 7 மணிக்கு முற்றோதல் நிகழ்வு நடைபெறும் என சைவ பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

## புற்றுநோயைக் கட்டுப்படுத்த தேள் விஷத்திலிருந்து புதிய மருந்து

தேள்களின் விஷத்தைப் பயன்படுத்தி புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் மருந்தொன்றை கியூபா நாட்டு விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

''விடாரொக்ஸ்-30 சி எச்'' என அந்த மருந்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

மேற்கு கியூபாவுக்கு உரிய பாரம்பரிய தேள்களின் விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள இந்த மருந்தை மார்பக, ஈரல், மூளை, மூட்டுக்கள் மற்றும் நுரையீரல் புற்று நோயைக் கட்டுப்படுத்த பயன்படுத்த முடியுமென அந்த விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**''விடாரொக்ஸ்-30 சி எச்'' என அந்த மருந்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது.**

அந்த நாட்டின் உயிர் காப்பு மருந்துகள் மற்றும் இரசாயன உற்பத்தி தொழில் முயற்சிகள் சங்கத்தின் விஞ்ஞானிகளால் இந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. (3-22)

## விளையாட்டு உபகரணங்களுக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, டிசெ. 31.

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அராலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இந்த நிதியை வழங்கியுள்ளார்.

கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் தமது நேரத்தை நல்ல முறையில் பொழுது போக்கும் வகையில் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 20 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (3-86)

**புதுவருட ஆராதனை**

எபனேசர் ஜெப ஆலயத்தில் புதுவருட ஆராதனை 31.12.2012 இரவு 9.30 மணிக்கு ஆரம்பமாகி அதிகாலை 3.00 மணிவரை நடைபெறும். இவ்வாராதனையில் சிறப்பு வழிபாடுகளும், நன்றி ஆராதனையும், பாடல்களும் இடம் பெற்று புதுவருட சிறப்பு ஆசீர்வாத செய்தியை ஆலயத்தின் தலைமைப் போதகர் வண. பிதா. ஜோன். இ. ஜெயபீலன் அவர்கள் வழங்குவார்கள். தொடர்ந்து இராப்போசனமும், வாக்குத்தத்தங்களும் கொடுத்து எல்லோருக்காகவும் விசேட ஜெபமும் ஏறெடுக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**எப்னேசர் ஜெப ஆலயம்**

கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை

**இதோ!**
**சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி**

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No. 6382) AR/No..228.

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில் T.P. 021 222 2567

**நெஞ்சை விட்டகலாத மூன்றாம் வருட நினைவலைகள்**

அமரர் வேலுப்பிள்ளை மோகனநாதன்
(SLPS-I முன்னாள் அதிபர்
யா/அராலி இந்துக் கல்லூரி)
திதி:- அபரபட்சத் திருதியை - (31.12.2012)



தோற்றம்
24.04.1952

மறைவு
03.01.2010

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
உங்களை ஊனாய் உருக்கிய எம் தந்தையே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி - நீங்கள்
மீளாத்துயில் கொண்டாலும் - உங்களை
ஒரு போதும் நாம் மறவோம்.

கலைநகர்,
வட்டு - வடக்கு,
சித்தன்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(27603)(4.6)

**நாய்க் குட்டி விற்பனைக்கு**

60 நாள் நிரம்பிய அல்சேஷன் ஜேர்மன் சப்போட் ஆண் நாய்க்குட்டி விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு :
A.G. செல்வம், 107, பே விற்வீதி, யாழ்ப்பாணம்.

**வேலைக்கு ஆள்கள் தேவை**

தோட்டம் மற்றும் சமையல் வேலை தெரிந்த ஆண் வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு :
0773361750,0776925193

**NORTH LEAD EDUCATIONAL CENTER**

**சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம்**

A/L பரீட்சை முடித்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், அரசமொழி சிங்கள பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக பேச, எழுத, வாசிக்க ஆரம்பத்தில் இருந்து ...
பரீட்சை முடிவின் பின் சான்றிதழ் வழங்கப்படும்

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
17.09.1941



மறைவு
11.01.2012

**அமரர் தியாகராஜா இந்திராவதி**

அன்பின் பிறப்பிடமே
அமைதியின் திருவுருவமே
பண்பின் இருப்பிடமே
பாசத்தின் ஒளிவிளக்கே
ஊரார் புகழ வாழ்ந்த உத்தமியே
நேசமுடன் சீர் புகழ வைத்த தெய்வமே
ஓராண்டு கடந்தம்மா


தாயைத் தானிழந்தார்க்கு
தரணியிலே அமைதி உண்டோ
ஓயாது உங்கள் நினைவு
உள்ளத்தை வாட்டுதம்மா
எத்தனை பிறவிகள் - நாம்
எடுத்தாலும் நீயே
தான் எமக்கு அன்னையாக

வரவேணும் இவ்வையகத்திலே
நாம் உங்களை இழந்து தவிக்கின்றோம்
இறைவனிடம் சொல்லி விட்டு
மீண்டும் எங்களிடம் வந்துவிடு - அம்மா
ஈழத்து சிவனை வேண்டுகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

48, ஜின்னாலேன்,
யாழ்ப்பாணம்.
(27410)(45.6.7)

மீளாத் துயருடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனி ஒரு விதி செய்...

சு.சுபா
4ஆம் கட்டை,
மானிப்பாய்.

இன்று உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் காலத்திற்கு காலம் வெவ்வேறு வடிவம் பெற்று வருகின்றனவே தவிர குறைந்தபாடில்லை. பெண்கள் மீதான உடல் ரீதியான வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

ஐ.நா வின் அறிக்கைகளைப் பார்க்கும்போது குடும்பத்தில் தனக்கு மிக நெருக்கமானவர்களாலேயே பெண்கள் பல்வேறு வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். தம் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகளை எதிர்த்து குரல்கொடுக்கத் துணியாத நிலையிலேயே பெண்கள் மீதான வன்முறைகளும் அடக்குமுறைகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன என்பதே உண்மை.

உலக சனத்தொகையில் இன்று பெண்களின் தொகை 50 வீதத்தை எட்டிவிட்டது. ஆண்களை விட ஒரு சமூகத்தில் பெண்கள் அங்கம் வகிக்கும் பாத்திரங்கள் இன்றியமையாதவை என்று கூறலாம். எனினும் குடும்பம் மற்றும் சமூக வன்முறைகளில் பெரிதும் பாதிக்கப்படும் ஒரு பாத்திரமாகவும் பெண் விளங்குவது வேதனைக்குரியது.

இன்று குடும்ப வன்முறை என்ற பதம்கூட பெண்களுக்கு அநீதிகளின் அதிகரிப்பால் உருவானதோ என்றுகூட கூறத் தோன்றுகிறது. காரணம் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்களின் எண்ணிக்கை அதிகளவானது.

> பாரம்பரியம், கலாசாரம், சடங்கு என்ற பெயர்களில் இன்று உலகம் முழுவதும் 10–17 வயதுக்கிடைப்பட்ட 82 மில்லியன் சிறுமிகள் கட்டாயத் திருமணம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இன்று உலகம் எந்தளவிற்கு நாகரிகத்திலும் அறிவியலிலும் ஏற்றம் கண்டுவருகின்றதோ அந்தளவுக்கு குற்றச் சம்பங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஆய்வுகளைப் பார்த்தால் தலை சுற்றும். இன்று உலகில் உள்ள பெண்கள் எண்ணிக்கையில் ஐந்துபெண்களில் ஒருவர் தன் வாழ்நாளில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டோ அல்லது பலாத்காரத் துக்கு உட்பட்டோ இருப்பார்.

அமெரிக்காவில் 20 நிமிடங்களுக்கு ஒரு பெண் பாலியல் வல்லு றவுக்குட்படுத்தப்படுகிறாள். பிரான்ஸில் வருடந்தோறும் 25 ஆயிரம் பெண்கள் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்படுகின்றனர். துருக்கியில் திரு மணமான பெண்களில் 35 வீதமானோர் தமது கணவராலேயே பாலியல் வல்லுறவுக்கு உட் படுத்தப்படுகின்றனர்.

அவ்வளவு ஏன் எமது அயல் நாடான இந்தியாவில் கூட வருடந்தோறும் 15 ஆயிரம் பேர் சீதனக் கொடுமையால் கொல்லப்படுகின்றனர் என்பது எத்தனைப் பேருக்குத் தெரியும்? திருமண பராயம் அடையும் முன்பாகவே பெண்களை இல்வாழ்வில் பலவந்தமாக சேர்க்கும் நடைமுறை இன்று உலகில் பல நாடுகளில் உள்ளது. ஆய்வுகளின் படி பாரம்பரியம், கலாசாரம், சடங்கு என்ற பெயர்களில் இன்று உலகம் முழுவதும் 10-17 வயதுக்கிடைப்பட்ட 82 மில்லியன் சிறுமிகள் கட்டாயத் திருமணம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

குடும்ப கௌரவம் சமூகத்தின் விமர்சனம் என்பவை காரணமாக பல பெற்றோர்கள் கூட தமது பிள்ளைகளுக்கு நடக்கும் அக்கிரமங்களை மூடிமறைத்து விடுகின்றனர். இதுவே அவர்களுக்கெதிராக மேலும் மேலும் குற்றங்கள் பெருக வழிவகுக்கிறது. வீட்டு வன்முறைகளுக்கு அப்பாற்பட்டு யுத்தங்கள் கூட இன்று பெண்களைப் பாடாய் படுத்துகின்றன. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த அகதிகளில் 80 வீதமானோரில் பெண்களும் சிறுவர்களுமே அடங்குகின்றனர்.

பெண் என்பவள் பிறந்ததிலிருந்து பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுத்து வளரக்கூடிய ஒரு சூழல் உண்மையில் ஆசிய கண்ட நாடுகளுக்கு குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளிடையே நிலவுகிறது.





திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு கேளடி தோழி...





கனவொன்று கண்டேனடி என்
கனவு கேளடி தோழி
பசும் புற்றரையின் நடுவிலாங்கே
பளபளவென்று மின்னின இரண்டு
காற்று நிறைத்த அழகிய பலூன்கள் – என்
கரத்தில் அவற்றைப் பிணைத்த நூல்கள்...
பற்றிய நூலோடன் பார்த்து இரசிக்கையில்
பலூன்கள் என்னிடம் பேசத் தொடங்கின
பற்றிய நூலைக் கலாச்சாரம் என்றன
நீல நிறத்து பலூன் என்னைப் பார்த்து
நீடிய துயராய் மெல்லக் கேட்டது..
உலகை நான் உயர எழுந்து பார்க்க வேண்டும்..
உன் கை நூலைக் கொஞ்சம் இளக்குவாயா?..
நியாயமான ஆசை கண்டு கொஞ்சம்
நீளமாகவே நூலை இளக்கினேன்...
எனக்கும் அது போல் பறக்க வேண்டும்
என்ற ஆசை மனத்துள் உதித்தது..
சிவப்பு பலூனோ அதிகம் பேசிற்று..
சுதந்திரம், பெண்ணியம் உரிமை என்று..
சத்தமிட்டது, என் கரத்தின் நூலைச்
சாடி நின்றது...கடிந்து கொண்டது..
அடக்குமுறை இது... அறுத்து விடு நான்
சுதந்திரமாகப் பறப்பேன் என்றது...
பலவந்தமாக என் கரத்தின் நூலைப்
பறித்துக் கொண்டு பறந்து போனது...
பாடிப் பறக்குது என்று தான் நினைத்தேன்
'படார்'... ஓசை.. பதைத்துத் திரும்பினேன்..
பரிதாபம் கேள் தோழி..
சீரழிவென்ற முட்களில் சிக்கிச் சிதறுண்டு
போயிற்று சிவப்பு பலூன்
நீல பலூன் என்னைப் பார்த்தது...
நீண்ட மென்நகை சிந்திற்று..
பெண்ணியம் பேசு, சுதந்திரம் பேசு
பெண்களின் உரிமையைக் காத்திடப் போர்
செய்- ஆனால்
கண்ணியம் பேணும் கலாசாரம் தன்னை
அடக்குமுறையென்று அறுத்துச் செல்லாதே...
அதுவே உனக்கு வேலி...
என்ன நினைக்கிறாய் தோழி - நீ
உயரப் பறப்பது பற்றி ???

– பூங்கோதை

# ஜனநாயக நடைமுறைகளை பலவீனப்படுத்தாது குற்றப் பிரேரணைக்குத் தீர்வுகாண வேண்டும்

## இந்து நாளேடு வலியுறுத்து

கொழும்பு, டிசெ.30

நிறுவனங்கள் அல்லது ஜனநாயக அரசியல் நடைமுறைகள் ஆகியவற்றைப் பலவீனப்படுத்தாத வகையில் குற்றப் பிரேரணை மீதான மோதலுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென சென்னையிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடான 'த இந்து' அதன் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தெற்காசியாவின் பலம் பொருந்திய மனிதர்களுக்கும் உச்சமட்ட நீதிவான்களுக்குமிடையே மூள்வது என்ன? ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஸ் முஷாரப், பிரதம நீதியரசர் இப்திகார் செளத்திரியைப் பதவியிலிருந்து கவிழ்க்கப் பகீரதப் பிரயத்தனம் செய்தார். இறுதியில் இது விடயத்தில் தமக்குரிய சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் பிரதம நீதியரசரைத் தாம் சீண்டிப்பார்த்துவிட்டார் என்பதை மட்டுமே உணர்ந்தார்.

தற்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், இலங்கைப் பிரதம நீதியரசரை வெளியேற்றவேண்டுமென்பதிலேயே உறுதியாகவுள்ளார். எனினும், பாகிஸ்தான் பிரதம நீதியரசர் இப்திகார் செளத்திரியைப் போல ஷிராணி பண்டாரநாயக்கவும் தமக்கு எதிரான திட்டத்தை முறியடிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றார்.

இவர் வெற்றி இலக்கை எட்டுவதற்கான வாய்ப்புகள் காத்திரமாக அமையவில்லை. எனினும், இந்த மோதல் இந்த நாட்டின் நிறுவனங்களில் நிச்சயம் ஒரு சுழற்சியை ஏற்படுத்திவிடும். அதேவேளை, என்றுமில்லாதவாறு, இலங்கை அரசமைப்பையும் சோதனைக்குள் சிக்கவைத்துவிடும்.

குற்றப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையோடு நிறைவேற்றமுடியும். இதையடுத்து,ஒரு நீதிவானை நீக்குவதற்கான சட்ட அதிகாரம் ஜனாதிபதிக்கு அளிக்கப்படுகிறது. ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டது. இந்த எண்ணிக்கை ஒரு பிரச்சினையாகாது. குற்றப் பிரேரணையில் பிரதம நீதியரசரின் தவறான நடவடிக்கைகள் தொடர்பாக 14 குற்றச்சாட்டுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இதில் மூன்றில் ஒரு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே கைச்சாத்திட்டுள்ளார்கள்.

இப்பிரேரணை ஜனவரியில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம். மூன்று குற்றச்சாட்டுகளில் பிரதம நீதியரசர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் என ஏற்கனவே அறிவித்துவிட்டது. எனினும் இதற்குப் பின்னர் கீழே இறங்குவதற்கு மாறாக, பிரதம நீதியரசரை விசாரணைக்கு உட்படுத்தும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் சட்ட அதிகாரம் குறித்து ஷிராணி பண்டாரநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவால் விட்டுள்ளார். ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக விசாரணை இருக்கின்றது என்பது கண்கூடு. ஒரே பார்வையில் இது புலனாகிவிடும். இந்த நிலையில், நீதிமன்றம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது. அதேவேளை, இந்த பிரச்சினை தீர்க்கப்படும்வரை குற்றவியல் பிரேரணை மீதான முன்னெடுப்புகளைத் தொடர வேண்டாமென்றும், நாடாளுமன்றத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அதன் அதிகாரம் தொடர்பாக சவாலை எதிர்நோக்குகின்றது. இதற்கும் மேலாக முறையாக விசாரணை முன்னெடுப்புகளை மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுக்கும் இக்குழு இலக்காகியுள்ளது. தமக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எதிராகத் தாமாகவே வாதாட ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு கால அவகாசம் அளிக்காமல் இயற்கை நீதி நடைமுறைகளைத் தெரிவுக்குழு மீறியுள்ளது. தெரிவுக்குழு உறுப்பினர்களின் நடவடிக்கை நாடாளுமன்ற நடவடிக்கையே தவிர வேறொன்றுமில்லை.

அவர்கள் நாட்டின் முதன்மை நீதியரசரை 'பைத்தியக்காரி' எனப் பரிகசித்துள்ளார்கள். தரங்கெட்ட வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டுள்ளார்கள். மாறுபட்ட அபிப்பிராயத்தை ராஜபக்ஷ ஆட்சி கண்டுகொள்வதில்லை என்ற விமர்சனத்துக்கு வலுவூட்டுவதாகவே இது அமைந்துள்ளது.

இந்த ஆண்டு உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அநேக தீர்ப்புகள் அரசுக்கு எதிரானவை. மாகாணசபைக்கான அதிகாரக்குறைப்பு சட்டவரைவுக்கு எதிரான தீர்ப்பு அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பின்னணியில் பொதிந்துள்ள உண்மை நிலைப்பாடு இதுவே ஆகும்.

மாகாணசபை சம்பந்தப்பட்ட சட்டவரைவுக்கு மற்றவர்களைப்போன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஆட்சேபனை கிளப்பியுள்ளார்கள். தமிழ்ப் பிராந்தியங்களுக்கு கூடுதலாக சுயாதிபத்திய அதிகாரம் வழங்கப்படுமென்ற அரசின் வாக்குறுதிக்கு மாறான சட்டமூலம் இதுவாகும்.

நிறுவனங்கள் அல்லது ஜனநாயக, அரசியல் நடைமுறைகள் ஆகியவற்றைப் பலவீனப்படுத்தாத வகையில் குற்றவியல் பிரேரணை மீதான மோதலுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அடுத்தபடியாகத் தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைகளுக்கான அவசர தீர்வே அவசியம் என்றுள்ளது. (த-சி)

# உவர்த் தரையிலும் விளைச்சல் தரும் புதிய நெல்லினம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

உவர்த்தரைக்கு ஈடுகொடுத்து சிறப்பான விளைச்சாலைத் தரும் புதிய நெல் இனமொன்றை பத்தலேகொட நெல் ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. 'பீ.ஜி. 369' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நெல் இனம் உப்புத் தன்மை கலந்துள்ள மண்ணுக்குப் பெரிதும் உகந்தது. நெல் விவசாயத்தில் ஏற்படும் பொதுவான நோய்த் தாக்கங்களுக்கு ஈடுகொடுத்து நன்றாக வளரக் கூடியது எனப் பத்தலேகொட நெற் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் நிமல் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த பீ.ஜீ.369 நெல் இனத்தின் மூலம் ஏக்கரொன்றுக்கு 100 புசல் தொடக்கம் 120 புசலுக்கு இடைப்பட்ட விளைச்சாலைப் பெறமுடியும். நாட்டரிசி வகையைச் சேர்ந்த இந்தப் புதிய நெல் இனத்தைப் பயிர் செய்வதன் மூலம் மூன்றரை மாதங்களில் அறுவடை செய்து கொள்ள முடியும்.

தற்போது மேற்படி நெல் ஆராய்ச்சி நிறுவனத்தால் அடிப்படைத் தேவைக்கு அவசியமான விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதோடு எதிர்வரும் பெரும் போகத்தின் பின்னர் விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இந்த இன விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-22)



நேற்று வவுனியாவுக்குச் சென்று வெள்ளப்பாதிப்புகளைப் பார்வையிட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ...

# உண்ணாவிரதம் இருந்த இலங்கை அகதிகள் 6 பேர் மருத்துவமனையில்

## செங்கல்பட்டு அகதிமுகாமில் கியூ பிரிவு கைவரிசை

செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில், உண்ணா விரதமிருந்த 6 பேர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து, முறையான கடவுச்சீட்டு மற்றும் விசா இல்லாமல் தமிழகம் வந்து, குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள், ஆயுதம் கடத்தியவர்கள் 'கியூ' பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்படுகின்றனர். அந்த முகாமில் தற்போது, 41 பேர் உள்ளனர்.

**கடந்த 23 ஆம் திகதியிலிருந்து நேற்றுமுன்தினம் வரை 12 பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்**

திறந்தவெளி முகாமில் குடும்பத்துடன் தங்கியிருக்க அனுமதிக்ககோரி, கடந்த 23 ஆம் திகதியிலிருந்து 7 பேர், 27 ஆம் திகதியிலிருந்து 3 பேர், நேற்று முன்தினம் தொடக்கம் இருவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 6 பேர், நேற்று, நேற்றுமுன்தினம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி இரத்தினசபாபதி



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பத்மாவதி இரத்தினசபாபதி நேற்று (30-12-2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அம்பிகை, காலஞ்சென்ற யோகாம்பிகை ஆகியோரின் தாயும், புவனேந்திரன், நவரத்தினராசா ஆகியோரின் மாமியும், நிரஞ்சன், நிர்மலன், நிரூபன், பவனொளிபவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-12-2012) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை வங்கி ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(27398)(00:10)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி ஆண்டிஐயா

(காரைநகர்)

கொல்லடைப்பு, காரைநகரை நிரந்தர வசிப்பிடமாகவும், சிவகாமியம்மன் கோயிலடி, காரைநகரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆண்டிஐயா (லோகேஸ்வரன் - ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று முன்தினம் 29.12.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகனும், வியூலாவின் அருமைக் கணவருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக காரைநகர், சாம்பலோடை சேமக்காலைக்கு இன்று (31.12.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, சகோதரர்கள்

(சி/6177)(3.14)

# போலி நாணய வியாபாரிகள் நால்வர் பொலிஸாரால் கைது

பொற்காசுகள் எனக்கூறி போலி நாணயத் தாள்களை விற்பனை செய்த நால்வர் கண்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி நகரில் வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவரிடம் குறித்த நபர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். எனினும் இது தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் இந்த நால்கரையும் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்த நாணயக் குற்றிகளையும் கைப்பற்றினர். மேலும் அவர்களிடம் இருந்து எட்டு கையடக்க தொலைபேசிகளும் நவீன ரக மோட்டார் வண்டி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை கண்டி [illegible] எடுக்கப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி



சாவல்கட்டு கிராம அலுவலர் சந்திரராசா அவர்களின் அன்புத் தந்தை மருதர் வைரமுத்து (ஐயாத்துரை மாஸ்ரர்) அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய்.

கனகராஜா குடும்பம்

(27391)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**English, நல்லூர்**

பேச்சு ஆங்கிலம், IELTS தனித்தனியாகவோ குழக்களாகவோ கற்பிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு

0777444225


## ஊசிமருந்துக்குத் தடை

கொழும்பு, டிசெ. 31

ஊசிமருந்து குப்பிகளின் பாவனையை தற்காலிகமாகத் தடை செய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. களுபோவில போதனா வைத்தியசாலையில் ஊசி மருந்துக் குப்பியொன்றிலிருந்து கண்ணாடித் துண்டொன்று கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து நாட்டிலுள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும் இவ்வகை மருந்தை உடனடியாகத் தடை செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரியவருகிறது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டே இந்த வகை ஊசிமருந்துகள் நாட்டில் பாவனைக்கு விடப்பட்டிருந்தன. எனினும் தற்போது அவற்றைத் தடைசெய்ய தீர்மாணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(16)


## நாயைக் காணவில்லை

டாசன் (கட்டை இனம்) தனி கறுப்பு நிற நீளமான காது உள்ள நாய் ஒன்று கன்னாதிட்டி சந்திப் பகுதியில் நேற்று மதியம் 30.12.2012 அன்று காணமல் போய்விட்டது. கண்டவர்கள் கீழ்க் காணும் தொ. பே. இல. தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0773503616, 0212229544

## வீட்டு உதவியாள் தேவை

சமைக்கத் தெரிந்த வவுனியாவில் தங்கி இருந்து ஒரு தனி நபருக்கு உதவி புரிவதற்கு 35 வயதுக்கு மேற்பட்ட ஒரு ஆண் தேவை. 3 வேளை சாப்பாட்டுடன், தங்குமிட வசதியுடன் நாளுக்கு 250/= கொடுக்கப்படும்.

தொடர்பு : 077 3460 440

(27486)(6.11)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதிகூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லாத மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன் ஒ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி.

## மரண அறிவித்தல்

### செல்வி சிவலோகநாயகி வேலுப்பிள்ளை



இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவலோகநாயகி வேலுப்பிள்ளை கடந்த 28.12.2012 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் வேலுப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், Dr. சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, சிவயோகம் (இளைப்பாறிய ஆசிரியை), சிவஞானம் (தட்டெழுத்தாளர்), Dr.சிவபாதசுந்தரம், Dr. சிவக்கொழுந்து (சிவகௌரி), Dr. சிவகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr.சிவகாமசுந்தரி, .இராசலிங்கம் (Telephonist), Dr.S.S.அருளானந்தம், Dr. மோகன், சித்திராபதி (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சரவணபவானந்தன் (பாரிஸ்டர்), Dr. திருமுருகானந்தன், அரவிந்தன் (பொறியியலாளர்), ஜனார்த்தனன் (பொறியியலாளர்), Dr. அன்னவதனி (பல்வைத்தியர்), சுந்தரவதனி (விவசாய பீடம்), கஜவதன் (பொறியியலாளர்), டிலினி, டிலானி, தனுஷா, நிரோஷா, ஆய்ஸா, சேரா, சிவகுமாரன், நிமலன் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கல்வயல், சாவகச்சேரி. (16001)(3.14) செல்வி வே. சிவஞானம் (சகோதரன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய அதிபர்
கு. திருச்செல்வம் அவர்களின்
மாமனார் மருதர் வைரமுத்து(J.P.)
அவர்களின் மரணச்செய்தி கேட்டு
துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவுக் கழகம்
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

(27488)(3.14)

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை கோட்டக் கல்வி
அலுவலர் ச. ஸ்ரீராமச்சந்திரன்
அவர்களின் அன்புத்தாயார்
சச்சிதானந்தம் பார்வதிப்பிள்ளை
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்ததிக்கின்றோம்.

**கோட்டக் கல்வி அலுவலர்கள்,**
**வடமாகாணம்.**

(C/6172)(6.11)

## விற்பனைக்கு

20l. கொள்ளளவும் 5Kg கேக் அடிக்கும் மெசினும் (Cake beater) ,ஹொட் கபேட் (Hot Cupboard) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 07777 41750

(27481) (6.7.4)

## சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்

கட்டடத்துக்கு சட்டறிங் உடன் அடித்துக் கொடுக்கப்படும்,

ஒரு ஸ்குயர் ரூபா-7000 மட்டும்.

தொடர்பு: 0778167864

(27484) (6.7.4)

## துயர் பகிர்கின்றோம்

வேலணை மத்திய கல்லூரியின் நான்கு தசாப்த நாயகன்
E.K. நாகராஜா பிரிவின் வலிபோக்க வல்லமை தாருமையா!



வேலணை மத்திய கல்லூரி விருட்சத்தின் தளிர்
வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
ஒழுக்கத்தில் உண்டென்று முரசறையும் நாகராஜா
பக்திக்கு பயம்தனை முலாமிட்டு
கொதியர் என்ற சொல்லில்
பயபக்தியினை உணர்த்தி மெய் அன்பினை
கொட்டி வளர்த்த E.K
உங்கள் அணைப்பில் வலியைத்துடைத்தோம்
நல்வழியைத் தெரிந்தோம் உங்கள் பிரிவின் வலிபோக்க
வல்லமை தாருமையா!
ஆத்மா சாந்தியடைய சிவகாமி சமேத நடராஜப் பெருமானின்
பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்லூரிச் சமூகம், வேலணை மத்திய கல்லூரி.

(27478)(3.14)

# கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்



## அல்பேட் பீரிஸ் கனிஸ் தயான்


ஆருயிர் நண்பனே
உன் உயிர் பிரிய - இங்கு
யார் செய்த பாவமோ - எமக்கு
ஏன் இந்த சோகமோ

இவரின் பிரிவால் துயருறும்
கப்பினஸ் குறூப்
நண்பர்கள்.
பாஷையூர்.

(27482)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தர்மலிங்கம் தர்மேந்திரன்

## (பாபு)

(தர்ம்சன்ஸ் உரிமையாளரும், கட்டட ஒப்பந்தக்காரரும்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாபு என்று அன்பாக அழைக்கப்படும் தர்மலிங்கம் தர்மேந்திரன் 29.12.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான பூலோகராசா -திரவியம் தம்பதியரின் மருமகனும்,யோகராணியின் (பேபி) ஆசைக் கணவரும், ருஜராவ் (தஜி), பிரணவராவ் (யோஜி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற திலகேந்திரன் மற்றும் ஸ்ரீ ஜமுனாதேவி (ஜமுனா - லண்டன்), வசந்தி (லண்டன்), விஜேந்திரன் (இராசன் - லண்டன்), யுவனேந்திரன் (யுவன் - லண்டன்), ரேணுகா (ரேணு - லண்டன்), இலகேந்திரன் (கண்ணன் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வதனி (லண்டன்), கணேஷானந்தன் (லண்டன்), கிரிதரமோகன் (கிரி - லண்டன்), பிறேமிளா (லண்டன்), உஷாஜினி (லண்டன்), உருத்திரேஸ்வரன் (லண்டன்), ருக்ஷா (லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும், சுஜேந்தர், துஷேந்தர், சுமதி - புவனேந்திரன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், வேலரசி -கோதண்ட பாணி, கவியரசி, மகாலயன், தர்ஷன், பரண், கோகுலன், பிரியசி ஆகியோரின் அன்பு மாமனும், பைரவி, ஆரணன், நதினி, தவின், இஷானி ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2012) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, கதிரவேல் ஒழுங்கை,
கனகரட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(27477) (5.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டம்

வவுனியா, டிசெ.31

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவை யொட்டியும் சாந்தன், யூட்சுசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றது. மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தத் தொடரின் ஆட்டங்கள் மீளவும் ஆரம்பித்துள்ளன. இதில் இன்று திங்கட் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணியின் விவரம் வருமாறு:-

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி எதிர் நியூ பைட் விளையாட்டுக் கழகம். (ங-23)



வவுனியாவில் உள்ள மாற்றுத் திறனுள்ள வீரர்களுக்கு, றைண்டி கப் நிறுவனம் கரம், மேசைப்பந்தாட்டம், சதுரங்கம் போன்ற உள்ளக விளையாட்டுப் பயிற்சிகளை வழங்கிவருகிறது. அதில் கரம் விளையாட்டில் ஈடுபட்டுள்ள வீரர்கள்.

## கரப்பந்து இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.31

நியூ வோரியர்ஸ் விளையாட்டுக்கழகம் தனது முதலாவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை கலந்துகொள்ளவுள்ளார். (ங-23)

# மீசாலை என்.சி.சி., சரசாலை இராணுவம் மட்டுவில் கண்ணகை வெற்றியீட்டின

யாழ்ப்பாணம், டிசெ.31

சரசாலை தெற்கு இலந்தைத் திடல் இளைஞர் கழகத்தினரால் தென்மராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு இடையே கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று நடத்தப்பட்டு வருகிறது. 7 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட லீக் முறையிலான இந்த மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மீசாலை என்.சி.சி அணியும், மட்டுவில் கண்ணகை அணியும், சரசாலை இராணுவ அணியும் வெற்றியீட்டின.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மீசாலை என்.சி.சி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சரசாலை இராணுவ அணி மோதிக் கொண்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றுத் துடுப்பெடுத்தாடியது மீசாலை என்.சி.சி. அணி. அதிரடித் துடுப்பாட்டத்தில் இறங்கிய மீசாலை என்.சி.சி. அணியின் ஆவேசத்தில் அதிர்ந்து போனது சரசாலை இராணுவ அணி. ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கு சராசரியாக 10 ஓட்டங்கள் என்ற வீதத்தில் விளாசினர் மீசாலை வீரர்கள். இதனால் மீசாலை என்.சி.சி. அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது.

51 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனத் துடுப்பெடுத்தாடிய சரசாலை இராணுவ அணியினர் நம்பிக்கையோடு ஆடினர். ஆயினும் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் போதியளவு ஓட்டங்களை குவிக்கத் தவறியதால் நூலிழையில் வெற்றிவாய்ப்பைத் தவற விடவேண்டிய நிலை ஏற்பட்டது. சரசாலை இராணுவ அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

**மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி 68 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.**

இதனால் மீசாலை என்.சி.சி. விளையாட்டுக்கழக அணி 1 ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

இன்னொரு ஆட்டத்தில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் கலைவாணி விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடியது மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணி. அந்த அணியின் வீரர்கள் அனல்பறந்த துடுப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பந்துகள் சிக்ஸர்களாகப் பறந்தன. இதனால் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 108 ஓட்டங்களை கண்ணகை அணி பெற்றுக் கொண்டது.

109 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கைத் துரத்தத் தொடங்கியது மட்டுவில் கலைவாணி விளையாட்டுக் கழக அணி. ஆயினும் அந்த அணியால் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதனால் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி 68 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணியும் சரசாலை இராணுவ அணியும் ஒன்றை ஒன்று எதிர்கொண்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் அம்பாள் விளையாட்டுக்கழக "ஏ" அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

66 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சரசாலை இராணுவ அணியினர் 3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. (ங-23)


## '786' வெற்றி

வவுனியா, டிசெ.31

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்சுசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்குமான 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில், '786' விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியது.

இந்த ஆட்டத்தில் '786' விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஆரம்பத்தில் இருந்தே அபாரமாக ஆடிய 786 விளையாட்டுக் கழக அணி முன்னிலை பெற்று வந்தது. எனினும் ஈகிள்ஸ் அணியும் கோல்களை அடிக்கத் தவறவில்லை. இறுதியில் 3:2 என்ற கோல் கணக்கில் '786' அணி வெற்றி பெற்றது. (ங-23)



சுண்டுக்குழி கிறீன் பீல்ட் [illegible] தேசிய, மாகாண, மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய கராத்தே வீரர்கள், [illegible] நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் பயிற்றுனர் சென் சேய் துசானந்தன் வீராங்கனை ஒருவருக்கு பதக்கம் அணிவித்தார்.

## கரம் போட்டியில் பல்கலை சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ.31

கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலருக்குமான கரம் சுற்றுப் போட்டித் தொடரை யாழ். மாவட்ட கரம் சங்கம் நடத்தியிருந்தது. இதில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வென்று யாழ்.பல்கலைக் கழக அணி சம்பியனானது.

இந்த இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரு அணிகளும் சமபலத்தோடு மோதிக் கொண்டன. இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றதால் எந்த அணி வெல்லப் போகிறது என்பதை கடைசி நிமிடம் வரை ஊகிக்க முடியாதிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ்.பல்கலைக்கழக வீராங்கனைகள் 3:2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகினர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானிடம் பணிந்தது இந்தியா



முதலாவது ஒருநாள் போட்டியில் அபாரமாக விளையாடி இந்திய அணியை 6 இலக்குகளால் சொந்த மண்ணில் மண்கௌவவைத்தது பாகிஸ்தான் அணி.

சென்னை சிதம்பரம் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார்.

இதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சார்பில் கம்பீரும், சேவாக்கும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். எதிர்பாராத விதமாக இந்திய அணிக்கு அதிர்ச்சி அளிக்கும் விதத்தில் பாகிஸ்தான் வீரர்களின் பந்துவீச்சு அமைந்திருந்தது.

நான்காவது பந்துப்பரிமாற்றத்தில் வெறும் 4 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில், சேவாக் யுனைத் கானின் பந்துவீச்சில் 'போல்ட்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். தொடர்ந்து அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் கம்பீரும் 8 ஓட்டங்களுடன் இர்பானின் பந்துவீச்சில் 'போல்ட்' செய்யப்பட்டு பவிலியன் திருப்பப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய விராட் ஹோக்லி மற்றும் யுவராஜ் சிங் ஜோடி அடுத்தடுத்து ஆட்டமிழக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். ஹோக்லி ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும், யுவராஜ் சிங் 2 ஓட்டங்களுடனும், யுனைற்றட் கானினால் நேரடியாக 'போல்ட்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய றோகித் சர்மா, சுரேஸ் ரெய்னா அணியின் இக்கட்டான நிலையை உணர்ந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாட முற்பட்டனர்.



எனினும் அந்த ஜோடியாலும் நிலைத்து நிற்க முடியவில்லை.

ரோகித் சர்மா 4 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் யுனைற்றட் கானின் பந்துவீச்சில் கபீஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

9.4 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளைப் பறிகொடுத்து வெறும் 29 ஓட்டங்களை மாத்திரம் பெற்று இந்திய அணி தடுமாறிக்கொண்டிருந்தது.

அடுத்ததாகக் களமிறங்கிய அணித்தலைவர் டோனி, ரெய்னாவுடன் இணைந்து அணியைச் சரிவிலிருந்து மீட்கப் பாடுபட்டார். மறுமுனையில் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த ரெய்னா 43 ஓட்டங்களுடன் அரைச் சதத்தைத் தவறவிட்ட நிலையில் கபீஸின் பந்துவீச்சில் 'போல்ட்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

33.2 பந்துப்பரிமாற்றங்களில் 102 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் இந்திய அணி 6 இலக்குகளை இழந்து, இக்கட்டான நிலையில் இருந்தது.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் தடுப்பாட்டத்தை மாத்திரமே இந்திய அணியால் வெளிப்படுத்த



முடிந்தது.

ரெய்னாவின் இழப்பைத் தொடர்ந்து களம் புகுந்த அஸ்வின் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பந்தை எல்லைக்கோட்டைத் தாண்டி அடித்து இந்திய இரசிகர்களுக்கு சற்று உற்சாகத்தைக் கொடுத்தார்.

இதுவரை தடுப்பாட்டத்தை மட்டுமே வெளிப்படுத்தி வந்த அணித்தலைவர் டோனி, ரெய்னாவின் இழப்பை அடுத்து விஸ்வரூபமெடுத்தார்.

அஸ்வின் மறுமுனையில் டோனிக்குக் கைகொடுக்க பாகிஸ்தானின் பந்துகள் மெல்ல மெல்ல எல்லைக்கோட்டை நோக்கி நகரத் தொடங்கின. 118 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக சதம் கடந்தார் டோனி.

இறுதியில் 50 பந்துப்பரிமாற்றங்களில் 227 ஓட்டங்களை மிகவும் சிரமத்தின் மத்தியில் எட்டியது இந்திய அணி. மறுமுனையில் 31 ஓட்டங்களுடன் அபாரமாக ஆடிய அஸ்வினும், டோனி (113) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

228 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்கை நோக்கி பாகிஸ்தான் அணியின் மொஹமட் கபீஸும், நசீரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். எனினும் பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது.

இந்திய அணியின் முதலாவது பந்துப்பரிமாற்றத்தை வீசிய புவனேஸ்வர் குமாரின் முதலாவது பந்திலேயே கபீஸ் 'போல்ட்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து களமிறங்கிய அஸார் அலியும், நசீரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

எனினும் அஸார் அலி 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் புவனேஸ்வர் குமாரின் பந்தில் ரோஹித் சர்மாவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். தொடர்ந்து வந்த யுனிஸ்கான் நிதானமாக ஆடி அரைச்சதம் கடந்தார்.

30.3 பந்துப்பரிமாற்றங்களில் 133 ஓட்டங்களைப் பாகிஸ்தான் அணி பெற்றபோது, யுனிஸ்கான் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்திய அணியின் வெற்றிக்கனவை முற்றுமுழுதாகவே நசீர், யுனிஸ்கான் ஜோடி தகர்த்தெறிந்துவிட்டது. இலகுவான வெற்றி இலக்கை நோக்கித் தொடர்ந்து நகர்ந்த பாகிஸ்தான் அணி 48.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய நசீர் 101 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தார். அவருடன் சொய்க் மலிக்கும் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இறுதிவரை களத்திலிருந்தார்.

ஆட்டநாயகனாக இந்திய அணியை சரிவிலிருந்து ஓரளவு மீட்ட



அணித்தலைவர் டோனி தெரிவுசெய்யப்பட்டார். 3 ஆட்டங்கள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் அணி 1:0 என்ற நிலையில் முன்னிலை வகிக்கிறது. (ங-16)

# ஹொக்கியில் பாகிஸ்தான் சம்பியன்

ஆசிய வெற்றிக்கிண்ண ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் பரபரப்பான இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி, இந்தியாவை வீழ்த்தி சம்பியனானது.



கட்டார் தலைநகர் டோகாவில் ஆசிய வெற்றிக்கிண்ண ஹொக்கி போட்டிகள் நடைபெற்றன. இதில் இந்தியா, பாகிஸ்தான், ஓமன், சீனா, ஜப்பான், மலேஷியா உள்ளிட்ட 6 நாடுகள் பங்கேற்றன.

நேற்று முன்தினம் நடந்த இறுதி போட்டியில் இந்தியாவும், பாகிஸ்தானும் மோதின. இதில் நடப்புச் சம்பியனான இந்தியாவை, பாகிஸ்தான் 5-4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஆட்டத்தின் முதல் பாதியில் இந்தியா 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. பின்னர் இரண்டாவது பாதியின் 42 ஆவது நிமிடத்தில் பாக்.ஒரு கோல் அடித்து 2-2 என சமன் செய்தது.

இதையடுத்து உற்சாகமடைந்த பாகிஸ்தான் அணி அடுத்த 6 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து 3-2 என முன்னேறியது.

இதற்கு இந்தியாவும் பதிலடியாக 55 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து 3-3 என சமன் செய்தது.

பின்னர் 58 ஆவது நிமிடத்தில் பாகிஸ்தான் பதிலடி கொடுக்க 4-4 என்ற நிலை இருந்தது. இறுதியாக பாகிஸ்தானின் முகமது இம்ரான், 64 ஆவது நிமிடத்தில் அடித்த கோலால் பாகிஸ்தான் 5-4 என்ற கோல் கணக்கில் மீண்டும் முன்னிலை பெற்று சம்பியனானது. (ங)

# சச்சினுடன் இணைய ஆசை

இந்திய அணியின் புதுமுக வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார், தான் சச்சினுடன் இணைந்து விளையாட ஆசைப்படுவதாக தெரிவித்துள்ளார்.



சமீபத்தில் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இது குறித்து புவனேஷ்வர் குமார் அளித்த பேட்டியில், டெண்டுல்கரின் ஓய்வு குறித்து தொலைக்காட்சியில் நான் பார்த்த போது, அவருடன் இணைந்து விளையாடும் வாய்ப்பை இழந்து விட்டதாக முதலில் நினைத்தேன். அதன் பின், டெஸ்ட் போட்டிகளில் இணைந்து விளையாட இன்னும் வாய்ப்பு இருப்பதை உணர்ந்தேன். அது விரைவில் நடக்கும் என்று நம்புகிறேன் என்றார். (ங)

# டோனிக்கு தேவை ஓய்வு



டோனி அணித்தலைவர் பொறுப்பிலிருந்து சிறிது காலம் ஓய்வு பெற்றுத் தனது துடுப்பாட்டத் திறமையை அதிகப்படுத்திக்கொள்ளலாம் என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் கவாஸ்கர் அறிவுரை கூறியுள்ளார்.

இந்த ஓய்வை டோனி உடனே எடுக்க வேண்டுமென்பதில்லை. ஆஸ்திரேலியாத் தொடர் முடிந்த பின்னரோ அல்லது 2013 ஆம் ஆண்டின் பிற்பாதியிலோ அவர் இந்த ஓய்வை எடுத்துக்கொள்ளலாம்.ஏனெனில் அவரிடம் மறைந்த முன்னாள் வீரர் மன்சூர் அலிகான் பட்டோடியைப் போன்ற திறமை உள்ளது. அது அணிக்கு பலன் தரும். மேலும் எதிர்காலத்தில் நிரந்தரமாக அணிக்குத் தலைவராகும் வாய்ப்பு இருப்பதாக ஹோக்லிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் ஹோக்லி இன்னமும் சிறப்பாகச் செயற்படும் வாய்ப்பும் உண்டு என்று கவாஸ்கர் தெரிவித்துள்ளார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை நேசித்தார் ரொனி கிரேய்க்

"இங்கிலாந்து அணியின் முன்னாள் சகல துறை வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ரொனி கிரெய்க் இலங்கையை மிகவும் நேசித்தார்" என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

1995 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில், மெல்பேர்ணில் வைத்து இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பந்தை எறிவதாக குற்றஞ்சாட்டப்பட்டபோது ரொனி கிரெய்க் இலங்கைக்குத் தனது ஆதரவை வழங்கியிருந்தார்.

அக்காலத்தில் இலங்கையை அவர் வழிநடத்தியுமிருந்தார்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை அணியே வெற்றிகொள்ளும் என முதன்முதலில் தெரிவித்தவர் ரொனி கிரெய்க்.

இந்தியன் பிறிமியர் லீக்கின் பிழையான விடயங்களை ரொனி கிரெய்க் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்" என அவர் மேலும் தெரிவித்தார். (ந)


**தொழிற் கல்வி**

உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் உயர்வருமானம் தரும் தொழிற்கல்வி

* கணினி திருத்துதல் -computer Hardware Engineering
* மின் இணைப்பு - Electricle Wiring

குறுகிய காலத்தில் குறுகிய முதலீட்டில் உடனடித் தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்தும் சான்றிதல் கற்கை நெறி (2013 ஜனவரி மாதத்துக்கான புதிய பிரிவுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளுக்கு முந்துங்கள்)

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
0212224728, 0777444225

**CHEMISTRY COURT**
80, ARASADY ROAD, JAFFNA.
இரசாயனவியல்
2015 A/L
ஆரம்பம்: 31.12.2012
நேரம்: 4.00pm
(தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்)
(சி/5106)(3.14)
By - RAJAH

Come & Join the New Year's Eve Dinner Dance with your Family & Friends.






Hotel Green Grass
31/12/2012 8.00 pm till Latte
0777807568 / 021 222 4385

**விசேட வகுப்புக்கள்**
நடைபெற உள்ள [illegible] பரீட்சைகளுக்கானது புதன் (2/1), வியாழன் (3/1), திங்கள் (7/1), செவ்வாய் (8/1) நாள்களில் காலை 9.00 தொடக்கம் 3.00 மணிவரை [illegible]

**SCHOOL OF CHEMIS-**
College Lane, Manipay | Nanthavvil Amman Road Kokuvil
**CHEMISTRY 2015**
ஆரம்பம்
மானிப்பாய் 02.01.2013 4.30Pm
தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
கொக்குவில் 02.01.2013 3.15Pm
BY- து.பிரதீபன்

**யூனிவேர்சல்** கந்தர்மடம்
A/L 2015 கலை, வர்த்தகம்
ஆரம்பம் தை 5
சனி காலை 8.30
தரமான கல்விக்காக நீங்கள் எம்முடன்



**நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு**





இருபதுக்கும் மேற்பட்ட வடிவமைக்கப்புக்களைக் கொண்ட நிலப் பதிப்புக் கற்களை யாழ், கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்
பிரணவன் என்ரபிறைசஸ் இல:-365 பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) T.P - 0773818799

**புதிய முகவரி**
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480

**THE SCIENCE POINT**
கன்னாதிட்டி வீதி, யாழ். நகர்
PHYSICAL
Wed 5- 6.00, Sun 3.30- 4.30
ஆரம்பம் - 02.01.2013 Wed 5.00
Sat, Sun 11.00- 12.15
INORGANIC
Sat, Sun - 12.30 - 1.30
ஆரம்பம் 05.01.2013 சனி 12.30
BY- அன்பு

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி.யாழ்.
A/L 2015
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:6.1.2013
காலை 9 மணி
(முதல் அனுமதி பெறும் 100 மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பாடத்திட்டத்திற்கு அமைவாக
**கணித விவேக வழிகாட்டி**
ஒழுங்குபடுத்தப்பட்ட தெளிவான பாடங்களுடன் இலகுவான வசனநடையில் தொகுக்கப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்களையொத்த பயிற்சி வினாக்களுடன், விடைகள் அடங்கிய பதிப்பு
தொகுப்பு : ஐ.எல்.எம். ஸபான்
விலை 400/-
வெளியீடு: யுனிலங்காஸ்–077 6258778
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

**A/L 2015** NEC
கலை, வர்த்தக
கணித உயிரியல் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**DCM** யாழ்.நகர்
A/L - 2015 வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 05.01.2013
சனி - காலை - 8.00
பொருளியல் S.வரதராஜன்
கணக்கீடு P.பகீரதன்
வணிகக்கல்வி V.முரளி
A/L 2015

**Infotech** Computer Education
# 3, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna. Phone: 021 492 2813
எமது பயிற்சி மையத்தில் கணினிப் பாடநெறிகள் அனைத்திற்கும் 70% கட்டணக்கழிவினை வழங்குகின்றோம்.
ஆங்கில வகுப்பு
In-house English Language Training
Foundation | Intermediate | Advanced
Duration 234 Hrs
ஆரம்பம்: 02.01.2013 புதன்கிழமை பி.ப 3.30
போதனாசிரியர்
Mr S.Maheswaran
Teacher of English
Kokuvil Hindu College
O/L பரீட்சையெழுதிய அனைத்து மாணவர்களுக்கும்
Photo Shop / Internet&email
முற்றிலும் இலவசம்
# 3, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna. Phone: 021 492 2813



**VIJI BEAUTY PARLOUR**
2/1, Rajendra Road, Jaffna.





அழகியல் கலைப் பயிற்சி வகுப்புக்கள்
2 ஆம் பிரிவு ஆரம்பம்.
22 பாடங்கள் அடங்கியது.
பொக்கே கட்டுதல் (Boquet) (Fondant)
* பொண்டன் (Fondant)
* ஐசிங்
* ஐசிங் பூக்கள்
* பிறந்தநாள் ஐசிங்
* Screen Printing [மிகக் குறைந்த கட்டணத்தில்]

போன்ற பயிற்சிகளும் விசேட விலைக் கழிவுடன் இமைசீர் செய்தல் 100 ரூபாவுக்கும், 2500 பேசியல் 1000 ரூபாவுக்கும் செய்யப்படும்.
(C/5163)(6.11)

**இச்சலுகை ஜனவரி 30 மட்டுமே**

மேற்குறிப்பிட்ட பயிற்சி வகுப்புக்கள் யாவும் இந்தியாவில் பயிற்சி பெற்ற பியுட்டிசனினால் (Beautition) பயிற்சியளிக்கப்படுகிறது.
முகக்கறுப்பெடுக்கும் கிறீம், முகக்கலருக்கு ஏற்ற பவுடர்களும் வழங்கப்படும். மணப்பெண் அலங்காரமும் மேற் குறிக்கப்பட்ட அனைத்தும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

2/1, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
077 8501208, 0750699728

Mrs.Vijtha Clarance
(Diploma in Cosmetology (India), Diploma in Advanced Bridal Make-Up (India)).Jaffna.



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
**ஹோட்டல் நொக்கியாவின்**






புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்





இப்புதிய ஆண்டில் உங்கள் இல்லத்தில் உண்டு மகிழ
எமது ஸ்பெஷல்
மிக்ஸ்பிரைட்றைஸ், சிக்கன் டெவல், சிக்கன் சுவிட் & சவர் அனைத்தும்


* 5 அங்கத்தவர்களுக்கு -1600/=
* 3 அங்த்தவர்களுக்கு -1100/=
* 2 அங்கத்தவர்களுக்கு -800/=
* 1 அங்கத்தவர்களுக்கு -500/=

மாலை ஸ்பெஷல்
இந்தியன் சிக்கன் பராட்டா கொத்துடன் சிக்கன் குருமா -320/=
(C/5139)(9.14)
ஓடர் அனைத்தும் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்
ஹோட்டல் நொக்கியா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.